www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

அக்டோபர் 2008
ரூ. 7.00



## இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம்:

# துரோகத்தின் வெற்றி!

படிப்பகம்

www.padippakam.com

# சட்டத்தை மதிக்காத எஸ்.ஆர்.எஃப். நிர்வாகத்திற்கு போலீசு பாதுகாப்பு!

## போராடிய தொழிலாளிகளுக்கு தடியடி, கைது!

கும்மிடிப்பூண்டியிலுள்ள எஸ்.ஆர்.எஃப். ஆலைத் தொழிலாளர்கள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக "எஸ்.ஆர்.எஃப். புதிய ஜனநாயகத் தொழிலாளர் சங்கம்" என்ற பெயரில் அணி திரண்டனர்.

சங்கம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரையிலும் சங்கத்தை உடைக்கப் பல்வேறுவிதமான சதிகளை நிர்வாகம் கைக்கொண்டு வருகிறது. சங்கம் தொடங்கியதற்காக 11 பேரை மத்தியப் பிரதேசத்துக்கு பணியிட மாற்றம் செய்தது; சங்க நிர்வாகிகளை "தொடர்பணி" என்ற பெயரில் இராஜஸ்தான், கேரளா, கோயமுத்தூர் என ஆலையின் இதர கிளைகளுக்கு விரட்டி, மாதக்கணக்கில் ஊருக்கு வர முடியாதபடி செய்தது, பொய்க் குற்றம் சுமத்தி பணியிடை நீக்கம் செய்தது, பணிநீக்கம் செய்தது - என நீளும் நிர்வாகத்தின் சட்டவிரோத பழிவாங்கும் நடவடிக்கைகளைப் பட்டியலிடப் பக்கங்கள் போதாது.

இந்நிலையில் சங்க நிர்வாகிகளை பாதுகாக்கப்பட்ட தொழிலாளியாக அறிவிக்கக் கோரி, தொழிலாளர் நல ஆணையரிடத்தில் தொழிற் தாவா தாக்கல் செய்யப்பட்டிருக்கும் செய்தி அறிந்ததுதான் தாமதம் - உடனே செப்டம்பர் 2-ந் தேதியன்று சங்க நிர்வாகிகள் அனைவரையும் பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டது, நிர்வாகம்.

சங்க நிர்வாகிகளைப் பதம் பார்த்த இதே ஆயுதம் நாளை நம்மையும் நோக்கிப் பாயும் அபாயத்தை உணர்ந்து, ஆலையில் பணி புரிந்து கொண்டிருந்த தொழிலாளர்கள், சங்க நிர்வாகிகளின் பணியிடை நீக்கத்தை ரத்து செய்யக் கோரி செப். 4 அன்று ஆலைக்குள் திடீரென உள்ளிருப்புப் போராட்டத்தைத் தொடங்கினர். தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு போராடுவதைக் கண்டு அரண்ட நிர்வாகிகளும் கைக்கூலிகளும் கழிவறைக்குள் தஞ்சம் புகுந்தனர்.

உள்ளிருப்புப் போராட்டத்தை முறியடிக்க உள்ளூர் போலீசை வரவழைக்க நிர்வாகம் முயன்றது. இதனை அறிந்த புதிய ஜனநாயகத் தொழிலாளர் சங்கத் தலைமை, உள்ளூர் மக்களை அணி திரட்டி வந்து, ஆலைக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதனையடுத்து, ஆலை நிர்வாகம் மாவட்ட போலீசு கண்காணிப்பாளரின் ஆதரவோடு, கலவரத் தடுப்பு போலீசுப் படையை இறக்கியது. அப்படை ஆலைக்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த மக்களையும், தொழிலாளர்களையும் மட்டுமின்றி, ஆலைக்கு உள்ளேயும் புகுந்து காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்தியது. இப்போராட்டம் தொடர்பாக 125 தொழிலாளர்களைக் கைது செய்த போலீசு, அவர்களுள் 13 முன்னணி தொழிலாளர்கள் மீது பொய் வழக்குப் போட்டுச் சிறையில் அடைத்தது.




13 தொழிலாளர் மீதான பொய் வழக்கைத் திரும்பப் பெறு, தொழிற்சங்கம் துவங்கியதிலிருந்து பணியிடை நீக்கம், பணிநீக்கம் செய்யப்பட்ட 30 தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்து, செப். 30-க்குள் அனைத்துப் பிரச்சினைகளையும் பேசித் தீர் - என்ற கோரிக்கைகளை முன் வைத்து சங்கம் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றது.

கடந்த 06.09.08 அன்று மாலை கும்மிடிப்பூண்டியில் கண்டனக் கூட்டமும்; அதனைத் தொடர்ந்து 08.09.08 அன்று சென்னை - மெமோரியல் ஹால் அருகே 500 பேருக்கும் மேற்பட்டோரின் பங்கேற்புடன் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டன.

தொழிலாளிகளின் உறுதியான போர் குணத்தை கண்டு திகைத்துப் போன மாவட்ட அரசு நிர்வாகம் ஆர்.டி.ஓ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. தொழிலாளி - ஆர்.டி.ஓ. - நிர்வாகம் என முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

13 தொழிலாளிகளை நிபந்தனை பிணையில் விடுவிக்க ஆலை முதலாளியே சம்மதித்துவிட்ட போதிலும், "12,000 ரூபாய் சம்பளம் வாங்குற நீ எதுக்கு ஸ்டிரைக் பண்ற?" என கேள்வியெழுப்பி பிணை தர கும்மிடிப்பூண்டி மாவட்ட அமர்வு நீதிமன்றமும், சென்னை உயர்நீதி மன்றமும் மறுத்துவிட்டன.

எஸ்.ஆர்.எஃப். நிர்வாகம், தொழிலாளிகளின் தொழிற்சங்க உரிமையை நசுக்குவது ஒரு தனிப்பட்ட ஆலையின் பிரச்சினை அல்ல; இது ஒட்டு மொத்த தொழிலாளிகளின் உரிமைப் போராட்டங்களை நசுக்கும் முதலாளிகளின் வர்க்க நெறியின் ஒரு பகுதி என்பதை விளக்கி, கும்மிடிப்பூண்டி சிப்காட் மற்றும் சுற்று வட்டாரத்திலுள்ள ஆலைத் தொழிலாளிகளிடமும் தெருமுனைக் கூட்டங்கள், ஆலைவாயிற் கூட்டங்கள் மூலம் ஆதரவை திரட்டி அடுத்த கட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகிறது, எஸ்.ஆர்.எஃப். புதிய ஜனநாயகத் தொழிலாளர் சங்கம்.

**தகவல்:**
**எஸ்.ஆர்.எஃப்.**
**புதிய ஜனநாயகத்**
**தொழிலாளர் சங்கம்,**
**கும்மிடிப்பூண்டி.**


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 23

**இதழ் 12**

அக்டோபர் 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி : 94446 32561


## உலக முதலாளித்துவத்தின் பெருந்தோல்வி!

"கம்யூனிசம் தோற்றுவிட்டது; தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம்தான் ஒரே தீர்வு!" என்று எக்காளமிட்ட முதலாளித்துவம், அனைத்துலக முதலாளித்துவத்தின் தலைமைப் பீடமான அமெரிக்காவிலேயே முதுகெலும்பு முறிந்து மரணப் படுக்கையில் வீழ்த்தப்பட்டு விட்டது. அரசின் தலையீடற்ற சூதாட்டப் பொருளாதாரக் கொள்ளை; கட்டுப்பாடற்ற ஊகவணிகச் சூறையாடல்; எல்லையில்லா தில்லுமுல்லு - மோசடிகள் - இவற்றால் விபரீத விளைவுகள் நேரிடும் என்று தெரிந்தே 'அப்படியெல்லாம் நடக்காது; எல்லாம் எங்களுக்குத் தெரியும்' என்ற ஆணவத்தோடு செயல்பட்ட தனியார் ஏகபோக நிதிக் கழகங்கள், "சப் பிரைம் லோன்" எனும் தரமற்றவர்களுக்கு தரப்படும் கடன்களால் ஆதாயமடைந்த பின்னர், நெருக்கடி தீவிரமாகி அடுத்தடுத்து திவாலாகி குப்புற விழுந்து கிடக்கின்றன.

கடந்த மாதத்தில் ஃபென்னி மாய், ஃபிரடி மாக் ஆகிய இரு தனியார் ஏகபோக நிதி நிறுவனங்கள் திவாலாகியதும் அமெரிக்க அரசு, அவற்றை அரசுடைமையாக்கி நிதிச் சந்தையை தூக்கி நிறுத்த 20,000 கோடி டாலரைக் கொட்டியது. அதைத் தொடர்ந்து, உலகின் நான்கு பெரும் நிதி முதலீட்டுக் கழகங்களில் ஒன்றான லேமேன் பிரதர்ஸ் நிறுவனமும், பிரபலமான மெரில் லிஞ்ச் நிறுவனமும் திவாலாகின. அதற்கடுத்து, மிகப் பெரிய காப்பீடு நிறுவனமான ஏ.ஐ.ஜி. எனப்படும் அமெரிக்கன் இண்டர்நேஷனல் குருப் நிறுவனம் திவாலாகி, அமெரிக்க அரசு 8500 கோடி டாலரை இழப்பீடாகக் கொடுத்து அரசுடைமையாக்கியது. தற்போது அமெரிக்காவின் 6-வது பெரிய வங்கியான வாஷிங்டன் மியூட்சுவல் மற்றும் மார்கன் ஸ்டான்லி, கோல்ட்மேன் சாஸ் ஆகிய நிதிக் கழகங்களும் திவாலாகி மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலையில் உள்ளன. ஆக, அனைத்துலக முதலாளித்துவக் கும்பல்களின் வர்த்தக மையமான வால் தெருவிலேயே தனியார் நிதி முதலீட்டு வங்கித் தொழிலின் சகாப்தம் முடிவுக்கு வந்துவிட்டது.

அமெரிக்காவை உலுக்கிய இப்பொருளாதார பூகம்பத்தால், அமெரிக்கா மட்டுமின்றி உலகெங்கும் பங்குச் சந்தைகள் சடசடவென சரிந்தன. வங்கி, காப்பீடு, தகவல்-தொழில்நுட்பத் துறை, வீட்டுமனைத் தொழில்களில் பல்லாயிரம் பேருக்கு வேலை பறிபோகும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது. உலகளவில் இன்னும் பல தனியார் வங்கிகளும் காப்பீடு கழகங்களும் திவாலாகும் என்று அபாயச் சங்கு ஊதுகிறது, ஐ.எம்.எஃப். இந்தியாவிலோ "அவுட் சோர்சிங்" செய்யும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. டாலர் மதிப்புச் சரிவினால் ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் கைக்கூலி காங்கிரசு அரசு ரூபாயின் மதிப்பை வேண்டுமென்றே குறைத்துள்ளது.

அரசாங்கத்தின் தலையீடோ, கட்டுப்பாடுகளோ இல்லாவிட்டால், தாராளமயம் சுதந்திரமாகச் செயல்பட்டால் தனியார் முதலாளித்துவம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி பொருளாதாரம் பூத்துக் குலுங்கும் என்று ஏகாதிபத்தியவாதிகள் உபதேசித்து, அதனைத் தீவிரமாகச் செயல்படுத்தினர். ஆனால், கட்டுப்பாடற்ற அத்தாராளமயம், பொருளாதாரத்தை வரலாறு காணாத பெரும் பாதாளத்தில் தள்ளி விட்டுள்ளது. கடைசியில், அமெரிக்க அரசு தலையிட்டுத்தான் முட்டுக் கொடுத்துள்ளது. அமெரிக்க வால்தெரு நிதியாதிக்கக் கும்பல்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் சரிவையும் திவால் நிலையையும் ஈடுகட்டி, பொருளுதாரத்தை நகர்த்திச் செல்ல 70,000 கோடி டாலருக்கு மேல் நிதிச் சந்தையில் கொட்ட அமெரிக்க அரசு தீர்மானித்துள்ளது. ஆனால், "இத்தகைய தற்காலிக ஏற்பாடுகளால் நெருடிக்கடியைத் தீர்க்கவே முடியாது; 1930-களில் நிகழ்ந்த உலக முதலாளித்துவ பெரும் சரிவை விஞ்சும் வகையில் நெருக்கடி முற்றிவிட்டது" என்று முதலாளித்துவ பொருளாதாரவாதிகளே எச்சரிக்கின்றனர். தனியார் ஏகபோகங்களின் கட்டுப்பாடற்ற தாராளமயத்துக்கு காவடி தூக்கிய அவர்கள், இப்போது அரசின் தலையீடும் கட்டுப்பாடும்தான் அராஜகத்தைத் தடுக்கும் என்று அருள்வந்து இறங்கியவர் போல சாமியாடுகின்றனர்.

முதலாளித்துவத்தின் சாபக்கேடாகிவிட்ட இத்தகைய அராஜகங்கள்-முறைகுலைவுகள் ஏதுமின்றி, 1930-களில் மாபெரும் வீழ்ச்சியைச் சந்தித்து அனைத்துலக முதலாளித்துவம் அதலபாதாளத்தில் விழுந்த காலத்திலேயே, அரசின் கட்டுப்பாட்டில் சுயசார்புடன் மாபெரும் பாய்ச்சலுடன் முன்னேறி உலகுக்கே முன்னுதாரணமாகத் திகழ்ந்தது சோவியத் சோசலிசப் பொருளாதாரக் கட்டமைப்பு. அத்தகைய திட்டமிடப்பட்ட சோசலிசப் பொருளாதார அமைப்பு முறை மட்டும்தான், அழுகி நாறும் முதலாளித்துவப் பொருளாதாரக் கட்டமைவுக்கு ஒரே மாற்றாகவும் ஒரே தீர்வாகவும் இருக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

# இந்திய-அமெரிக்க அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தம்:

# துரோகத்தின் வெற்றி!

இந்திய - அமெரிக்க அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தத்தை (123 ஒப்பந்தம்) நிறைவேற்றுவதற்கான இறுதிக் கட்ட பேரங்கள் நடந்து வருகின்றன. சர்வதேச அணுசக்திக் கழகத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே இந்திய அணு உலைகளைக் கண்காணிப்பது தொடர்பான ஒப்பந்தமும்; யுரேனியம் உள்ளிட்ட அணு மூலப்பொருட்களை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாக, அணுமூலப் பொருட்கள் வழங்கும் நாடுகள் இந்தியாவிற்கு விதிவிலக்கு அளிக்கும் ஒப்பந்தமும் நிறைவேறியுள்ள நிலையில், 123 ஒப்பந்தத்திற்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கும் சடங்கு மட்டுமே எஞ்சியிருக்கிறது.

123 ஒப்பந்தம் முழுமையாக நிறைவேறி, நடைமுறைக்கு வரும் நாள் நெருங்க நெருங்க, அதனின் உண்மையான முகமும்; இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றி விட ''அரும்பாடுபட்டு வரும்'' மன்மோகன் சிங் - பிரணாப் முகர்ஜி - எம்.கே நாராயணன் - சிவசங்கர் மேனன் - அனில் ககோத்கர் என்ற ஐவர் கும்பல் கடைந்தெடுத்த பித்தலாட்டப் பேர்வழிகள் என்பதும் அம்பலமாகி வருகிறது.


அமெரிக்க அரசின் வெளிவிவகார கமிட்டி 123 ஒப்பந்தம் குறித்து எழுப்பியிருந்த 45 கேள்விகளுக்கு அமெரிக்க அரசு அளித்துள்ள பதில்களும்; இந்த ஒப்பந்தத்திற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவது தொடர்பாக, அதிபர் புஷ் கொடுத்துள்ள விளக்கங்களும் குறிப்புகளும், இந்த அணுசக்திக் கூட்டுறவு ஒப்பந்தம் என்பது இந்தியா அமெரிக்காவுக்கு எழுதிக் கொடுத்துள்ள அடிமைச் சாசனம் என்பதை அம்பலப்படுத்தி விட்டன. இந்த ஒப்பந்தம் குறித்து எழுப்பப்பட்டு வரும் சந்தேகங்கள், விமர்சனங்களுக்கு, மன்மோகன் சிங் அளித்து வரும் பதில்களும், வாக்குறுதிகளும் வெறும் வெத்து வேட்டு என்பதும் நிருபணமாகி விட்டது.

**மன்மோகனின் காலை வாரிய புஷ்**

''123 ஒப்பந்தம் நிறைவேறினால், இந்தியாவிற்கு யுரேனியத்தை இறக்குமதி செய்து கொள்ளும் உரிமை மட்டுமின்றி, இறக்குமதி செய்யப்பட்ட யுரேனியத்தை (அணுகுண்டு தயாரிப்பதற்காக) மறுசுழற்சி செய்து செறிவூட்டும் உரிமையும்; மின்சாரம் உற்பத்தி செய்யவும், அணுகுண்டு தயாரிக்கவும் பயன்படும் இரட்டை பயன்பாடு கொண்ட தொழில்நுட்பங்களையும், இயந்திரங்களையும் இறக்குமதி செய்து கொள்ளும் உரிமையும் கிடைக்கும்'' என நாடாளுமன்றத்தில் வாக்குறுதி அளித்திருந்தார், மன்மோகன் சிங்.

அமெரிக்க அரசின் வெளிவிவகார கமிட்டி இந்த உரிமைகள் அனைத்தும் இந்தியாவிற்கு அளிக்கப்பட்டுள்ளதா எனக் கேட்டு நான்கு கேள்விகளை எழுப்பியிருந்தது.

அமெரிக்க அரசு இந்த நான்கு கேள்விகளுக்கும் அளித்துள்ள பதிலில், ''இந்திய அமெரிக்க ஒப்பந்தம், இரட்டைப் பயன்பாடு கொண்ட தொழில்நுட்பங்களை இந்தியாவிற்கு அளிக்க முன் வந்தாலும், அத்தொழில்நுட்பங்களை இந்தியாவிற்கு அளித்தேயாக வேண்டும் என இந்த ஒப்பந்தம் அமெரிக்காவை நிர்பந்திக்க முடியாது. அமெரிக்க அரசின் கொள்கைப்படியும், இரட்டைப் பயன்பாடு கொண்ட தொழில்நுட்பங்களை அளிக்கப் போவதில்லை.''



அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷைச் சந்தித்து, அணுசக்தி ஒப்பந்தம் குறித்து, உரையாடும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

''அதிநுட்பம் வாய்ந்த அணுத்தொழில்நுட்பங்களை உருவாக்கவும், அவற்றை இயக்கவும் இந்தியாவிற்கு அமெரிக்கா உதவாது.''

''அதிநுட்பம் வாய்ந்த அணுத் தொழில்நுட்பங்களையோ உதிரி பாகங்களையோ இந்தியாவிற்கு அளிப்பதற்கு வசதி


படிப்பகம்

www.padippakam.com

யாக, இந்திய - அமெரிக்க ஒப்பந்தத்தில் திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தும் திட்டம் எதுவும் கிடையாது.''

''இத்தொழில்நுட்பங்களை இந்தியாவிற்கு அளிப்பதாக இருந்தாலும், ஹைட் சட்டத்திற்கு உட்பட்டுதான், அமெரிக்கா இந்தியாவிற்கு அளிக்கும்'' எனப் பதில் அளித்திருக்கிறது.

**எரிபொருள் உறுதிமொழி: காத்தோடு போச்சு**

''இறக்குமதி செய்யப்படும் அணு உலைகளை, அவற்றின் இறுதிக்காலம் வரை இயக்குவதற்குத் தேவையான யுரேனியத்தை இந்தியாவிற்கு வழங்க வேண்டும் என 123 ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது; இந்த உறுதிமொழியினை அடிப்படையாகக் கொண்டுதான், இந்தியாவின் சிவில் அணு உலைகளை சர்வதேச அணுசக்திக் கழகத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்த இந்தியா ஒப்புக் கொண்டது.''



அணு மூலப்பொருள் வழங்கும் நாடுகள் இந்தியாவிற்கு விலக்கு அளித்ததை அறிவிக்கும் வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி (நடுவில்), பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் (இடது) மற்றும் அணுசக்தி கமிசனின் தலைவர் அனில் ககோத்கர்.

''இந்தியாவிற்கு யுரேனியம் தருவதில் ஏதேனும் தடை ஏற்பட்டால், அதனைத் தீர்க்க அமெரிக்கா உதவ வேண்டும்; அத்தடைகளை சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கும் உரிமையும் இந்தியாவிற்கு அளிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத் தேவைக்கேற்ப யுரேனியத்தை இறக்குமதி செய்து சேமித்து வைத்துக் கொள்ளும் உரிமையும் இந்தியாவிற்கு உண்டு'' என நாடாளுமன்றத்தில் 123 ஒப்பந்தத்தின் அருமை பெருமைகளை அள்ளி வீசியிருந்தார், மன்மோகன் சிங்.

இந்தியா குறிப்பிடும் இந்த உரிமைகள் தொடர்பாக விளக்கம் அளித்துள்ள அமெரிக்க அரசு, ''இந்தியாவிற்குத் தடையின்றி யுரேனியம் வழங்குவது தொடர்பாக அமெரிக்க அதிபர் அளித்துள்ள உறுதிமொழி, அமெரிக்க அரசின் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டதாகும். யுரேனியம் வழங்குவதில் தடை ஏற்படும் பொழுது, இந்தியாவின் பக்கம் தவறில்லை எனும்பட்சத்தில் தான் அமெரிக்கா உதவும்.''

''சந்தை நிலைமையில் ஏதாவது கோளாறு ஏற்பட்டு, அதனால் யுரேனியம் வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டால் மட்டுமே, அமெரிக்கா உதவும்; மாறாக, இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தி அதன் விளைவாக யுரேனியம் வழங்குவதில் ஏற்படும் எல்லா பிரச்சினைகளையும், கோளாறுகளையும், தடைகளையும் நீக்கிக் கொடுக்க அமெரிக்கா உதவும் எனப் பொத்தாம் பொதுவாக எடுத்துக் கொள்ளக் கூடாது.''

''இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தினால், யுரேனியம் வழங்குவது உள்ளிட்டு, அணுசக்தி தொடர்பான அனைத்துவிதமான ஒத்துழைப்பையும் உடனடியாக, மேலும் தொடராமல் நிறுத்தி விடும் உரிமையும்; அமெரிக்காவிடமிருந்து இந்தியா பெற்றுக் கொண்ட யுரேனியம் உள்ளிட்ட அனைத்து அணுப்பொருட்களையும் திரும்பக் கோரும் உரிமையும்; ஒரு வருட கால அவகாசம் கொடுத்து இந்த ஒப்பந்தத்தையே ரத்து செய்து கொள்ளும் உரிமையும் அமெரிக்காவிற்கு உண்டு.''

''இந்தியா, தனது எதிர்காலத் தேவையையொட்டி அணு எரிபொருளைச் சேமித்து வைத்துக் கொள்ளும் உரிமை பற்றிய வரையறைகளை எதிர்காலத்தில்தான் வளர்த்தெடுக்க முடியும்; இந்தியாவின் இந்த உரிமை அமெரிக்காவின் ஹைட் சட்டத்திற்குக் கட்டுப்படாது என இப்பொழுதே கூறுவது அவசரக்குடுக்கைத்தனமாகும்; மேலும், அணு உலைகளை இயக்குவதற்கு நியாயமாக எவ்வளவு எரிபொரு தேவைப்படும் என்பதுகூட இன்னும் வரையறுக்கப்படவில்லை; இந்த வரையறை பற்றி இரண்டு அரசுகளும் கலந்தாலோசனை கூட நடத்தவில்லை'' எனக் குறிப்பிட்டுள்ளது.

**நிரந்தரமாகும் கண்காணிப்பு**

''இந்தியாவிற்கு யுரேனியம் வழங்குவதில் தடை ஏற்படும் பொழுது, அதனைச் சரி செய்யும் நடவடிக்கைகள் எடுக்கும் உரிமையும்; அப்படித் தடை ஏற்படும் பொழுது, இந்தியா, தனது அணு உலைகளை சர்வதேச அணுசக்தி கழகத்தின் கண்காணிப்பில் இருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமையும் இந்தியாவிற்கு உண்டா?'' என்ற கேள்விகளுக்கு, ''சரி செய்யும் நடவடிக்கைகள் குறித்து, இந்தியா, தனக்கு எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை; அது குறித்து சர்வதேச அணுசக்திக் கழகத்தோடுதான் பேசி, இந்தியா முடிவெடுக்க வேண்டும்'' என நழுவிக் கொள்ளும் விதமாகப் பதில் அளித்துள்ளது, அமெரிக்க அரசு. மேலும், ''இந்தியா, தனது அணு உலைகளை அவற்றின் ஆயுட்காலம் முழுவதற்கும் கண்காணிப்புக்கு உட்படுத்த ஒப்புக் கொண்டு வாக்குறுதி அளித்துள்ளது'' எனச் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தியா, சர்வதேச அணுசக்திக் கழகத்தோடு செய்து கொண்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தில், சரி செய்யும் நடவடிக்கைகள் தொடர்பாக எவ்விதமான விரிவான விளக்கமும் அளிக்கப்படவில்லை; அந்நடவடிக்கைகள் பற்றி முடிவு செய்வது இந்தியாவின் சுயாதிபத்திய உரிமை என்று மட்டுமே பொத்தாம் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்தியாவிற்கு யுரேனியம் வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டாலும் கூட, இந்திய அணு உலைகளை சர்வதேச அணுசக்தி கழகத்தின் கண்காணிப்பில் இருந்து இந்தியா தன்னிச்சையாக விலக்கிக் கொள்ள முடியாது என்பதும் அவ்வொப்பந்தத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

www.padippakam.com

அமெரிக்காவின் வெளிவிவகாரத்துறை செயலர் கண்டலீசா ரைஸ், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, ''நிரந்தரமான கண்காணிப்பு என்பது எவ்விதமான நிபந்தனைகளும் அற்ற நிரந்தரமான கண்காணிப்புதான் என்பதை நாங்கள் இந்தியாவிடம் தெளிவுபடுத்தியிருக்கிறோம்'' என அமெரிக்க அரசின் வெளிவிவகார கமிட்டியிடம் தெரிவித்திருக்கிறார்.

''அமெரிக்காவில் இருந்து பெறப்பட்ட அணு எரிபொருளை, அணு உலைகளில் பயன்படுத்திய பிறகு, அதனை மறுசுழற்சி செய்யும் உரிமை இந்தியாவிற்கு உண்டு என்பதுதான் இந்த ஒப்பந்தத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்; மறுசுழற்சி செய்து கொள்வதற்காக, அமெரிக்காவின் நிரந்தரமான சம்மதத்தைப் பெற்றுள்ளோம்'' என ஓராண்டுக்கு முன்பு மன்மோகன் சிங் அடித்துப் பேசினார்.

அமெரிக்க அரசோ, ''சம்மதத்தை உரிமைபோல எடுத்துக் கொள்ள முடியாது. அமெரிக்காவும் இந்தியாவும் மறுசுழற்சி செய்வதற்கான ஏற்பாடுகளையும்; வரையறைகளையும் கூடிப் பேசி முடிவெடுத்த பிறகுதான், அமெரிக்காவின் சம்மதம் நடைமுறைக்கு வரும்'' எனப் பதில் அளித்திருக்கிறது.



**இந்திய, அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள், மிசோரம் மாநிலத்தில் உள்ள வனப் போர்ப் பயிற்சி பள்ளியில் வனப் போர்முறை குறித்து எடுத்துக் கொண்ட கூட்டுப் பயிற்சி.**

மேலும், அமெரிக்கா அளிக்கும் எரிபொருளை தற்போதுள்ள அணு உலைகளில் வைத்து மறுசுழற்சி செய்யக் கூடாது. அதற்காகப் புதிதாகத் தனி ஏற்பாடுகள் செய்வதோடு, அது தொடர்பான வரைபடங்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் அமெரிக்காவிடம் அளிக்க வேண்டும் என 123 ஒப்பந்தத்தில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

''மறுசுழற்சி தொடர்பான ஏற்பாடுகளும், வரையறைகளும் முடிவெடுக்கப்பட்டாலும், அமெரிக்காவின் சம்மதத்தை நிரந்தரமானதாக எடுத்துக் கொள்ள முடியாது; இந்த ஏற்பாடுகளும், வரையறைகளும் மறுசுழற்சி உரிமையினை அமெரிக்கா திரும்பப் பெற்றுக் கொள்வதையும் உள்ளடக்கியே இருக்கும்'' எனக் குறிப்பிட்டுள்ளது, அமெரிக்க அரசு.

மன்மோகன் சிங் உள்ளிட்டு இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கும் அனைவரும், ''இந்தியா-அமெரிக்கா இடையேயான அணுசக்தி கூட்டுறவை, ஹைட் சட்டம் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது'' என அடித்துப் பேசி வருகிறார்கள். ஆனால், அமெரிக்க அரசு, தனது வெளி விவகார கமிட்டிக்கு அளித்துள்ள பதிலில், ''இந்த ஒப்பந்தம், ஹைட் சட்டம் மற்றும் அமெரிக்க அணுசக்தி சட்டம் ஆகிய இரண்டு அமெரிக்கச் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டதுதான்'' எனப் பட்டவர்த்தனமாகக் குறிப்பிட்டுள்ளது.

## அணுகுண்டுச் சோதனைக்கு ஆப்பு

''நமது தேசிய பாதுகாப்பு கோரினால், நாம் மீண்டும் அணுகுண்டு சோதனை நடத்தும் உரிமையை, இந்த ஒப்பந்தம் தடுக்கவில்லை என நான் உறுதியளிக்கிறேன்'' என மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் ஜூலை 22, 2008 அன்று தெரிவித்தார்.

இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தும் உரிமையை, இந்த ஒப்பந்தம் வெளிப்படையாகத் தடுக்கவில்லை என்பது உண்மைதான். அதேசமயம், இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தினால் மட்டுமின்றி, இந்தியா அணு ஆயுதப் பரவல் தடைகளை மீறிவிட்டதாக அமெரிக்கா கருதினாலும்; அமெரிக்கா அணுசக்தி சட்டத்தில் கூறப்பட்டுள்ள விபரீதமான சூழல்கள் எழுந்தாலும், இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்யவும்; இந்த ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்காவிடமிருந்து பெறப்பட்ட அணுப் பொருட்களையும், சாதனங்களையும் இந்தியாவிடமிருந்து திரும்பப் பெறவும் அமெரிக்காவிற்கு இந்த ஒப்பந்தத்தின் 14-ஆவது விதியின் கீழ் உரிமை உண்டு என்பதும் மறுக்கவியலாத உண்மையாகும்.

இந்தியா மீண்டும் அணுகுண்டு சோதனை நடத்துவதை அமெரிக்கா அனுமதிக்கிறதா இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும். ''அணுகுண்டு சோதனை நடத்த மாட்டோம்'' என இந்தியா தன்னிச்சையாக சர்வதேச சமூகத்திடம் அளித்திருக்கும் வாக்குறுதிதான் இந்த ஒப்பந்தத்திற்கே அடிப்படையாக அமைந்திருக்கிறது.

1998-இல் இந்தியா அணுகுண்டு சோதனைகளை நடத்தியதைத் தொடர்ந்து, அமெரிக்கா, இந்தியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்திய அரசு கடைபிடித்து வரும் தாராளமயப் பொருளாதாரக் கொள்கைக்கு இத்தடைகள் தொல்லையாக இருக்கவே, அப்பொழுது பிரதமராக இருந்த வாஜ்பாயி, அமெரிக்காவை தாஜா செய்ய இந்த வாக்குறுதியை அளித்தார். பா.ஜ.க. கூட்டணி அரசு அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடக் கூடத் தயாராக இருந்ததாகக் கூறப்படுகிறது. இதனையடுத்துதான், பா.ஜ.க. ஆட்சி காலத்திலேயே அணுசக்தி ஒப்பந்தத்தை உருவாக்குவது தொடர்பாக, அமெரிக்கா-இந்தியா இடையே பேச்சுவார்த்தைகள் தொடங்கின. இந்த வாக்குறுதியின் அடிப்படையில்தான் மன்மோகன் சிங் - புஷ் கூட்டறிக்கையும், அதனைத் தொடர்ந்து அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தமும் உருவாக்கப்பட்டன. அணுமூலப் பொருட்களை வழங்கும் நாடுகள்,



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவிற்கு அளித்திருக்கும் விதிவிலக்குக்கும் இந்த வாக்குறுதிதான் அடிப்படையாக அமைந்துள்ளது.

அணு மூலப்பொருட்கள் வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், இந்தியாவுக்கு விலக்கு அளிக்கும் ஒப்பந்தம் முடிவுக்கு வராமல் இழுபறியாக இருந்த நேரத்தில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இந்திய அரசின் சார்பாக செப்.5 அன்று விடுத்த அறிக்கையில், ''அணுகுண்டு சோதனைகள் நடத்துவதற்கு இந்திய அரசு தன்னிச்சையாக அறிவித்திருக்கும் தடையைக் கடைபிடிப்போம்; அணுஆயுதப் பரவலைத் தடுப்பதற்கு ஆதரவாகச் செயல்படுவோம்; சர்வதேச அணுசக்தி கழகத்தோடு மற்றொரு உடன்பாட்டினை உறுதியாகச் செய்து கொள்வோம்'' என்பவை உள்ளிட்ட சில வாக்குறுதிகளை அளித்தார். அமெரிக்காவின் பெரிய அண்ணன்தனமும், இந்தியா அளித்த இந்த வாக்குறுதிகளும்தான் விலக்கு ஒப்பந்தம் நிறைவேற வழி வகுத்தன.



**வங்காளத்தின் தளபதி மீர் ஜாபரும், ஜெய்சந்தும் ராபர்ட் கிளைவுக்கு உதவியதைப் போல, அமெரிக்காவின் மேலாதிக்கத்தை இந்தியா மீது முழுமையாகத் திணிப்பதற்கு, ஜார்ஜ் புஷ்ஷுக்கு, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உதவி வருகிறார்!**

அணு மூலப்பொருளை மறு சுழற்சி செய்யவும், செறிவூட்டவுமான உரிமையினை இந்தியாவிற்கு வழங்குவதை இந்த விலக்கு ஒப்பந்தம் மறுக்கவில்லை என்றாலும், அணு மூலப்பொருட்கள் வழங்கும் நாடுகளின் குழுமம் அத்தொழில்நுட்பத்தை உடனடியாக இந்தியாவிற்குத் தர விரும்பவில்லை எனக் கூறப்படுகிறது. *(தி இந்து, செப்.7, பக்.11)*

அணு மூலப்பொருள் வழங்கும் நாடுகளின் குழுமம், எதிர்காலத்தில் வகுக்கும் விதிகளுக்கு ஏற்ப நடந்து கொள்வதாகவும் இந்தியா அக்குழுமத்திடம் ஒப்புதல் அளித்திருக்கிறது.

இரட்டை பயன்பாடு கொண்ட தொழில்நுட்பங்களையும், சாதனங்களையும் இந்தியாவிற்கு வழங்கும்பொழுது, அது பற்றி அணு மூலப்பொருள் வழங்கும் நாடுகள் தங்களுக்குள் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும் என்றொரு விதி விலக்கு ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுமத்தைச் சேர்ந்த ஒரு நாடு, ஒரு குறிப்பிட்ட சாதனத்தை இந்தியாவிற்கு வழங்குவதை அக்குழுமத்தைச் சேர்ந்த மற்றொரு நாடு (குறிப்பாக, அமெரிக்கா) விரும்பவில்லை என்றால், இந்த விதியைப் பயன்படுத்திக் கொண்டு, அதனைத் தடுத்து விட முடியும். அமெரிக்காவின் ஹைட் சட்டத்திற்கு ஏற்பவே இந்த விதி, விலக்கு ஒப்பந்தத்தில் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

*(ஃபிரெண்ட்லைன், அக். 10, பக்:8)*

அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற 123 ஒப்பந்தம் அனுப்பப்பட்டிருக்கும் இந்நேரத்தில், அமெரிக்க அரசின் வெளி விவகார கமிட்டியின் தலைவர் ஹோவர்ட் பெர்மன், ''இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தினால், அமெரிக்கா, அணு மூலப் பொருள் வழங்கும் நாடுகளையும் ஒப்பந்தத்தை ரத்து செய்யுமாறு கோர வேண்டும்'' என்ற தீர்மானத்தை முன்மொழிந்துள்ளார். இவையனைத்தும், ''அணு மூலப் பொருள் வழங்கும் நாடுகள் எவ்வித நிபந்தனையும் இன்றி இந்தியாவிற்கு விலக்கு அளித்திருப்பதாக'' இந்திய அரசு கூறி வருவதற்கு எதிராகவே அமைந்துள்ளன.

**அமெரிக்காவின் போர்வெறிக்கு வாலாட்டும் இந்தியா**

123 ஒப்பந்தத்திற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவது தொடர்பாக, அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் அளித்துள்ள விளக்கக் குறிப்பில், ''123 ஒப்பந்தம் தொடர்பாக, அமெரிக்கா இந்தியாவிற்கு அளித்துள்ள உறுதிமொழிகள், அரசியல் ரீதியானவைதான், அவை அமெரிக்காவைச் சட்டப்படிக் கட்டுப்படுத்தக் கூடியவை அல்ல'' என்ற ''இரகசியத்தை''ப் போட்டு உடைத்து விட்டார். மேலும் ஈரானைக் கட்டுப்படுத்தும் விசயத்தில், இந்தியா அமெரிக்காவிற்கு என்னென்ன விதத்தில் ஒத்துழைப்பைத் தந்திருக்கிறது என்பதையும் பட்டியல் போட்டு, மன்மோகன் சிங் கும்பலின் அமெரிக்க அடிவருடித்தனத்தையும் அம்பலப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக, செப். 5 அன்று இந்திய அரசின் சார்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி விடுத்திருக்கும் அறிக்கையில், ''அணு மூலப் பொருளை மறுசுழற்சி செய்யும், செறிவூட்டும் தொழில்நுட்பங்களைப் பெறாத நாடுகளுக்கு, அத்தொழில் நுட்பங்கள் கிடைப்பதைத் தடுக்கும் சர்வதேச முயற்சிக்கு இந்தியா முழுமையாக ஒத்துழைக்கும்'' என உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது. இது, அமெரிக்காவைத் திருப்திபடுத்த, ஈரானைக் குறி வைத்துக் கொடுக்கப்பட்ட உறுதிமொழி என்றுதான் கூறப்படுகிறது.

மேலும், அமெரிக்கப் போர்க் கப்பல்களுக்கும், போர் விமானங்களுக்கும், இந்தியாவில் எரிபொருள் நிரப்புவது உள்ளிட்டு பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கும் இராணுவ ஒப்பந்தமொன்று கையெழுத்தாகும் நிலையில் உள்ளது. அமெரிக்கா, ஈரான் மீது ஒரு ஆக்கிரமிப்புப் போரை நடத்தத் துடிக்கும் இவ்வேளையில், இந்தியாவை அதற்கான தளமாகப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டம் தான், இந்த இராணுவ ஒப்பந்தத்தின் பின்னே மறைந்துள்ளது. மேலும், அமெரிக்கா, இந்தியாவிற்கு விற்பனை செய்யும் இராணுவத் தளவாடங்கள் மற்றும் தொலை தொடர்புச் சாதனங்களை நேரடியாக வந்து ஆய்வு செய்யும் உரிமையை அமெரிக்காவுக்கு வழங்கும் இராணுவ ஒப்பந்தங்களும் தயாராகி வருகின்றன.

**மன்மோகன் சிங் – மறுகாலனியாதிக்கத்தின் மீர் ஜாபர்**

மன்மோகன் சிங், அறிவு நாணயம் உள்ளவராகவும், தன்மானமிக்கவராகவும் இருந்திருந்தால், 123 ஒப்பந்தம்

www.padippakam.com

குறித்து இரகசியமாக வைக்கப்பட்டிருந்த அமெரிக்க அரசின் கடிதம் வெளியிடப்பட்டவுடனேயே, ''ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறி விடுவோம்'' என எச்சரிக்கையாவது செய்திருக்க வேண்டும்; ஒப்பந்தம் குறித்த எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு நாடாளுமன்றத்தைக் கூட்டிப் பதில் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவரோ, ''அமெரிக்க அரசு இப்படியொரு கடிதத்தை எழுதியிருப்பது தமக்கு முன்பே தெரியும்'' எனக் கூறி, நாட்டு மக்களை அதிர்ச்சியடையச் செய்தார். ஒப்பந்தம் தொடர்பாக புஷ்ஷைச் சந்திக்கப் பறந்தோடியதன் மூலம், ''நான் அமெரிக்கக் கைக்கூலிதான்'' என்பதை வெட்கமின்றி வெளிப்படையாகக் காட்டிக் கொண்டுள்ளார்.

123 ஒப்பந்தத்தை ஆதரிக்கும் அனைவரும், இந்தியாவின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கிவிட்டதாக மார் தட்டுகிறார்கள். உண்மைதான். இந்தியாவின் அரைகுறை இறையாண்மையும், சுயாதிபத்தியமும் முற்றிலுமாக அம்மணமாகி, இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைக் கூட அமெரிக்கா தீர்மானிக்கும் நிலை உருவாகியிருப்பதை, மறுகாலனி ஆதிக்கத்தின் புதிய சகாப்தம் என்றுதான் சொல்ல வேண்டும்.

1991-இல் பொருளாதார சீர்திருத்தத்தைத் தொடங்கி வைத்ததன் மூலமும், தற்பொழுது அணுசக்தி ஒப்பந்தத்தின் மூலமும் மன்மோகன் சிங் இந்தியாவின் வரலாற்றில் இடம் பிடித்துவிட்டதாகப் போற்றப்படுகிறார். மன்மோகன் சிங் தொடங்கி வைத்த பொருளாதாரச் சீர்திருத்தம், ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்திய விவசாயிகளின் உயிரைக் காவு வாங்கிவிட்டது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையும் ஆற்றல் பெற்றிருந்த இந்தியாவை, உணவுப் பொருளை இறக்குமதி செய்ய வேண்டிய நாடாக மாற்றியிருக்கிறது; இந்தியாவின் சுயசார்புத் தொழில்களை அழித்து, வேலைவாய்ப்பின்மையையும், வறுமையையும், ஏழ்மையையும் அதிகரிக்கச் செய்திருக்கிறது. பொருளாதாரச் சீர்திருத்தம் ஏற்படுத்தி வரும் ''நன்மை''கள் இவைதான் என்றால், அணுசக்தி ஒப்பந்தம் அமெரிக்காவில் இருந்து பாலாறையும், தேனாறையுமா கொண்டு வரும்?

இந்தியா, தனது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஏராளமான துரோகிகளையும், அடிவருடிகளையும் கண்டிருக்கிறது. அந்த அருவெறுக்கத்தக்க பட்டியலில் மன்மோகன் சிங்குக்கும் ''அழியாத'' இடமுண்டு! கும்பினியின் ஆட்சியை இந்தியாவில் வேரூன்றச் செய்வதற்கு, வங்க தேசத்து தளபதி மீர் ஜாபரும், ஜெய்சந்தும் ராபர்ட் கிளைவுக்கு உதவியதைப் போல, அமெரிக்காவின் மேலாதிக்கத்தை இந்தியா மீது முழுமையாகத் திணிப்பதற்கு, ஜார்ஜ் புஷ்ஷுக்கு, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உதவி வருகிறார்!

• செல்வம்

# "காமவெறி போலீசுக்காரனைத் தூக்கில் போடு!"
## - திருச்சியை அதிர வைத்த சுவரொட்டி பிரச்சாரம்



கடந்த செப்டம்பர் 11-ஆம் தேதியன்று திருச்சி மத்தியப் பேருந்து நிலையத்தில் சென்னை செல்வதற்காகக் காத்திருந்த இரு இளம்பெண்களை, இரயில்வே பாதுகாப்புப் படையைச் சேர்ந்த காமவெறி பிடித்த போலீசுக்காரன் சரவணன், விசாரணை என்ற பெயரில் தனது வாகனத்தில் கடத்திச் சென்று பாலியல் வன்முறையை ஏவியுள்ளான். இக்கொடுஞ் செயலை அறிந்து திருச்சி நகரமே அதிர்ச்சியில் உறைந்து போனது. தற்போது கைது செய்யப்பட்டுள்ள இந்தப் பொறுக்கியின் பொழுதுபோக்கே இப்படி இளம்பெண்களைத் தனது போலீசு அதிகாரத்தைக் கொண்டு மிரட்டி கடத்திச் சென்று நாசமாக்குவதுதான் என்பது முதற்கட்ட விசாரணையிலேயே தெரிய வந்துள்ளது. ஆனாலும், இவனோடு கூட்டுச் சேர்ந்து காமவெறியாட்டங்களை நடத்தி வரும் இதர போலீசு கும்பலைப் பற்றிய உண்மைகள் திட்டமிட்டே மறைக்கப்பட்டுள்ளன.

திருச்சி நகரில் அடுத்தடுத்து இத்தகைய வெறியாட்டங்கள் தொடரும் நிலையில், நாகரிக சமுதாயத்துக்கே பேரபாயமாகி விட்ட, சீருடை அணிந்த இச்சட்டவிரோத - சமூக விரோத பொறுக்கிக் கும்பலைத் தண்டிக்கக் கோரி, திருச்சியில் செயல்படும் பெண்கள் விடுதலை முன்னணி உடனடியாகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாக, இக்காமவெறி கும்பலைத் தூக்கிலிடக் கோரியும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தலா ரூ. 5 லட்சம் நட்டஈடு வழங்கக் கோரியும், நகரெங்கும் விரிவாக சுவரொட்டிகளை ஒட்டியது. இவ்வமைப்பைச் சேர்ந்த பெண்களே பசை வாளியுடன் சென்று நகரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டுவதைக் கண்டு ஆச்சரியத்தோடு மக்கள் திரண்டு வரவேற்று ஆதரித்தனர். இன்னும் பலர் தொலைபேசி வழியே தொடர்பு கொண்டு இச்செயலைப் பாராட்டி வரவேற்றனர். நகரை அதிர வைத்த இச்சுவரொட்டி பிரச்சாரத்தால், குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரும் பொதுமக்களின் கருத்து வலுப்பெற்று வருகிறது.

- பு.ஜ. செய்தியாளர்கள், திருச்சி.

**பேருந்துக்கு காத்திருந்த இளம் பெண்கள் இருவர்**
**இரயில்வே போலீசு கும்பலால் கற்பழிப்பு !**

தமிழக அரசே,

- **இரயில்வே போலீஸ்காரன் சரவணன் உள்ளிட்ட பொறுக்கி கும்பலை தூக்கில் போடு! குற்றவாளிகளை தப்ப விடாதே!**
- **பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 5 லட்சம் நட்டஈடு வழங்கு!**

உழைக்கும் பெண்களே!

- **பொறுக்கிகளையும் சமூக விரோதிகளையும் தண்டிக்க அணி திரள்வோம்!**

பெண்கள் விடுதலை முன்னணி - திருச்சி
தொடர்புக்கு: 94428 71010

www.padippakam.com

# பிஞ்சென்றும் பாராது இலாபவெறி

தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் (எய்ம்ஸ்), இந்தியாவிலேயே மிகப் பெரிய மருத்துவ நிறுவனம். இந்திய மருத்துவத்தின் தரத்தை உலகத் தரத்திற்கு உயர்த்துவதையும், இந்தியாவின் தலைசிறந்த மருத்துவர்களை உருவாக்குவதையும் இலட்சியமாகக் கொண்டு, இந்திய மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் மத்திய அரசு நிறுவனம். இந்த நிறுவனம்தான், பன்னாட்டு நிறுவனங்கள் தரும் டாலருக்காக பிஞ்சுக் குழந்தைகள் மீது, புதிய மருந்துகளுக்கான மருத்துவச் சோதனைகளை நடத்தி, இதுவரை 49 குழந்தைகளைக் கொன்றுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தில்லியில் உள்ள ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் கேட்டிருந்த தகவல் மூலம் கடந்த இரண்டரை ஆண்டுகளில், 4,142 குழந்தைகள் மீது, அதிலும் பெரும்பான்மையாக (2,728) ஒரு வயதிற்கும் குறைவான குழந்தைகள் மீது இந்த நிறுவனம் சோதனைகளைச் செய்துள்ளது தெரிய வந்துள்ளது. இந்த சோதனைகளின் போது 49 குழந்தைகள் இறந்துள்ளன.

கடந்த 30 மாதங்களில் 42 வகையான ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள், வெளிநாடுகளில் தயாரான 5 மருந்துகள், குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டச் சோதனை செய்யப்பட்டுள்ளன. சோதனைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகளில், இறந்த குழந்தைகளைப் பற்றிய தகவல்கள் மட்டுமே தெரிய வந்துள்ளன. ஆனால், புதிய மருந்துகளால் ஏற்பட்டுள்ள பக்கவிளைவுகள் பற்றியோ, பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளைப் பற்றியோ எவ்விதத் தகவலும் இல்லை. இது பற்றிய தகவல் தங்களிடம் இல்லை என்று எய்ம்ஸ் நிறுவனம் கூறிவிட்டது. அதாவது, மருத்துவச் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட சிறிது காலம் வரை மட்டுமே அந்த குழந்தைகளின் உடல்நிலை கண்காணிக்கப்பட்டுள்ளது. பின்பு அவற்றின் கதி என்னவென்றே தெரியவில்லை.

இந்திய அரசின் சட்டங்களுக்கு உட்பட்டு, குழந்தைகளின் பெற்றோரிடம் கையெழுத்து வாங்கியே இந்தச் சோதனைகளைச் செய்வதாக இவர்கள் கூறுகின்றனர். ஆனால், மருத்துவ வசதிகோரி எய்ம்ஸ் நிறுவனத்திற்கு வருபவர்களில் பெரும்பான்மையினர் ஏழை எளிய மக்கள்; படிப்பறிவில்லாதவர்கள். இவர்களது குழந்தைகள் மீதுதான் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. தங்களது குழந்தையின் மீது இப்படி ஒரு சோதனை நடத்தப்படுகிறது என்பதும், இதனால் தங்களின் குழந்தைகளின் உயிருக்கே கூட ஆபத்து உண்டாகும் என்பதும், அவர்களுக்குப் பெரும்பாலும் தெரியாது. குழந்தைக்கு நோய் குணமாக ஏதோ புதிய மருந்தை மருத்துவர் இலவசமாகத் தரப்போகிறார் என்றே பலரும் நினைத்தனர். அதன்படியே, மருத்துவர்கள் காட்டிய இடத்திலெல்லாம் கையெழுத்தும் போட்டுள்ளனர்.

தடுப்பூசியால் ஏற்பட்ட மரணம்: பற்பநாதன்.



இந்தச் சோதனையில் குழந்தை இறந்தாலோ, அல்லது பக்க விளைவுகளுக்கு உள்ளானாலோ முறையான இழப்பீடும் கிடையாது. இது போன்ற சோதனைகள் தில்லியில் உள்ள எய்ம்ஸ் நிறுவனத்தில் மட்டுமல்ல; நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

திருவனந்தபுரத்தில் நடத்தப்பட்ட புற்று நோய்க்கான புதிய மருத்துவ ஆராய்ச்சி முதல் ஆந்திராவில் பில் கேட்சின் உதவியுடன் செயல்பட்டு வரும் மஞ்சள் காமாலை நோய் (ஹெப்படைடிஸ் பி) தடுப்பூசி சோதனை வரை பன்னாட்டு நிறுவனங்களின் பல வகையான புதிய மருந்துகள் இந்திய மக்களின் உடலில் செலுத்தப்பட்டு சோதிக்கப்படுகின்றன.

அமெரிக்க மற்றும் அய்ரோப்பிய நாடுகள் பலவற்றில், மனிதர்கள் மீது மருத்துவச் சோதனைகள் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளன. அனுமதிக்கப்பட்ட சில மேலை நாடுகளில் கூட சட்டதிட்டங்கள் கறாராக இருப்பதாலும், ஆய்வுக்கான செலவும் மிக அதிகமாய் இருப்பதாலும் பன்னாட்டு மருந்து நிறுவனங்கள் இந்தியா போன்ற நாடுகளைக் குறிவைத்துள்ளன. இதற்காக ஆகும் செலவில் 10 சதவீதத்திலேயே இந்தியாவில் சோதனையைச் செய்துவிட முடியும்.

பன்னாட்டு மருந்து நிறுவனங்களான நோவோ நார்டிஸ்க், அவென்டிஸ், நோவார்டிஸ், கிலாக்ஸோ - ஸ்மித் கிலைன் மற்றும் ஃபைசர் ஆகியன தங்களது மருந்துச் சோதனைக் கூடங்களைப் பல இந்திய நகரங்களில் நிறுவி வருகின்றன. 2010-ஆம் ஆண்டுக்குள் 20 இலட்சம் இந்தியர்களின் மீது புதிய மருந்துகளுக்கான மருத்துவச் சோதனைகள் நடத்தப்பட்டிருக்கும் என்று ஓர் ஆய்வு கூறுகிறது.

கடந்த ஆண்டு முதல் இத்தகைய ஆய்வுகளுக்கு சேவை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு மட்டும் மருந்துச் சோதனை வழியாக 20 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு அந்நிய செலாவணி வந்து குவிந்துள்ளதாகக் கணக்கு காட்டும் நிதித்துறை, 2010-ஆம் ஆண்டுக்குள் இதனை 50 கோடி டாலராக உயர்த்தப் போவதாகக் கூறுகிறது.

இதை வேறு வார்த்தைகளில் சொன்னால், சோதனைச்சாலை எலிகளாகப் பயன்படுத்தப்படும் இந்திய மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் போகிறது என்பது தான்!

●பச்சையப்பன்

www.padippakam.com



# அண்ணாதுரை: பிழைப்புவாதத்தின் பிதாமகன்

மறைந்த தி.மு.க. தலைவர் அண்ணாதுரையின் நூற்றாண்டு தொடக்கவிழாவை தமிழக அரசு கொண்டாடி வருகிறது. தமிழினவாதிகள் முதல் பார்ப்பன பத்திரிகைகள் வரை அனைத்து தரப்பினரும் அண்ணாதுரையை வானளாவப் புகழ்ந்து தள்ளுகின்றனர். 1960-களில் தமிழக மக்களின் பேராதரவைப் பெற்ற தலைவராக விளங்கிய அண்ணா, தமிழ் சமூகத்துக்குச் செய்த பங்களிப்பு என்ன?

நீதிக் கட்சியின் தலைவராகப் பெரியார் பொறுப்பேற்றபின், அவரின் தளபதியாகப் பொறுப்பெடுத்துக் கொண்ட அண்ணாதுரை, சரிகைக் குல்லாக்கள் அனைவரையும் விரட்டி விட்டு அத்தேர்தல் கட்சியை சீர்திருத்த இயக்கமான திராவிடர் கழகமாக மாற்றினார். தி.க.வில் தனக்கென ஆதரவாளர்களை உருவாக்கித் தலைமைக்குப் போட்டியாளரானார். தனது 'தம்பிமார்கள்' பதவி சுகம் கண்டு பொறுக்கித்தின்னத் துடித்தபோது, பெரியார்-மணியம்மையின் திருமணத்தைக் காரணமாகக் காட்டி 'கண்ணீர்த்துளி'களோடு வெளியேறி தி.மு.க.வை உருவாக்கினார்.

தி.க.வும் தி.மு.க.வும் இரட்டைக்குழல் துப்பாக்கி என்று சொல்லிக்கொண்ட அண்ணாதுரை, கட்சி ஆரம்பித்த சில ஆண்டுகளிலேயே நாத்திகத்தை மூட்டை கட்டி வைத்து விட்டார். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' எனும் திருமூலரின் வாசகத்தையே தி.மு.க.வின் கொள்கை ஆக்கியவர், பிள்ளையார் சிலையைத் தெருவில் போட்டு பெரியார் உடைத்தபோது, ''நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம். பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்க மாட்டோம்'' என்று பித்தலாட்டமாடினார். ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்'' என்று புது ஆத்திகத்தை உபதேசித்தார். இந்தக் கொள்கைச் சறுக்கலோ, பின்னர் விநாயகர் சதுர்த்தி விழாவை தி.மு.க. அமைச்சர் டி.ஆர்.பாலு தொடங்கி வைக்கும் வரைக்கும் சீரழித்தது என்பதை மறுக்க முடியாது.

இந்தியாவிலிருந்து நர்மதைக்கு தெற்கே உள்ள பகுதிகளை எல்லாம் ''திராவிட நாடு'' என்றும் இதனைப் பிரித்து தனி நாடாக்கவேண்டும் என்றும் ''அடைந்தால் திராவிட நாடு; இல்லையேல் சுடுகாடு'' என்றும் அண்ணாதுரை மேடை எங்கும் முழங்கி வந்தார். இவர் கேட்ட திராவிட நாட்டின் எல்லைகளைக்கூட இவர் சரியாகச் சொன்னதில்லை. சில சமயங்களில் பழைய சென்னை மாகாணமே 'திராவிட நாடு' என்றார். ஆந்திரம் தனி மாநிலமான பிறகும் கேரளா, கர்நாடகம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்களும் திராவிட நாடென்றார். ஆனால் பரிதாபம் என்ன என்றால், இவர் திராவிடநாடு கேட்டது மற்ற 3 மாநிலத்திற்கும் தெரியாது. இறுதிவரை திராவிட நாட்டைப் பறித்தெடுக்க எந்த செயல்திட்டமோ, வரையறையோ அவர் எழுதிக்கூட வைத்திருக்கவில்லை.

தேச விடுதலைக்கு வேட்டுமுறை, ஓட்டுமுறை என இரண்டு இருப்பதாகவும், திராவிட நாட்டை ஓட்டுமுறை மூலமாகப் பாராளுமன்றத்தில் சென்று பெற்றுவிடுவேன் என்றும் சொன்னார். ஐ.நா. சபையில் பேசி வென்றெடுப்பேன் என்றார். ''ரஷ்யாவுக்கு சென்றால் அவர்கள் திராவிடநாடு கோரிக்கையை ஆதரிப்பார்கள்'' என்றும் பிதற்றினார். ''தணிக்கை இல்லாமல் 4 சினிமா எடுக்கவிட்டால், அடைவோம் திராவிடநாடு'' என்று அவர் பேசிய பேச்சும், எந்தத் தேர்தல் அறிக்கையிலும் இக்கோரிக்கையை அவர் முன்வைக்காததும் இக்கோரிக்கையினை மூக்குப் பொடி போலத்தான் பயன்படுத்தி வந்தார் என்பதனை நிரூபிக்கும் சாட்சியங்கள்.

சீனப்போர் உச்சமடைந்தபோது மத்திய அரசு எங்கே தனது கட்சியைத் தடை செய்து விடுமோ என அஞ்சி திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டார். ஆனாலும், ''திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம் என்று சொல்லவில்லை; ஒத்தி வைத்துள்ளோம். பிரிவினைக்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன'' என்று சமாளித்தார்.

கவர்ச்சிவாதத்தோடு பிழைப்புவாதத்தையும் கலந்து வளர்த்த தி.மு.க. நிறுவனர் அண்ணாதுரை.



இந்தி ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேறிய 1963-ஆம் ஆண்டு முதல் 1969 வரை ஆறாண்டுகள் அதற்கெதிராகப் போராடப் போவதாக அண்ணா அறிவித்தார். தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு இந்தி ஆட்சி மொழிச் சட்ட நகல் எரிப்புப் போராட்டங்களை தி.மு.க. நடத்தியது. அண்ணா, கருணாநிதி உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தலைவர்களும் அணிகளும் அன்றைய காங்கிரசு அரசால் சிறையிடப்பட்டனர். இறுதியாக, 1965 ஜனவரி 26 'குடியரசு' நாளை - இந்தி ஆட்சி மொழியாகும் துக்கநாளாக அறிவித்து கருப்புக் கொடியேற்றி, கருப்புச்

www.padippakam.com

சின்னமணிந்து கடும் அடக்குமுறை எதிர் கொண்டு போராடினர். இவ்வாறு, பல ஆக்கபூர்வ பணிகளால் தமிழ்மொழியை வளர்த்தும், பல போராட்டங்கள் - பிரச்சாரங்களால் மொழிப் பற்றையும் இன உணர்வையும் ஊட்டி, தமிழ் மக்களை விழிப் புறச் செய்ததில் திராவிட இயக்கமும், குறிப்பாக அண்ணாதுரையும் முக்கிய பங்காற்றியுள்ளனர்.

ஆனால், அப்போராட்டம் அத்துக்க நாளோடு முடிந்து போனது. மொழியுரிமைப் போராட்டத்தில் தீக்குளித்த தியாகிகளின் கல்லறையிலேயே அண்ணாவும் தி.மு.க.வும் தமது மொழிப் பற்றையும் இன உணர்வையும் வைத்துச் சமாதி கட்டிவிட்டனர். மொழிப்போரின் பலன்களை 1967 தேர்தலில் அறுவடை செய்து கொள்ளும் நோக்கத்தில், அண்ணாவும் அவரது கழகமும் துரோகப் பாதையில் நடை போடத் தொடங்கினர்.



மொழியுரிமைப் போராட்டத்தில் தீக்குளித்த தியாகிகளின் கல்லறையிலேயே அண்ணாவும் தி.மு.க.வும் தமது மொழிப்பற்றையும் இன உணர்வையும் வைத்துச் சமாதி கட்டிவிட்டனர்.

மொழிப்பற்றாலும் மொழியுணர்வாலும் எழுச்சியுற்ற மாணவர்கள் 1965 ஜனவரி 25-ஆம் நாளை, மாநிலந் தழுவிய துக்க நாளாக அறிவித்து, பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, இந்தி அரக்கி எரிப்பு - ஊர்வலம் என பெரும் போராட்டத்தில் இறங்கினர். பல இடங்களில் கட்சி சாராத மாணவர்கள் தன்னெழுச்சியாகவும் தி.மு.க. மாணவர் அணியினரும் இவற்றுக்குத் தலைமையேற்றனர். அன்றைய முதல்வர் பக்தவத்சலம் தலைமையிலான காங்கிரசு அரசு காட்டுமிராண்டித்தனமாகவும் துப்பாக்கிச் சூடு நடத்தியும் மொழிப் போரை அடக்க முயன்றது. அடிபணிய மறுத்த மாணவர்கள், பிப்ரவரி 9-ஆம் தேதி முதல் அஞ்சல் நிலைய மறியல், இரயில் நிறுத்தம், பொதுவேலை நிறுத்தம் இந்திப் பிரச்சார - பாடப் புத்தகங்கள் எரிப்பு என போராட்டங்களைத் தொடர்ந்தனர். காங்கிரசு அரசு தமிழகத்தின் பல பகுதிகளில் துப்பாக்கிச் சூடு நடத்தி மாணவர்களை மிருகத்தனமாகப் படுகொலை செய்தது. அதைக் கண்டு கொதித்தெழுந்த தமிழக மக்கள் மாணவர்களோடு இணைந்து மொழிப் போரில் குதித்தனர். போலீசுக்கு எதிரான தாக்குதலிலும், அஞ்சல் நிலையங்கள் - இரயில் நிலையங்களைத் தீயிடலிலும் இறங்கினர். இதுவரை கண்டிராத மாபெரும் எழுச்சியை தமிழகம் கண்டது.

இத்தருணத்தில் மாணவர்களோடும் மக்களோடும் களத்தில் நிற்க வேண்டிய அண்ணாவும் அவரது கழகமும், ''இந்தப் போராட்டத்துக்கும் எங்களுக்கும் தொடர்பு கிடையாது. ஜனவரி 26-ஆம் நாளை துக்கநாளாகக் கடைபிடித்ததோடு எங்கள் போராட்டம் முடிந்து விட்டது'' என்று அறிவித்து வெளிப்படையாகவே துரோகமிழைத்தனர். கழகத்தின் முக்கிய தலைவர்கள் பலர் 'மன்னிப்பு' எழுதிக் கொடுத்துவிட்டு சிறையிலிருந்து விடுதலையடைந்தனர். எவ்வித் தீர்வும் காணாமல் ''இந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது'' என்ற காங்கிரசின் வழக்கமான வாக்குறுதியை மட்டும் நம்பி, மொழிப் போராட்டத்தை அண்ணாதுரையும் அவரது கட்சியினரும் விலக்கிக் கொண்டனர்.

பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையும் மொழியுரிமையும் ஒன்றோடொன்று இணைந்தது. தன்னுரிமையை - தனிநாடு கோரிக்கையைக் கைவிட்டு இந்திய அரசின் ஒருமைத்தன்மையை ஏற்றுக் கொண்டு அண்ணாவும் அவரது கழகமும் துரோகமிழைத்த பிறகு, மொழியுரிமை போராட்டம் என்பது அவர்கள் நடத்தும் நிழல் சண்டையாகிப் போனது.

''அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை; நிரந்தரப் பகைவனும் இல்லை'' என்ற பிழைப்புவாதத்தைக் கற்பித்து 'குல்லுகபட்டர்' ராஜாஜியுடன் கூட்டணிக் கட்டிய அண்ணா.



ஆரம்பத்தில் தி.மு.க.வை ஓட்டுப்பொறுக்கும் கட்சி எனும் சாயல் விழாமல் பார்த்துக் கொண்ட அண்ணாதுரை, 1957-இல் நடந்த தேர்தல்மாநாட்டில் 'தேர்தலில் போட்டியிடலாமா? கூடாதா?' என்பதனை வாக்கெடுப்பிற்கு விட்டு பெரும்பான்மையின் முடிவின்படி தேர்தலில் பங்கெடுத்தாராம். ஆனால் மாநாட்டுக்கு முன்பே 'புதியதோர் அரசு காணப் புறப்படுவோம்' என்று தம்பிமார்களுக்கு வெட்கத்தைவிட்டு பதவி ஆசையைச் சொன்ன மனிதர்தான் அவர்.

தேர்தல் பாதைக்குள் நுழைந்தபிறகு தி.மு.க.வின் கொள்கைகளை எல்லா சந்தர்ப்பத்திலும் காபரே நடனத்தில் ஆடை கழற்றுவது போல ஒவ்வொன்றாக உதறி எறிந்தார். 1957-இல் முதுகுளத்தூர் கலவரத்தின்போது தேவர்சாதி வாக்குகளையும் தாழ்த்தப்பட்டோர் வாக்குகளையும் மனத்தில் கொண்டு, அப்போது சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாதீர் மானத்தில் தேவருக்கு ஆதரவாகப் பேசி


படிப்பகம்

www.padippakam.com

**கம்யூனிஸ்ட் கட்சியுடனும், கம்யூனிசத்தின் எதிரி ராஜாஜியுடனும் சந்தர்ப்பவாதக் கூட்டணி கட்டி பதவிக்காக எதையும் செய்யலாம் எனும் நிலை எடுத்தார், அண்ணா.**



விட்டு, வாக்கெடுப்பில் வெளிநடப்பு செய்து தாழ்த்தப் பட்டோரை ஆதரித்தார்.

கட்சிமாறி அரசியலுக்கு ஆதிமூலமான 'மூதறிஞர்' ராஜாஜியை 'குல்லுகப் பட்டர்' எனச் சாடியவர், 1962 தேர் தலிலே ''அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை; நிரந்தரப் பகைவனும் இல்லை'' எனும் பொன்மொழியைச் சொல்லி கூட்டணி சேர்ந்தார். அத்துடன் தி.மு.க.வில் இருந்து பார்ப்பன எதிர்ப்பும் கழற்றிவிடப்பட்டது. அந்தத் தேர் தலிலே காஞ்சிபுரம் தொகுதியில் நின்ற அண்ணாதுரை, வாக்காளர் பட்டியலில் தன்னை ''அண்ணாதுரை முதலியார்'' எனப் பதிவு செய்து சாதிஅரசியல் செய்ய முயன்றார். ''சில ருக்கு திடீரென முதலியார் என்ற வால் முளைத்து இருக் கிறது'' என்று பெரியார் இதனை அம்பலப்படுத்தினார்.

1967-இல் கம்யூனிஸ்ட் கட்சியுடனும், கம்யூனிசத்தின் எதிரி ராஜாஜியுடனும் சந்தர்ப்பவாதக் கூட்டணி கட்டி பதவிக்காக எதையும் செய்யலாம் எனும் நிலை எடுத்தார், அண்ணா. ''எங்களுக்கெல்லாம் கொள்கைதான் வேட்டி. பதவியோ மேல்துண்டு'' எனத் தத்துவம் பேசியவர், ஆட் சியைப் பிடித்தபோது கொள்கை என்று சொல்லிக்கொள்ளக் கோவணம் கூட இல்லாமல் முழு அம்மணமாகி நின்றார். இதுதான் அண்ணா தன் தம்பிமார்களுக்குத் தந்த அரசியல் பாடம்.

நெருக்கடி நிலையில் தன் கட்சித் தொண்டர்களைத் தூக்கிப் போட்டு மிதித்த இந்திரா காந்தியுடன் அடுத்த தேர்த லிலேயே ''நேருவின் மகளே வருக'' என அழைத்து தி.மு.க. கூட்டணி கட்டியதும், பொடாவிலே தன்னைத் தள்ளி வதைத்த ஊழல்ராணியை 'அன்புச் சகோதரி'யாக வை.கோ. அரவணைத்ததும் அண்ணா தந்த தத்துவம்தான்.

'தவறான கட்சியில் இருக்கும் சரியான நபர்' என இந்து மதவெறியர் வாஜ்பேயியை அண்ணாவின் தம்பி சித்தரித் ததும், அவருடனேயே கூட்டணி அமைத்ததும் வேறு ஒன்று மல்ல. அண்ணாவின் 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' எனும் தத்துவம்(!)தான்.

அரசியலில் பிழைப்புவாதத்துடன் கவர்ச்சிவாதத்தையும் கலந்து ஊட்டிவளர்த்த அண்ணா கொள்கைகளை எல்லாம் இழந்த பின்னர் எம்.ஜி.ஆர். எனும் கவர்ச்சியை நம்பியே கூட்டம் கூட்டினார். அதற்காக ''ஆளைக்காட்டினால் ஐம்பா யிரம் கூடும். முகத்தைக்காட்டினால் முப்பதாயிரம் கூடும்'' எனும் அரசியலை வெளிப்படையாகக் கூறவும் அண்ணா கூச் சப்படவில்லை. சென்ற தேர்தலிலே தி.மு.க. அ.தி.மு.க. இரண்டுமே சினிமாத் துணை நடிகைகளை வைத்துக் குத்தாட்டம் நடத்திக் கூட்டம் சேர்த்ததும் அண்ணாவின் அரசியல் தத்துவம்தான்.

கோஷ்டி சண்டையினைக் கொம்புசீவி விட்டுத் தனக்கு இணையாக வளரும் தலைவர்களை அடியாட்களால் அடித்து நொறுக்குவதைக் கழக அரசியலில் அறிமுகம் செய்தவர் அண்ணா. ஈ.வெ.கி. சம்பத் தாக்கப்பட்டு, கழற்றிவிடப்பட்ட தும் அதனை சாமர்த்தியமாக ''காதிலே புண் வந்திருக்கிறது. கடுக்கனைக் கழற்றி வைத்திருக்கிறேன்'' எனப் பேசியும், உண்ணாவிரதம் இருந்த சம்பத்துக்கு பழரசம் கொடுத்து சமா ளிக்கப் பார்த்தும், கட்சிக்குள் நாறிக்கிடந்த கோஷ்டிச் சண்டையைத் தெருவுக்குக் கொண்டு வரத்தான் செய்தது. அண்ணாவின் தம்பிகள் இதனை தா.கிருஷ்ணன் கொலை வரை செவ்வனே செய்து வருகின்றனர்.

அண்ணாவின் பொருளாதாரக்கொள்கை என்ன என் பதைப் படித்தால் முதலாளித்துவத்தை ஆதரிப்பவர்கள் கூட விழுந்து விழுந்து சிரிப்பார்கள். ''உற்பத்திப் பொருட்களை வாங்கும் பொதுமக்கள் கொடுக்கும் விலைதான் தொழிலா ளிக்கும் முதலாளிக்கும் முறையே கூலியாகவும் இலாபமா கவும் போய்ச் சேருகிறது. அதைப் பங்கு போட்டுக் கொள் வதில் தொழிலாளி, முதலாளி ஆகிய இரு சாராருக்கும் இடையில் ஏற்படும் சச்சரவில் தலையிட்டுத் தீர்த்து வைக்கும் உரிமை பொதுமக்களுக்கு வேண்டும். இந்த உரிமையைப் பொதுமக்கள் உணரவும், உணர்ந்து நியாயம் கூறவும் தகராறு களைத் தீர்க்க முன்வருமாறும், பொதுமக்களை அழைக்கும் பணியை கழகம் செய்கிறது. தொழிலாளருக்கும் முதலா ளிக்கும் இடையே ஓர் அன்புத் தொடர்பு ஏற்படுத்தும் ஓர் அரிய காரியம் அது'' என்று அண்ணா சொன்னார்.

வர்க்க சமரசத்தைக் கொள்கையாகக் கொண்ட அண் ணாவின் தி.மு.க.வோ தன்னையே உண்மையான கம்யூ னிஸ்ட் கட்சி என்றும் ''மாஸ்கோவிற்கு செல்வோம். மாலங் கோவைச் சந்திப்போம். நாங்களே உண்மையான கம்யூ

**பிழைப்புவாதமும் கவர்ச்சிவாதமுமே கொள்கை: அண்ணாவுடன் அவரது அரசியல் வாரிசுகளான மு.க.வும்., எம்.ஜி.ஆரும்.**





படிப்பகம்

www.padippakam.com

னிஸ்டுகள் என்போம்'' என்றும் சொன்னது. அடிமுட்டாள் தனமான பொருளாதாரத் தத்துவத்தை சொன்னவரோ 'பேரறிஞர்' எனும் பட்டமும் பெற்றார். இவர் முதல்வரான பின்னர் கீழ்வெண்மணியில் விவசாயத் தொழிலாளர்கள் கொளுத்தப்பட்டனர். அப்போது இந்த 'உண்மையான' கம்யூனிஸ்டால் பல் விளக்காமல் காலையில் அழமட்டுமே முடிந்தது.

கற்புக்கரசி கண்ணகி என்று தமிழ்நாட்டுக்கு ஒரு சீதையை உயர்த்திப் பிடித்த அண்ணாவின் அத்தனை தம்பிமாரும் கோவலன்களாகி ஒழுக்கக்கேட்டில் மூழ்கிக் கிடந்தார்கள். அண்ணாவும் விதிவிலக்கல்ல. இந்தக் கேடுகெட்ட போக்கினை ''நான் முற்றும் துறந்த முனிவனுமல்ல. அவள் படிதாண்டா பத்தினியுமல்ல'' என கூச்சநாச்சமின்றி இப்'பேரறிஞர்' விளக்கம் வேறு தந்தார்.

எல்லோரிடமும் நல்லவர் என்று பேரெடுக்க 'எதையும் தாங்கும் இதயம்' பெற்றிருந்த (அதாவது சுயமரியாதையை இழந்து நின்ற) அண்ணா இறந்ததும், தி.மு.க. தலைமையே திணறிப் போய்விட்டது. அண்ணாவே எல்லாவற்றையும் உதறிவிட்ட பின்னர், இனி எதைக் கொள்கை என்று சொல்வது? ரொம்ப நாள் யோசித்து ஒரு கொள்கையைத் தி.மு.க. அறிவித்தது. அது ''அண்ணா வழியில் அயராது உழைப்போம்!'' இவ்வாறு 70-களில் வெறும் முழக்கமே கொள்கையாகப் பரிணாம வளர்ச்சி அடைந்தது. 90-களிலோ மூஞ்சிகளே கொள்கைகளாகி 'கலைஞர்', 'தளபதி' என மாறிப்போனது. அவர் உருவாக்கிய கழகமோ பல கூறுகளாகி பாசிச காங்கிரசோடும் இந்துவெறி பார்ப்பன பாசிசத்தோடும் கூட்டணி கட்டிக் கொண்டு நாற்காலி சுகம் தேடிச் சீரழிந்து விட்டன.

பேரறிஞராகத் துதிக்கப்படும் அண்ணா, தனது பேச்சாலும் எழுத்தாலும் இன உணர்வை, மொழியுணர்வை ஊட்டி, கற்பனையான இலட்சியத்துக்கு மாயக் கவர்ச்சியூட்டினார். அந்த இலட்சியத்தைச் சாதிக்க தொடர்ச்சியான போராட்டத்தையோ, அதற்கான அமைப்பையோ அவர் கட்டியமைக்க முயற்சிக்கவேயில்லை. காங்கிரசை வீழ்த்தவிட்டு, அதற்குப் பதிலாக ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்யும் பிழைப்புவாத இயக்கமாகவே தி.மு.க.வை அவர் வழிநடத்தினார்.

கொள்கை - இலட்சியமற்ற பிழைப்புவாதமும் கவர்ச்சிவாதமுமே அவரது சித்தாந்தம். துரோகத்தையும் சந்தர்ப்பவாதத்தையும் நாக்கைச் சுழற்றி நியாயப்படுத்தும் இப்பிழைப்புவாதம், தி.மு.க.வை மட்டுமின்றி தமிழகத்தின் அனைத்து ஓட்டுக் கட்சிகளையும் கவ்வியிருப்பதோடு, அரசியல் அரங்கில் வெட்டி வீழ்த்தப்பட வேண்டிய நச்சு மரமாக ஓங்கி நிற்கிறது. எல்லா வண்ணப் பிழைப்புவாதத்தோடும் எல்லாவகை கவர்ச்சிவாதத்தோடும் ஆளுர் வர்க்கங்களுக்குச் சேவை செய்யும் புதிய சித்தாந்தத்தை உருவாக்கி வளர்த்தவர் என்பதாலேயே, எல்லா பிழைப்புவாதிகளும் அண்ணாதுரையை தமது மூலவராக வணங்கித் துதிபாடுகின்றனர்.

● கதிர்

# ஏ.ஐ.டி.யு.சி. வழங்கும் முற்போக்கு கொழுக்கட்டை!

**கா**ங்கிரசையும் பா.ஜ.க.வையும் புறக்கணித்து விட்டு, மதச்சார்பற்ற மூன்றாவது அணி கட்டப் போவதாக கூறி வருகிறார், வலது கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளரான தா.பாண்டியன். மதச்சார்பின்மை என்றால் அனைத்து மதங்களின் பண்டிகைகள் - விழாக்களில் ஊக்கமாகப் பங்கேற்று, கூடிக் குலாவி வாழ்த்து தெரிவிப்பது - மத நல்லிணக்கத்தைப் பேணுவது என்று போலி கம்யூனிஸ்ட் கட்சிகள் கற்பித்துக் கொண்டுள்ளன. இதன்படியே, தமிழகமெங்கும் சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்கங்கள், இந்துமத ஆயுத பூஜை பண்டிகையை நீண்டகாலமாக சீரும் சிறப்புமாக நடத்தி வருகின்றன. சி.பி.எம். கட்சியின் சி.ஐ.டி.யு.வை விட முற்போக்கான சங்கமாகக் காட்டிக் கொள்ளும் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் ஏ.ஐ.டி.யு.சி. சங்கத்தின் கோவில்பட்டி நகரக் கிளை, இவ்வாண்டு இந்துமத விநாயகர் சதுர்த்தி பண்டிகையை சீரும் சிறப்போடும் கொண்டாடி, பூசைகள் நடத்தி மக்களுக்கு கொழுக்கட்டை வழங்கியிருக்கிறது. இது அச்சங்கத்தின் 13-வது ஆண்டு விழாவாம். இதற்காக பேருந்து நிறுத்தத்தில் அலங்கார வளைவு அமைத்து அசத்தி விட்டார்கள்.




விநாயகர் சதுர்த்தியை வைத்துத்தான் அன்றைய திலகர் முதல் இன்றைய ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி கும்பல்கள் வரையான பார்ப்பன-பாசிஸ்டுகள் அரசியல் பண்ணுவதையும், உழைக்கும் மக்களின் ஒற்றுமையைப் பிளவுபடுத்தி இரத்தம் குடிக்கும் வெறியாட்டங்களில் ஈடுபடுவதையும் தொடர்ந்து செய்து வருகின்றன. ஆனால், போலி கம்யூனிஸ்டுகளுக்கு விநாயகர் சதுர்த்தி என்பது மக்கள் திருவிழாவாம்; பண்டிகையாம்! எனவே, மக்களோடு ஐக்கியப்பட்டு தாங்களும் விழா நடத்தி 'புரட்சி' செய்கிறார்களாம்! இப்படித்தான் அன்றைய வலது கம்யூனிஸ்டுத் தலைவரான கல்யாண சுந்தரம், சிறீரங்கம் கோயில் தேர் இழுத்து 'மக்களோடு ஐக்கியப்பட்டு புரட்சி' செய்தார். அந்த வழியில், ஏ.ஐ.டி.யு.சி. சங்கமும் அடுத்துவரும் ஆண்டுகளில் இந்து முன்னணிக்குப் போட்டியாக விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை செங்கொடியேந்தி நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ●

www.padippakam.com



# கவர்ச்சித் திட்டங்கள் வறுமையை ஒழிக்குமா?

வறுமை காரணமாக தனது குழந்தைகளை அடுத்தடுத்து கிணற்றில் தள்ளி தானும் தற்கொலை செய்து கொண்ட நல்ல தங்காள் கதை இன்றைய இளைய தலைமுறையினர் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், அத்துயரக் கதை இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த மாதத்தில் சேலம் அருகே வறுமை காரணமாக தான் பெற்று வளர்த்த மூன்று குழந்தைகளை கிணற்றில் தள்ளி தானும் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்ள முயன்றார் ஒரு இளம் பெண். மூன்று குழந்தைகளும் மாண்டுபோக, அவர் மட்டும் காப்பாற்றப்பட்டு வேதனையில் விம்மிக் கொண்டிருக்கிறார்.


வறுமையின் கொடுமையை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. இது ஏதோ விதிவிலக்கான துயரச் சம்பவம் என்று ஒதுக்கி விடவும் முடியாது. இன்று அந்த மூன்று குழந்தைகள்; நாளை...? ஒருவரல்ல, இருவரல்ல; தமிழகத்தில் பாதிப்பேர் வறுமையில் உழலும் ஏழைகள் என்ற அதிர்ச்சியூட்டும் தகவலை அளித்திருக்கிறது, உலக வங்கியின் புள்ளி விவர அறிக்கை.

உலக வங்கியும் ஆசிய வளர்ச்சி வங்கியும் உலகளாவிய வறுமை குறித்த புதிய ஆய்வுகளை மேற்கொண்டு புள்ளி விவர அறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள அளவுகோலின்படி ஒரு டாலருக்கும் கீழான வருமானம் உள்ளவர்கள் ஏழைகள் என்று உலக வங்கி வரையறுத்தது. ஒரு மனிதனுக்கு உயிர் வாழத் தேவையான, குறைந்தபட்சம் 2100 கலோரிகள் சத்து தரும் உணவை வாங்குவதற்கு எவ்வளவு தொகை தேவையோ அதை அடிப்படையாக வைத்து, சராசரியாக 1.25 டாலருக்கும் (ரூ.55) குறைவான வருமானமுள்ளவர்களை வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள ஏழைகள் என்று உலக வங்கி வரையறுத்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியோ சராசரியாக 1.35 டாலர் என்று வரையறுத்துள்ளது. இந்த அளவுகோலின்படி, உலகிலேயே ஏழைகள் நிறைந்த நாடு இந்தியாதான். உலகெங்கும் வறுமையில் உழலும் ஏழைகளில் 33.3% பேர் இந்தியாவில் உள்ளனர்.

இந்திய மக்களில் 82 கோடியே 80 லட்சம் பேரின் (ஏறத்தாழ 75.6 சதவிகிதம் பேரின்) தினசரி வருமானம் 80 ரூபாய்க்கும் குறைவாக உள்ளது. இந்தியர்களில் 45 கோடியே 60 லட்சம் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர். அதாவது, இவர்களின் தினசரி வருமானம் ரூபாய் 50-க்கும் கீழாக உள்ளது. 1981-ஆம் ஆண்டில், 42 கோடியே 10 லட்சம் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்தனர் என்றும், 1991 முதல் 2005-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட 15 ஆண்டுகளில் வறியவர்களின் எண்ணிக்கை 45 கோடியே 60 லட்சமாக அதிகரித்துள்ளது என்றும் உலக வங்கியின் அறிக்கை குறிப்பிடுகிறது. அதாவது, தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கப் புதிய பொருளாதாரக் கொள்கைகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தில்தான், இந்தியாவில் வறுமையும் வறியவர்களும் அதிகரித்துள்ளனர்.

தமது ஆட்சிகளைப் பொற்கால ஆட்சிகளாக கருணாநிதியும் ஜெயலலிதாவும் பீற்றிக் கொள்ளும் தமிழகத்தில், 55 ரூபாய்க்கும் கீழாக வருமானமுள்ளவர் ஏறத்தாழ பாதிப்பேராக உள்ளனர். வேலையின்மை, விலைவாசி உயர்வு, சமூகநலத் திட்டங்கள் புறக்கணிப்பு முதலானவற்றால் வறியவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக உலக வங்கி அறிக்கை குறிப்பிடுகிறது. தொழில் வளர்ச்சி 6 சதவீதத்தையும் தாண்டி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுவதாகச் சித்தரிக்கப்படும் தமிழகத்தின் நிலையே இதுதான் என்றால், இதர

வறுமையின் கொடுமை தாளமுடியாமல் தனது மூன்று குழந்தைகளைக் கொன்று விட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயன்று உயிர் தப்பிய ஜெயலட்சுமி மற்றும் இறந்து போன அவரது குழந்தைகள்.





படிப்பகம்

www.padippakam.com

பின்தங்கிய மாநிலங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

பட்டினியால் வாடும் மக்களின் தன்மையை அளவிடும் அனைத்துலக குறியீட்டு எண் பட்டியலில் இந்தியா 94-வது இடத்தில் மிகவும் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. பட்டினிச் சாவுகள் தொடரும் எத்தியோப்பியா, இந்தியாவை விட மேலான நிலையில் உள்ளது.

இந்தியாவில் 60 சதவிகித குழந்தைகள் வறுமையாலும் சத்துணவின்மையாலும் மாண்டு வருவதாக யுனிசெஃப் நிறுவனம் கூறுகிறது. தமிழகத்தில் வயதுக்கேற்ற எடை இல்லாமல் 33 சதவிகிதம் குழந்தைகளும் இரத்த சோகையால் 73 சதவிகிதக் குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் மத்தியப் பிரதேசத்தின் சத்னா மாவட்டத்தில் மாவாசி பழங்குடியினத்தைச் சேர்ந்த 24 குழந்தைகள் ஊட்டச்சத்து குறைவினால் அடுத்தடுத்து மாண்டு போயுள்ளன. தேசிய ஊட்டச் சத்து திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி படிப்படியாகக் குறைக்கப்பட்டதன் கோரமான விளைவுதான் இது.




உலக வங்கியின் நிதியுதவியோடு செயல்படுத்தப்படும் ஒரு ரூபாய் அரிசித் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் தமிழக முதல்வர் மு. கருணாநிதி.

மருத்துவம் தனியார்மயமாக்கப்பட்டதன் விளைவாகவும், மருந்து விலைகள் தாறுமாறாக உயர்ந்ததன் விளைவாகவும் ஏழைகளால் மருத்துவ வசதியைப் பெறவே முடிவதில்லை. உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வுப்படி இந்தியாவில் மருந்து விலைகள் அதிகரித்ததன் விளைவாக 16 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே போயுள்ளனர்; 43 சதவிகித மக்கள் நிரந்தரக் கடனாளியாகியுள்ளனர்.

தமிழகத்தில் விவசாயக் கடன் ஏழாயிரம் கோடியைத் தள்ளுபடி; விவசாயக் கடனுக்கான வட்டி 7 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைப்பு என்றெல்லாம் திட்டக் குழு அதிகாரிகள் அறிவித்தாலும், இதன் பலன்கள் அனைத்தும் பணக்கார விவசாயிகளுக்குத்தான் போய்ச் சேர்ந்துள்ளது. இடுபொருட்களின் விலையேற்றம், உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமை, கந்துவட்டிச் சுமை முதலானவற்றால் தமிழக விவசாயிகள் பெரும் கடன் சுமையில் சிக்கித் தவிக்கிறார்கள் என்பதை ஏற்கெனவே பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

வறுமைப் படுகுழியில் நாட்டின் பெரும்பான்மை மக்கள் தள்ளப்பட்டுள்ள அதேநேரத்தில், மேட்டுக்குடியினருக்கான ஆடம்பரப் பொருட்களின் சந்தை 35% விரிவடைந்திருக்கிறது. இந்தியாவின் 5 பெரும் நிறுவனங்களின் உயரதிகாரிகளின் சராசரி வருமானம் 1.35 கோடியாக உயர்ந்துள்ளது. அதே நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளிகளின் வருமானத்தைவிட இது 20,000 மடங்கு அதிகம். இதை விவசாயக் கூலித் தொழிலாளிகளின் வருமானத்தோடு ஒப்பிட்டால் 32,000 மடங்கு அதிகம். நாட்டிலுள்ள 10 சதவிகிதப் பணக்காரர்கள் 52 சதவிகிதச் சொத்துக்களையும் வளங்களையும் அனுபவிக்கும்போது அடிமட்டத்திலுள்ள 10 சதவிகித ஏழைகள் அனுபவிக்கும் வளங்களோ வெறும் 0.2 சதவிகிதமாகச் சுருங்கி விட்டது. இந்தியா, பஞ்சைப் பராரிகளின் நாடு மட்டுமல்ல; ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட கோடீசுவரர்களையும் கொண்ட நாடு என்பது வேதனை கலந்த உண்மை.

இந்த உண்மையை உலக வங்கியே தற்போதைய புள்ளிவிவர அறிக்கையில் ஒப்புக் கொண்டுள்ளது. "வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்திய போதிலும் பல ஏழை நாடுகளில் உலக வங்கியின் திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன. வளர்ச்சிக்கும் விநியோகத்துக்குமிடையே மிகப் பெரிய இடைவெளி ஏற்பட்டு பல லட்சக்கணக்கான மக்கள் வறுமையில் உழன்று கொண்டிருப்பது மிகவும் வேதனையளிக்கிறது" என்று அந்த அறிக்கை அங்கலாய்க்கிறது.

ஆட்சியாளர்களின் எஜமானராகிய உலக வங்கியே உண்மையைச் சொன்னாலும், ஆட்சியாளர்கள் இதை ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். "இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திட்டுத்திட்டாக எடுக்கப்பட்ட கணக்கீடுகளின் அடிப்படையில் உலகவங்கி இந்த அறிக்கையைச் சமர்பித்துள்ளது. அதை வைத்து தமிழகத்தை பஞ்சைப் பராரிகளின் மாநிலம் என்று முடிவு செய்வது தவறானது" என்று அவர்கள் வேறு சில புள்ளிவிவர சதவிகிதக் கணக்கு காட்டுகின்றனர். ஆனால், உண்மைகளை உரசிப் பார்க்க புள்ளிவிவரங்கள் அவசியமில்லை. நாட்டு மக்களின் யதார்த்த வாழ்க்கை நிலைமைகளே வறுமையின் கோரத்தை உணர்த்தி விடுகின்றன. தமிழகம் அறிவிக்கப்படாத கஞ்சித் தொட்டியாக மாறியிருப்பதே இதற்குச் சான்று கூறப் போதுமானது.

கடந்த ஜூலையில், தமிழக அரசின் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக உலக வங்கி 12 கோடி டாலர் (ஏறத்தாழ 528 கோடி ரூபாய்) கடனாகக் கொடுத்துள்ளது. இதற்கு புதுவாழ்வுத் திட்டம் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்நிதியைக் கொண்டுதான் தற்போது ஒரு ரூபாய்க்கு அரிசி தரும் திட்டத்தைக் கவர்ச்சிகரமாக அறிவித்து தி.மு.க. அரசு ஆரவாரம் செய்கிறது. வறுமையில் சிக்கித் தவிக்கும் மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து மீட்க, உலக வங்கி நிதியைக் கொண்டு ஒரு ரூபாய் அரிசி திட்டத்தின் மூலம் அறிவிக்கப்படாத கஞ்சித் தொட்டியை தமிழக அரசு தொடங்கியிருக்கிறது.

இக்கசப்பான உண்மைகளை ஆட்சியாளர்கள் மூடி மறைக்கலாம். ஆனால், பசித்த வயிறுகள் அமைதியாக இருக்கப் போவதில்லை.

● கவி

www.padippakam.com

# சென்னை: விற்பனைக்கு!

## இரண்டாவது மாஸ்டர் பிளானின் மகாத்மியங்கள்!

சென்னை, தியாகராய நகர் சரவணா ஸ்டோர்ஸ் பாத்திரக் கடையில் ஏற்பட்ட தீ விபத்தில், அந்தக் கட்டிடத்திலிருந்து வெளியேற முடியாமல் சிக்கிய இரண்டு தொழிலாளர்கள் உயிரிழந்தனர். அந்தக் கட்டிடம் விதிகளை மீறிக் கட்டப்பட்டதால்தான் தீயை அணைக்கவும், உள்ளே சிக்கியவர்களைக் காப்பாற்றவும் முடியவில்லை என்று தீயணைப்புக் குழுவினர் கூறியுள்ளனர். அதனால் தற்போது சரவணா ஸ்டோர்ஸ் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் நெரிசல் மிகுந்த இடத்தில், எந்தவித பாதுகாப்பு வசதிகளும் இன்றி இந்தக் கட்டிடம், இவ்வளவு விதி மீறல்களுடன் கட்டவும், இயங்கவும் அனுமதி கொடுத்த அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சரவணா ஸ்டோர்ஸ் கடை மட்டுமன்றி தி.நகரில் உள்ள கடைகளில் பெரும்பாலானவை விதிகளை மீறித்தான் கட்டப்பட்டுள்ளன. இந்தக் கட்டிடங்களினால் பொதுமக்களின் உயிருக்கு எப்போதும் ஆபத்துதான். ஆனால், இதனை ஒழுங்குபடுத்த வேண்டிய மாநகராட்சி அதிகாரிகள் இது குறித்து கவலைப்படுவதே இல்லை. பொதுமக்கள் நலனில் சிறிது கூட அக்கறையில்லாத, லஞ்ச பணத்திற்கு எளிதில் விலை போகக்கூடிய, இப்படிப்பட்ட அதிகாரிகளை நம்பித்தான் இந்த அரசு சென்னை நகரத்தை உலகின் தலைசிறந்த நகரங்களில் ஒன்றாக மாற்றியமைக்கப் போகிறதாம். இதற்கென சென்னை மாநகரப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் இரண்டாவது மாஸ்டர் பிளான் திட்டம் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

அந்தத் திட்டத்தின்படி, சென்னையைத் தகவல் தொழில்நுட்பத் துறையின் முதலீட்டாளர்களைக் கவரும் நகரமாக மாற்ற உலகத் தரம் வாய்ந்த நெடுஞ்சாலைகள், தடையற்ற மின்சார விநியோகம், நல்ல தகவல் தொடர்பு சாதனங்கள் போன்றவை ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் அதிகமான முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் அவை மேலும் அதிகரிக்கப்படும். சென்னையில் இன்னும் இரண்டு இடங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படும்.

சென்னைக்கு அருகில் உள்ள ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு, மாமல்லபுரம் ஆகிய பகுதிகளில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கும் வகையில் விளைநிலங்களை அரசே கையகப்படுத்தி பன்னாட்டு, தரகு நிறுவனங்களுக்குக் கொடுக்கும். ஏற்கெனவே உள்ள தகவல் தொழில்நுட்பக் கம்பெனிகளுக்கும், இனி புதிதாக வரப்போகும் கம்பெனிகளுக்கும், ஒரு நாளைக்கு 50 கோடி லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. அதுமட்டுமில்லாது நகரைச் சுற்றிலும் புதிது புதிதாக ஏற்பட்டு வரும் குடியேற்றங்களுக்கும் தண்ணீர் தேவைப்படுகிறது. இதனை ஈடுகட்ட ஐரோப்பிய பாணியில், குடியிருப்புகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரைப் பயன்படுத்தும் திட்டம் கொண்டுவரப்படவிருக்கிறது. மேலும் அனைத்து குடியிருப்புக்களுக்கும் நீர்மானி (மீட்டர்) பொருத்தப்படும். இதன் மூலம் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் செலவும், நீருக்கான விலையும் மக்கள் தலையில் சுமத்தப்படும். இத்திட்டத்தின் முதல்படியாக 400 சதுர அடிக்குள் வசிக்கும் குடும்பங்களுக்கு இதுவரை இலவசமாக வழங்கப்பட்ட பொதுக் குழாய்கள் ஒழிக்கப்பட்டு, குடிநீர் இணைப்புக்கு 100 ருபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது மட்டுமல்லாமல், சென்னை நகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள 320-க்கும் அதிகமான ஏரிகள் புதுப்பிக்கப்பட்டு அவை குடிநீர் ஆதாரமாக மாற்றப்படும். இதன் மூலம் அந்த ஏரிகளை நம்பி விவசாயம் செய்து வருபவர்கள் விவசாயத்தைக் கைவிட்டுவிட வேண்டும்.

ஊருக்கெல்லாம் உணவளிக்கும் விவசாயத்துக்கு நீர் தருவதை விட, சென்னை நகருக்கு வரப்போகும் பன்னாட்டு நிறுவனங்களின் கழிவறைகளுக்கு நீரை விநியோகிப்பதுதான் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கவலையாக இருக்கிறது.

மருத்துவத் துறையில், தனியார் மற்றும் பொதுத்துறையின் கூட்டு நிறுவனங்களின் மூலம் சேவைகள் அளிப்பதென்றும், இத்துறையில் தனியாரின் பங்கீட்டை அதிகரித்து சுகாதார உள்கட்டமைப்புத் திட்டம் ஒன்றைத் தீட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்களுக்கு இலவச மருத்துவ சேவையளிக்கும் பொறுப்பை மாநகராட்சி தட்டிக் கழிக்கப் போகிறது.

விதிமுறைகளை மீறிக் கட்டப்பட்ட சரவணா ஸ்டோர்ஸ் கட்டிடத்தில் ஏற்பட்ட தீ விபத்து பெரும் போராட்டத்திற்குப் பிறகு அணைக்கப்படும் காட்சி.





படிப்பகம்

www.padippakam.com

ஆலந்தூர் நகராட்சியில் தனியாருடன் இணைந்து செயல்படுத்தப்படும் திடக் கழிவு மேலாண்மை, சென்னை முழுக்க விரிவாக்கப் படும். ஏற்கெனவே ஓனிக்ஸ் நிறுவனம் குப்பைகளை அள்ளாமல் பாதியில் விட்டுச் சென்ற போது, சென்னை நகரில், ஒரு வாரம் வரை குப்பைகள் தேங்கி நகரமே நாறியதும், பின்பு போலீசுத்துறையைக் கொண்டு குப் பைகளை அள்ளச் செய்ததும் நாம் அறிந்ததே. தனியாரின் பொறுப்பற்ற தன்மையின் பலனை அனுபவித்த பிறகும், தற்போது திடக் கழிவு மேலாண்மை முழுவதையும் தனியார் வசம் ஒப்படைக்கப் போகின்றனர்.



சென்னை பெருநகருக்கான இரண்டாவது முழுமைத் திட்டத்தை (மாஸ்டர் பிளான் 2) வெளியிடும் தமிழகச் செய்தித்துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி. (இடது).

சென்னை நகரில் பன்னாட்டு நிறுவ னங்களால் வந்து குவிக்கப்படும் பயன்பாடு முடிந்த கணிணி போன்ற மின்னணு கழிவுப் பொருட்களால் உருவாக்கப்படும் மாசு பற்றியோ, அவற்றை எவ்வாறு கட்டுப்படுத் துவது என்பது பற்றியோ மாஸ்டர் பிளானில் எத்திட்டமும் கிடையாது. பாதரசம், காட் மியம் போன்ற நச்சுப்பொருட்களை உமிழும் இக்குப்பைகளால் சென்னை நகரம் ஏற்கெனவே உலகின் குப்பைத் தொட்டியாக மாற்றப்பட்டு வருகின்றது.

பேரிடர் மேலாண்மை எனும் திட்டப்படி இனி தீவிபத்து, நிலநடுக்கம் போன்றவற்றால் நகரம் பாதிப்புற்றால் தன்னார்வ நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டர்படை அடங்கிய குழு ஒன்று அதனைச் சமாளிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும். நகரமே நாசமானாலும் இடர்ப்பாட்டை இனி அரசுத்துறை சமாளிக்காது.

சுற்றுலா மேம்பாட்டுக்கென பக்கிங்காம் கால்வாயைச் சுத்தம் செய்து அதில் படகு விடுதல், சென்னை நகரில் உள்ள ஏரிகளில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் பூங் காக்கள், படகுச் சவாரி எனவும் திட்டமிடப்பட்டுள்ளது. கடற்கரையை அழகுபடுத்தி நட்சத்திர விடுதிகளுக்குக் கொடுத்திடவும் திட்டமுள்ளது. கிழக்குக் கடற்கரை சாலைக்கு இணையாக கடற்கரையோரமாக படகுப் போக்குவரத்தின் மூலம் சாலை வழி போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத் தவும் திட்டமுள்ளது. இத்திட்டம் நடைமுறைக்கு வரும்போது கடற்கரை எங்குமே மீனவர்கள் குடியிருக்க முடியாத நிலை உருவாக்கப்படும். படகுப் போக்குவரத் தினால் மீன்பிடித்தொழிலே முற்றிலுமாக அழிக்கப்பட்டு விடும்.

நகரை அழகுபடுத்திட கூவத்தின் கரைகளிலும், கடற் கரையிலும், ஏரி குளங்களிலும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவ தாகக் கூறி, ஏழை உழைக்கும் மக்களின் குடிசைகளை அகற்றி, அவர்களை நகரத்தை விட்டு வெளியே துரத்தவும் திட்டமிட்டுள்ளனர். இதற்கென சமீபத்தில் அவசரச் சட்டம் ஒன்றும் கொண்டு வரப்பட்டுள்ளது. நீர் நிலைகளின் கரை களில் உள்ள குடியிருப்புகளை அகற்றும் போது எதிர்ப்பவர் களைக் கடுமையாகத் தண்டிக்கவும் அந்த சட்டம் வழி செய்கிறது.

இதேபோல் பாண்டிபஜார் போன்ற இடங்களில் நடைபாதை, சாலையோர பிளாட்பாரக் கடைகளைக் காலி செய்து, கடுமையாக தண்டிக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றும் வரப்போகிறது. ஆனால், இதே பாண்டி பஜார் போன்ற பகுதிகளில் கார் நிறுத்த வழியில்லாமல் 'மிகவும் சிரமத்துக்குள்ளாகும்' மேட்டுக்குடியினருக்கு உதவும் வகையில் பல மாடிகளைக் கொண்ட வாகன நிறுத்து மிடங்களை நகரம் முழுவதும் அரசே தனது சொந்த செலவில் கட்டிக் கொடுக்கும்.

வெளிநாட்டு முதலாளிகள் வந்து போக வசதியாக ஸ்ரீபெ ரும்புதூரில் ஒரு சர்வதேச விமான நிலையம் அமைக்கப் படும். ஏற்கெனவே உள்ள சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து இந்தப் புதிய விமான நிலையத்திற்கும், மற்றும் சென்னையிலும் புற நகரிலும் உள்ள அவர்களது நிறு வனங்களுக்கு அவர்கள் தடங்கலின்றிப் போய்வரும் வகையில் உலகத் தரத்தில் சாலைகள், மேம்பாலங்கள் கட்டப் படும். மீனம்பாக்கம் விமான நிலையத்தின் தேவை இனி இல்லை என்பதால் விமானங்கள் தரை இறங்குவதற்கான இடைஞ்சல் இனி இல்லை. இதனையே காரணமாக்கி 100 மாடிகள் வரை கட்டிடங்கள் கட்டிக் கொள்ளலாம் என விதிமுறை திருத்தப்பட்டு விட்டது. உல்லாச அடுக்குமாடிக் குடியிருப்புகளில் அந்நிய மூலதனம் வந்து குவிந்து நிலத்தர கர்களும் கட்டிடத் தொழில் தாதாக்களும் கோடிக்கணக்கில் புரள வழி செய்யப்பட்டு விட்டது. அவ்வாறு செய்யும்போதே ஏழைகளுக்கும் அக்குடியிருப்பில் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று நலிந்தோருக்குக் கருணையும் காட்டி இருக் கிறது மாஸ்டர் பிளான். இது காகிதத்தில் எழுதி நக்கச் சொல் லப்படும் சர்க்கரைதான் என்பதற்கு ஏற்கெனவே இப்படிப் பட்ட உத்தரவுகள் கடைப்பிடிக்கப்பட்ட லட்சணமே சாட்சி.

மாஸ்டர் பிளான் என்பது யாரால் யாருக்காகத் திட்டமி டப்பட்டது என்பதும் மாஸ்டர் பிளான் திட்டத்திலேயே தெளி வாகக் கூறப்பட்டுள்ளது. உலகமயமாக்கலுக்கு ஏற்ற வகையில் சென்னையை நவீன காலனியாக மாற்றி அமைத்து பன்னாட்டு நலன் காத்திட உலக வங்கி தீட்டித் தந்த திட்டமே இது. இதற்குரிய நிதி ஆதாரத்தையும் தந்து திட்டங்களில் தனி யாரைப் புகுத்தி நிர்வாகத்தையே மறுசீரமைத்துள்ளனர். இத் திட்டங்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் மீனவர்களும், குடிசைவாழ் மக்களும் கறிவேப்பிலையைப் போலத் தூக்கி எறியப்பட்டுத்தான் மாஸ்டர் பிளான் நிறைவேற்றப்பட உள்ளது.

• அழகு


படிப்பகம்

www.padippakam.com

## ஓரிசா:

# பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக்காடு! இந்து மதவெறியின் சோதனைச்சாலை!!



இந்து மதவெறிக் கும்பலால் எரிக்கப்பட்ட பிரேகா தேவாலயம். (நன்றி: இந்தியாடுடே).

ஒரிசா, பார்காரா மாவட்டத்திலுள்ள பாதம்பூரில் தொழு நோயாளிகளுக்கான சேவை மையம் மற்றும் ஒரு அனாதை இல்லத்தையும் பாதிரியார் எட்வர்டு சீகொய்ரா நடத்தி வருகிறார். கடந்த ஆகஸ்டு 25-ஆம் தேதி அவரது மையத்தின் கதவு வேகமாகத் தட்டப்படுகிறது. யாரோ உதவி கேட்டு தட்டுகிறார்கள் என்று நினைத்த பாதிரியார் உடனே கதவைத் திறக்கிறார். வெளியே ஆயுதங்களுடன் இந்து மதவெறிக் கூச்சலோடு ஒரு கும்பல் உள்ளே நுழைகிறது. சுமார் 45 நிமிடம் அந்தக் கும்பல் அவரை அடித்து நொறுக்குகிறது. தோளிலும், கையிலும் , மண்டையிலும் அடிபட்ட பாதிரியார் சுயநினைவற்று வீழ்கிறார். அவரை குளியலறையில் அடைத்த கும்பல், இல்லத்தில் இருக்கும் ரஜ்னி மஜ்கி எனும் 19 வயதுப் பெண்ணை உயிரோடு கொளுத்துகிறது. "ஃபாதர், என்னைக் கொளுத்துகிறார்கள்; எப்படியாவது காப்பாற்றுங்கள்" என்று அந்தப் பெண் கத்துவது அரை நினைவோடு மயக்கத்திலிருக்கும் பாதிரியாரின் காதில் மெல்லக் கேட்கிறது. இறுதியில் அந்தப் பெண்ணைக் கொன்ற கும்பல் சேவை மையத்தை தீ வைத்துக் கொளுத்துகிறது. தற்போது உடலில் பல எலும்பு முறிவுகளுக்காக மும்பையில் சிகிச்சை பெறும் இந்தப் பாதிரியார், உதவி கேட்டு அந்த இளம் பெண் கதறியது தன் வாழ்நாள் முழுவதும் துரத்திக் கொண்டே இருக்கும் என்று வருந்துகிறார்.

பெற்றோராலும், பின்னர் வளர்ப்பு பெற்றோராலும் கைவிடப்பட்டு அனாதை இல்லத்தில் தஞ்சம் புகுந்து இந்து மதவெறியர்களால் கொல்லப்பட்ட அந்தப் பெண், உண்மையில் ஒரு இந்துப் பெண். ஒரிசாவில் இந்து மதவெறியர்கள் தற்போது நடத்திவரும் கலவரங்களின் ஒரு கதைதான் இது. ஒவ்வொரு கதையும் 2002 குஜராத்தை நினைவுபடுத்துகிறது. குஜராத்தில் முசுலீம்களுக்குப் பாடம் புகட்டி விட்டோம், தற்போது ஒரிசாவில் கிறித்தவர்களுக்கு பாடம் புகட்டுவோம் என்று சங்கபரிவாரக் குண்டர்கள் திட்டமிட்ட முறையில் கலவரங்களையும், படுகொலைகளையும் ஒரிசாவில் நிகழ்த்தி வருகிறார்கள்.

ஆகஸ்டு 23-ஆம் தேதி காந்தமால் மாவட்டத்திலுள்ள ஜலஸ்பாட்டா ஊரிலிருக்கும் ஆசிரமத்தில் லக்சுமானந்தா சரஸ்வதி எனும் பிரபலமான 81 வயது விஸ்வ இந்து பரிஷத் தலைவரும், அவரது நான்கு சீடர்களும் இரவு எட்டு மணிக்கு ஆயுதம் தாங்கிய கும்பலால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இதை மாவோயிஸ்ட்டு கட்சியினரின் வேலை என போலீசு தெரிவிக்கிறது. அக்கட்சியும் இம்மாவட்டத்தில் மத வெறியைத் தூண்டி மக்களை பிரித்து வந்த சரஸ்வதியின் கொலைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்து மதவெறி அமைப்புக்கள், ஆயுதந்தாங்கிய கிறித்தவர்கள்தான் இந்தக் கொலையைச் செய்தனர் என அறிவித்துவிட்டு மாநிலம் முழுவதும் கலவரத்தில் இறங்கின. கிறித்தவ சமயத் தலைவர்களோ இந்தப் பழியை மறுத்துவிட்டு சி.பி.ஐ புலனாய்வு செய்யவேண்டுமென கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒரிசா அரசு, இந்த வேண்டுகோளை மறுத்துவிட்டது.

அடுத்து வந்த சில நாட்களில் மாநிலம் முழுவதும் 30 பேர் இந்துமதவெறியர்களால் கொல்லப்பட்டனர். காந்தமால் மாவட்டத்தில் மட்டும் பதினாறு பேர் கொல்லப்பட்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

ஆயிரக்கணக்கான கிறித்தவ பழங்குடி, தலித் மக்களின் வீடுகள் எரித்து நாசமாக்கப்பட்டன. பல்லாயிரம் கிறித்தவ மக்கள் காடுகளிலும், அகதி முகாம்களிலும் தஞ்சம் அடைந்திருக்கின்றனர். ஆகஸ்டு 25-ஆம் தேதி நூற்றுக்கணக்கான கிராமங்களின் வழியே சென்ற சரஸ்வதியின் இறுதி ஊர்வலத்தின் போதே இந்த வன்முறை வெறியாட்டங்கள் அரங்கேற ஆரம்பித்து விட்டன. பல பாதிரியார்கள், பெண் துறவிகள் நிர்வாணமாக்கப்பட்டு கொடூரமாக தாக்கப்பட்டனர். 20-க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் எரித்து சாம்பலாக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான தேவாலயங்கள் இந்து மதவெறியர்களால் தாக்கப்பட்டன.



சுட்டுக்கொல்லப்பட்ட விசுவ இந்து பரிசத் தலைவர் லக்சுமானந்தா சரஸ்வதி. (கோப்புப் படம்).
(நன்றி: இந்தியா டுடே).

ஒரிசாவின் மையத்தில் மலைகள்- காடுகள் இருக்கும் காந்தமால் ஒரு பின்தங்கிய மாவட்டமாகும். இங்கு இருப்புப் பாதைகளோ, தொழிற்சாலைகளோ எதுவும் இல்லை. பேருந்துப் போக்குவரத்தும் வெகு அபூர்வம்தான். 2515 கிராமங்கள் கொண்ட இம்மாவட்டத்தில் சுமார் எட்டு இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். மொத்த மக்கள் தொகையில் பாதிப்பேர் காந்தா எனும் பழங்குடி மக்களாவர். இவர்கள் இந்து மதவெறி அமைப்புக்களுக்கு ஆதவராக இருக்கின்றனர். இதற்கடுத்து கணிசமாக வாழும் பானோஸ் எனும் தலித் மக்கள் கிறித்தவ மதத்தைத் தழுவி வாழ்கின்றனர். மத ரீதியாக எடுத்துக் கொண்டால் மாவட்டத்தில் 25 சதவீதம்பேர் கிறித்தவர்களாகவும் மீதிப்பேர் இந்துக்களாகவும் இருக்கின்றனர். ஆனால் ஒரிசா மாநிலத்தில் 2.5 சதவீதம் பேர்தான் கிறித்தவர்களாக வாழ்கின்றனர். இந்துக்களின் சதவீதமோ 95 ஆகும். இந்தியாவிலேயே இந்துக்கள் அதிகமாக வாழும் மூன்றாவது பெரிய மாநிலம் ஒரிசாவாகும்.

காந்தாஸ் பழங்குடி மக்கள் எம்மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு வேலை வாய்ப்பில் பழங்குடி பிரிவினருக்குரிய இட ஒதுக்கீடு கிடைக்கும். ஆனால் பானோஸ் தலித் மக்கள் கிறித்தவர்களாக இருந்தால், அவர்களுக்கு தலித்துக்களுக்குரிய இட ஒதுக்கீடு கிடைக்காது. இதனால் இம்மக்கள் தங்களையும் பழங்குடி மக்கள் என்று போலிச் சான்றிதழ் கொடுப்பது நடைமுறையில் உள்ளது. அடுத்து, இம்மாவட்டத்தில் நிலம் யாருக்குச் சொந்தம் என்பதில் சட்டச் சிக்கல்கள் உள்ளன. பழங்குடி மக்களின் குழப்பமான சமூக அமைப்பினால் நிலம் விற்பதில்-வாங்குவதில் குழப்பம் உள்ளது. இதிலும் இரு பிரிவு மக்களுக்கும் முரண்பாடு உள்ளது. இரு மக்களும் குயி எனப்படும் ஒரே மொழி பேசினாலும், இவர்களுக்குள்ளே உள்ள முரண்பாட்டை இந்துமதவெறியர்கள் மதச்சாயம் பூசி வளர்த்து குளிர் காய்கின்றனர்.

ஒரிசாவிலும், காந்தமால் மாவட்டத்திலும் கிறித்தவ மிஷனரிகளின் சேவை 300 ஆண்டுகளுக்கும் மேலாக நடக்கிறது. மலேரியா முதலான தொற்று நோய்களாலும், கல்வி அறிவு கிடைக்கும் வாய்ப்பு அற்றும் வாழ்வும் சாவுமாக இருந்த மக்களை கிறித்தவ மிஷனரிகள்தான் காப்பாற்றினர். இப்போது இம்மக்களுக்கு முறையான கல்வியும், சுகாதாரமும் கிடைப்பதற்கு கிறித்தவமே காரணமாகும். இதனால் இம்மக்கள் இயல்பாக கிறித்தவ மதத்திற்கு மாறுவது நடக்கிறது. மேலும் ஒரிசாவில் மதம் மாறுவதற்கு அந்த மாவட்டத்தின் மாஜிஸ்ட்ரேட் அனுமதி தேவைப்படுகிறது. எந்த உள் நோக்கம், பண ஆதாயமின்றித்தான் மதம் மாற்றம் நடக்கிறது என்பதை உறுதி செய்துதான் அவர் அனுமதி அளிப்பார். ஒரு வகையில் இங்கே மதமாற்றத் தடைச்சட்டம் உள்ளது என்றே சொல்லலாம். 1967 சட்டப் பிரிவுதான் மதம் மாறுவதற்கு மேற்கண்ட நடைமுறையை வைத்திருக்கிறது. பல மாநிலங்கள் வைத்திருக்கும் மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு ஒரிசா சட்டம்தான் முன்மாதிரி.

ஒரே மொழி பேசும் இம்மக்களிடையே உள்ள சில முரண்பாடுகளைப் பயன்படுத்தித்தான் சங்க பரிவாரங்கள் காந்தமால் மாவட்டத்தில் வன்முறையை அரங்கேற்றி வருகின்றன. கிறித்தவ மக்களை இந்து மதத்திற்கு மாற்றுவது என்பதை இந்து மதவெறியர்கள் பல ஆண்டுகளாகவே செய்து வருகின்றனர். விசுவ ஹிந்து பரிசத், பஜ்ரங் தள், ஆர்.எஸ்.எஸ், வனவாசி கல்யாண் கேந்திரா என்று பல பெயர்களில் இவர்கள் செய்வதெல்லாம் மதமாற்றமும், பசு வதையை எதிர்ப்போம் என்ற பெயரில் கிறித்தவ மக்களை தாக்குவதும்தான். சுதீர் பிரதான் எனும் தாலுகா ஆர்.எஸ்.எஸ் செயலாளர் கூறுகிறார், ''ஒன்று கிறித்தவர்கள் இந்துக்களாக மதம் மாறவேண்டும்; இல்லையென்றால் அவர்கள் ஒரிசாவை விட்டு வெளியேற வேண்டும்''.

மலைவாழ் மக்களிடம் உள்ள எளிய மூடநம்பிக்கைகளை வைத்து சில முட்டாள்தனமான சடங்குகளை நடத்தி, இந்து மதவெறியர்கள் அம்மக்களை இந்துமதத்திற்கு மாற்றுகின்றனர். கிறித்தவ அமைப்புகள் அம்மக்களுக்கு சேவை புரியும் போது, சங்கபரிவாரங்கள் மதமாற்றுவதையும் அதற்கு இணையாக கலவரம் செய்வதையும் நடத்துகின்றன. ஒரிசாவில் பல ஆண்டுகளாகவே கிறித்தவர்களும், மிஷனரி நபர்களும் பஜ்ரங்தள் குண்டர்களால் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் வருகின்றனர். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரகாம் ஸ்டெயின்ஸ் என்ற மிஷனரி நபர் தனது இரு மகன்களுடன் 1999-ஆம் ஆண்டு உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இந்த படுபாதகச் செயலுக்கு தலைமை வகித்து தற்போது ஆயுள் தண்டனை பெற்ற தாரா சிங்கை, இந்து மதவெறியர்கள் ''ஹீரோ''வாக கொண்டாடுகின்றனர்.

ஒரிசாவில் தற்போது நடக்கும் கலவரத்திற்கும் 2002-ஆம் ஆண்டு குஜராத்தில் நடந்த கலவரத்திற்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. கோத்ராவின் எதிர்வினையை மோடி நியாயப்படுத்தியது போல முதல்வர் நவீன் பட்நாயக், சரஸ்வதியின் கொலைக்கான எதிர் கலவரத்தை நியாயப்படுத்துகிறார். அப்படி வெளிப்படையாகச் சொல்லவில்லை என்றாலும், அதிகார வர்க்கம் அப்படித்தான் நடந்து கொண்டது. இந்து மதவெறியர்கள் கிறித்தவ தேவாலயங்களை எரிப்பதையும், வீடுகளைச் சூறையாடுவதையும் போலீசு வேடிக்கை பார்த்தது. கலவரம் நடக்கும் பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட

www.padippakam.com

மத்திய துணை ராணுவப் படைகளெல்லாம் பல மணிநேரம் கழித்துத்தான் இலக்கை அடைந்தன. பாதைகளில் மரங்களை வெட்டிப் போட்டு பல்வேறு தடைகளை இந்து மதவெறிக் குண்டர்கள் ஏற்படுத்தியிருந்தனர். கலவரம் நடக்கும் எனத் தெரிந்தும், சரசுவதியின் இறுதி யாத்திரைக்கு அரசு அனுமதி அளித்தது.



இந்து மதவெறியர்களால் எரிக்கப்பட்ட கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த பழங்குடி இன விதவைத் தாயின் வீடு. (நன்றி: இந்தியா டுடே).

மற்ற கட்சித் தலைவர்களுக்கெல்லாம் ஊரடங்கு சட்டத்தைக் காட்டி காந்தாமால் செல்வதற்கு அனுமதி மறுத்த அரசு, விசுவ இந்து பரிசத்தின் வெறிபிடித்த தலைவரான பிரவீன் தொகாடியா முதலான இந்து மதவெறி அமைப்புத் தலைவர்களுக்கு மட்டும் அனுமதி அளித்தது. இவர்களின் சுற்றுப் பிரயாணங்களும் ஆவேசப் பேச்சுக்களும் எரியும் தீயில் எண்ணெயை வார்த்தன. பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சியாக இருக்கும் பிஜூ ஜனதா தளம், இந்தக் கலவரத்தை வைத்து இந்துமதவெறியை எழுப்பி வரும் தேர்தலில் ஆட்சியை மீண்டும் பிடிக்கலாம் என்பதற்கேற்பவே அதன் அணுகுமுறைகள் இருந்தன. சங்க பரிவாரங்கள், சரசுவதியின் கொலையை வைத்து அரசியல் மேலாண்மையைப் பெறுவதற்கு திட்டமிட்டவாறு கலவரங்கள் புரிந்தன. ஆயுதங்கள், ஆட்கள், வண்டிகள் சேகரிப்பு எல்லாம் கச்சிதமாக நடந்து, ஒரிசாவின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டு கலவரங்கள் நடந்தன. உள்ளூர் நபர்களின் ஆதரவுடன் கிறித்தவ மக்களின் வீடுகள் குறிவைத்துக் கொளுத்தப்பட்டன.

இந்துத்துவத்தின் இரண்டாவது சோதனைச்சாலையாக மாறிவரும் ஒரிசா மறுகாலனியாக்கத்தின் சோதனைச்சாலையாகவும் இருக்கிறது. பல பகாசுரக் கம்பெனிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை கைப்பற்றி வருகின்றன. தம் வாழ்வுரிமையும், நிலங்களும் பறிக்கப்படுவதை எதிர்த்து ஒரிசா பழங்குடி மக்கள் பல போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அப்போராட்டங்களில் பலர் உயிரிழந்துமிருக்கின்றனர். இத்தகைய போராட்டங்களையெல்லாம் இந்து மதவெறி அரசியல் ரத்து செய்து மக்களின் போக்கை மடைமாற்றி விடுகிறது. மக்களின் எதிர்ப்புணர்ச்சியை மதவெறியாக மாற்றி ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று இந்து மதவெறியர்கள் திட்டமிடுவதற்கு இச்சூழல் தோதாக இருக்கிறது. அவ்வகையில் குஜராத்தின் பரிசோதனை ஒரிசாவிலும் அரங்கேற்றப்படுகிறது.

இந்தக் கலவரத்திற்கு காரணமான சரசுவதி கொலையை மாவோயிஸ்ட் கட்சியினர் செய்ததாக வைத்துக்கொண்டால், அக்கட்சியையும் நாம் விமரிசிக்க வேண்டியிருக்கிறது. இக்கொலையை செய்து விட்டு கிறித்தவ மக்களை நிராயுதபாணியாக இந்து மதவெறியர்களின் கையில் ஒப்படைப்பதற்கு மாவோயிஸ்ட்டுகள் காரணமாக இருந்திருக்கின்றனர். உழைக்கும் மக்களிடம் இந்து மதவெறியர்களை எதிர்த்து எந்த வெகுஜனப் போராட்டமும் நடத்தாமல், அப்படி ஒரு ஒற்றுமையை அரசியல் அரங்கில் ஏற்படுத்தாமல் இந்து மதவெறியை வீழ்த்த முடியாது. சில தலைவர்களைக் கொன்றதோடு தனது பணி முடிவடைந்து விட்டதாக மாவோயிஸ்ட்டுகள் கருதினால், அது சிறுபிள்ளைத்தனமாகும். என்னதான் ஆயுதப்படை வைத்திருந்தாலும் இந்து மதவெறியர்களால் கிறித்தவ மக்கள் கொல்லப்படுவதை தடுக்க முடியவில்லையே?

இசுலாமிய தீவிரவாதிகளால் வைக்கப்படும் குண்டுகள் வெடிப்பை ஒட்டி அரசு எந்திரம் எடுக்கும் எதிர் நடவடிக்கைகள், கைதுகள், அடக்குமுறைகள் எதுவும் இந்து மதவெறியர் நடத்தும் கலவரங்களின் போது அரசுகள் எடுப்பது கிடையாது. ஒரிசாவிலும் இந்து மதவெறி அமைப்புகள் துப்பாக்கிகள், குண்டுகள் முதலான அயுதங்களை வைத்தே கலவரம் செய்தன. விசுவ இந்து பரிசத்தின் இளைஞர் அமைப்பான பஜ்ரங்தள் தனது உறுப்பினர்களுக்கு வெளிப்படை

### ஒரிசாவில் நடந்து வரும் பரிசோதனைகள்:

- 1998-இல் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு தேவாலயமும், 92 வீடுகளும் அழிக்கப்பட்டன.
- 1999-இல் பாதிரியார் கிரஹாம் ஸ்டேய்ன்ஸும், அவரது இரண்டு மகன்களும் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர்.
- 2007-இல் நடந்த தாக்குதலில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர்; 800 வீடுகள் தாக்கப்பட்டன; 580 குடும்பங்கள் இடம் பெயர்ந்தன.
- 2008-இல் 18 பேர் கொல்லப்பட்டனர்; 42 தேவாலயங்கள், 250 வீடுகள், 4 பள்ளிக் கூடங்கள் அழிக்கப்பட்டன. 30,000 பேர் இடம் பெயர்ந்தனர்.


படிப்பகம்

www.padippakam.com

யாகவே ஆயுதப் பயிற்சிகள் -துப்பாக்கி சுடுவது உட்பட கொடுக்கிறது. கான்பூரிலும், மராட்டியத்திலும் இதன் உறுப்பினர்களும் குண்டு தயாரிக்கும் போது விபத்து நடந்து இறந்திருக்கின்றனர். இந்த இடங்களில் சிறுபான்மை மக்கள் வசிக்கும் பகுதிகளில் குண்டு வெடிப்பதற்கு திட்டமிட்டிருந்த ஆதாரங்கள் பல கிடைத்திருக்கின்றன. இவ்வளவு இருந்தும் இந்த சங்கபரிவாரங்களை அரசு தடை செய்யவில்லை. அவற்றின் தலைவர்கள் கலவரத்தின் போது கூட கைது செய்யப்படுவதில்லை. மொத்தத்தில் இவை எதுவும் ஒரு பயங்கரவாதமாக ஆளும் வர்க்கத்தால் கருதப்படுவதில்லை. உண்மையில், அரசு அனுமதியுடன் நடக்கும் இத்தகைய பயங்கரவாதம்தான் நாட்டு மக்களுக்கு பெரும் ஆபத்தைத் தருகிறது. 2002-இல் குஜராத், 2008-இல் ஒரிசா என ஆர்.எஸ்.எஸ்.இன் நிகழ்ச்சி நிரல் அடுத்தடுத்து நடைமுறைக்கு வருகிறது. இந்த பயங்கரத்தை காங்கிரசின் மிதவாத இந்துவாதம் வளர்க்கவே செய்கிறது. உழைக்கும் மக்கள் உண்மையான மதச்சார்பற்ற, ஜனநாயக, புரட்சிகர அமைப்புகளில் ஒன்று திரண்டு இந்து மதவெறியை கருவறுப்பது முன்னெப்போதையும் விட அவசியமாக இருக்கிறது.

ஒரிசாவுக்கு அடுத்து தற்போது கர்நாடகத்திலும் கிறித்தவ மக்களையும், தேவாலயங்களையும் இந்து மதவெறியர்கள் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள். பா.ஜ.க ஆளும் இம்மாநிலத்தில் குஜராத்தின் வழியைப் பின்பற்றி சில பகுதிகள் இந்துவத்தின் சோதனைச்சாலையாக மாற்றப்படும் போலத் தெரிகிறது. இங்கும் அரசும், போலீசும் வேடிக்கை பார்க்க சங்கபரிவாரத்தின் கலவரம் வெகுவேகமாகப் பரவி வருகிறது.

ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கலவரம் செய்து இந்து மதவெறியை தூண்டிவிடுவதும், சிறு பான்மை மக்களைக் கொல்வதும், ஆட்சியில் இருக்கும் போது மறுகாலனியாக்க கொள்கைகளை அமெரிக்க விசுவாசத்துடன் அமல்படுத்துவதுமான இந்து மதவெறி பாசிசத்தின் இரு முகங்களை வெட்டி வீழ்த்தாத வரை இந்திய உழைக்கும் மக்களுக்கு விடுதலை இல்லை.

• குப்பன்

# "தொழிலாளர்களின் வயிற்றலடிக்கும் ஐ.டி.சி.-ஏ.டி.சி. பொருட்களைப் புறக்கணிப்போம்!" — பு.ஜ.தொ.மு.வின் ஆர்ப்பாட்டம்

பன்னாட்டு ஏகபோக சிகரெட் நிறுவனமான ஐ.டி.சி.யின் துணை நிறுவனமான ஏ.டி.சி. எனப்படும் ஏசியன் டொபாக்கோ கம்பெனி, ஓசூரில் 273 தொழிலாளர்களைக் கொண்டு 30 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. நாளொன்றுக்குக் கோடிக்கணக்கில் சிகரெட் உற்பத்தி செய்து, கோடிகோடியாய் இலாபத்தை அள்ளும் இந்நிறுவனம், கடந்த 20 மாதங்களுக்கும் மேலாகத் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் இழுத்தடித்து வருகிறது. இதனைத் தட்டிக் கேட்டத் தொழிற்சங்க நிர்வாகிகள் 8 பேரைப் பணிநீக்கம் செய்து பழிவாங்கியது. இதைக் கண்டு கொதித்தெழுந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். அதைத் தொடர்ந்து, பேச்சுவார்த்தை என்ற பெயரில் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் கட்டப்பஞ்சாயத்து நடத்திய ஆலை நிர்வாகம், தொழிலாளர்களை வெளிப்படையாக மிரட்டியது. தொழிற்சங்கத்தை உடைக்க, ஆலை நிர்வாகத்துக்கு விசுவாசமான சங்கத்தை திடீரென உருவாக்கியது. ஆனால், தொழிலாளர்கள் இத்தகைய சதிகளையும் துரோகத்தனங்களையும் முறியடித்து, தமது சங்கத்தில் ஓரணியில் திரண்டு நின்று உறுதியாகப் போராடினர். அதன் பின்னரும் இச்சங்கத்தை நிர்வாகம் அங்கீகரிக்கவோ பேச்சுவார்த்தைக்கு அழைக்கவோ செய்யவில்லை.

இந்நிலையில், ஓசூரில் இயங்கிவரும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, ஏ.டி.சி. ஆலைத் தொழிலாளர் போராட்டத்தை ஆதரித்து, பிற ஆலைத் தொழிலாளர்களிடமும் உழைக்கும் மக்களிடமும், துண்டறிக்கை, சுவரொட்டிகளோடு வீடுவீடாகவும் பிரச்சாரத்தை மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாக, ஊதிய உயர்வைச் சட்டவிரோதமாக நிறுத்தி வைத்தும், தொழிற்சங்க முன்னணியாளர்களைப் பழிவாங்கியும் திமிரோடு கொட்டமடிக்கும் "ஏ.டி.சி. நிர்வாகத்தைச் சட்டப்பூர்வ வழிகளால் பணிய வைக்க முடியாது; நிர்வாகத்தை நிர்ப்பந்திக்கும் வகையில் போராட்டங்களைக் கட்டியமைப்போம்! உழைக்கும் மக்களே, தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கும் ஏ.டி.சி மற்றும் ஐ.டி.சி. நிறுவனங்களின் நுகர்பொருட்களைப் புறக்கணிப்போம்! தமிழக அரசே, ஏ.டி.சி. ஆலையை ஏற்று நடத்து!" எனும் முழக்கங்களுடன் தொழிலாளர்களை அணிதிரட்டி 6.9.08 அன்று ஆலை வாயிலருகே எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.




தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தாலும், பு.ஜ.தொ.மு.வின் வீச்சான பிரச்சாரம் - ஆர்ப்பாட்டத்தாலும் அம்பலப்பட்டுத் தனிமைப்பட்ட ஏ.டி.சி. நிர்வாகம், தற்போது தொழிற்சங்கத்துடன் பேச்சு வார்த்தைக்கு முன்வந்துள்ளது. கொட்டை போட்ட பெரிய தொழிற்சங்கங்கள் அனைத்தும் முடங்கிவிட்ட நிலையில், ஏ.டி.சி. தொழிலாளர் போராட்டத்தை முன்னிலைக்குக் கொண்டு வந்து, உழைக்கும் மக்களிடம் ஆதரவைத் திரட்டி பு.ஜ.தொ.மு. நடத்திய பிரச்சாரமும், ஆர்ப்பாட்டமும் புதிய போராட்ட உத்தியாக அமைந்து, தொழிலாளர்களிடம் சிறப்பான தொருவரவேற்பைப் பெற்றுள்ளது.

– பு.ஜ. செய்தியாளர்கள், ஓசூர்.

www.padippakam.com

# முதலாளிக்கு நிலம்! உழுபவனுக்குக் குண்டாந்தடி!

## - சி.பி.எம்.இன் நிலச்சீர்திருத்தக் கொள்கை!

''கேரளத்தைப் பார்! வங்கத்தைப் பார்! நிலச்சீர்திருத்தம் மூலம் லட்சக்கணக்கானவர்களுக்கு கேரளத்திலும் மேற்கு வங்கத்திலும் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது'' எனக் கிளிப்பிள்ளையைப் போல சி.பி.எம். கட்சி ஒவ்வொரு சந்துமுனையிலும் தனது கூட்டங்களில் பெருமை பொங்கப் பேசுவது வழக்கம். இதையெல்லாம் பார்த்து சி.பி.எம். ஆளும் மாநிலங்களில் நிலமற்றவர்களே கிடையாதோ என எண்ணுபவர்களும் உண்டு. ஆனால், சி.பி.எம். ஆளும் கேரளத்தில் நிலமற்ற மக்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்திவரும் போராட்டங்கள், இந்தப் போலிப் பெருமையை அம்மணமாக்கிவிட்டன.

கேரளாவைச் சேர்ந்த நிலமற்ற தாழ்த்தப்பட்ட மக்கள், சி.பி.எம். கட்சியின் அச்சுதானந்தன் அரசு பதவி ஏற்றபோது, ''சாது ஜன விமோச்சன சம்யுக்த வேதி'' எனும் அமைப்பின் கீழ் திரண்டு தாங்கள் மானத்தோடு வாழ நிலம் கேட்டுப் போராடினர். பத்தனம்திட்டா மாவட்டத்தில் இருக்கும் அரசு தோட்டக் கழகத்துக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனமான சந்தனப்பள்ளி இரப்பர் எஸ்டேட்டில், 500 குடும்பங்கள் கூடாரங்கள் போட்டு போராட்டம் நடத்தின. இப்போராட்டத்தை 'பொதுத்துறை நிறுவனத்தை சிதைக்கும் செயல்' என ஏ.ஐ.டி.யூ.சி. முதல் பி.எம்.எஸ். வரை அனைத்து ஓட்டுக்கட்சி தொழிற்சங்கங்களும் எதிர்த்தன. பேச்சுவார்த்தை நடத்தி அனைவருக்கும் 5 ஏக்கர் நிலம், ரூ.50 ஆயிரம் வரை இழப்பீடு என அரசு உறுதி தந்ததன் பேரில் போராட்டம் திரும்பப் பெறப்பட்டது. ஓராண்டுக்குள் நிலமில்லாத மக்கள் அனைவருக்கும் நிலம் வழங்கப்படும் என்று அரசு உறுதிமொழி கொடுத்தது.

அரசு கொடுத்திருந்த ஓராண்டுக் காலக் கெடு முடிந்தும் நிலம் ஏதும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இந்நிலையில் 2007 ஆகஸ்டில் பத்தனம்திட்டா மாவட்டம், செங்கராவில் இருக்கும் ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த ''ஹாரிசன் மலையாளம்'' எனும் நிறுவனத்தின் குரும்பட்டி இரப்பர் எஸ்டேட்டில் சம்யுக்த வேதி அமைப்பைச் சேர்ந்த 2000 பேர் நிலம் கேட்டு எஸ்டேட்டின் உள்ளே கூடாரம் அடித்துத் தங்கிப் போராடத் தொடங்கினர். ஹாரிசன் நிறுவனம், சென்ற நூற்றாண்டில் கேரளத்தில் இருந்த திருவாங்கூர் அரசிடம் இருந்து 35 ஆயிரம் ஹெக்டேர் எஸ்டேட் நிலத்தை 99 வருடக் குத்தகைக்கு எடுத்திருந்தது. குத்தகைக்காலம் முடிவடைந்த நிலையில் எஸ்டேட்டைக் காலி செய்ய நோட்டீசும் அனுப்பப்பட்டு இருந்தது.

ஆனால், இதையெல்லாம் கண்டுகொள்ளாத சி.பி.எம். மற்றும் பிற கட்சிகள், போராட்டம் நடத்திய மக்கள் மீது குண்டர்களை ஏவிவிட்டு கொடூரத் தாக்குதல் நடத்தின. 10 பேர்கள் படுகாயமடைந்து சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிலம் வழங்கப்படும் எனும் வாக்குறுதி தந்த அரசு, போராடுபவர்களுக்கு நிலத்தைத் தராமல் இழுத்தடித்தது. ஆனால், குத்தகைக்காலம் முடிந்தும் வெளியேறாமல் இருக்கும் பன்னாட்டு நிறுவனத்தையோ ஒன்றும் செய்யவில்லை.

கேரளாவில், காலனிய கால தோட்டப்பயிர் பண்ணை முறையே இன்னமும் தொடர்கிறது. 1970-களில் கொண்டு வரப்பட்ட நிலச்சீர்திருத்தச்சட்டம், தோட்டப்பயிர் பெரும்பண்ணைகளை இச்சட்டத்திலிருந்து விலக்கி வைத்தது. ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்குப் பின்னரும் தோட்டப்பயிர் பெரும்பண்ணைகள் நிலச்சீர்திருத்தத்திற்கு உட்படுத்தப்படவில்லை. உள்நாட்டு-வெளிநாட்டு பெரு முதலாளிகளுக்குச் சொந்தமான இப்பண்ணைகளில் பணியாற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டும், அவர்களது குடியிருப்பை ஒட்டி 10

5 ஏக்கர் நிலம் கேட்டு செங்கரா தேயிலை எஸ்டேட்டில் கொட்டகை கட்டி குடும்பத்துடன் ஈராண்டுகளாகப் போராடி வரும் தாழ்த்தப்பட்ட மக்கள்.




படிப்பகம்


www.padippakam.com

சென்ட் நிலம் மட்டுமே இதுவரை வழங்கப் பட்டுள்ளது.

போலி இடதுசாரி அரசாங்கம் பீற்றிக் கொள்ளும் நிலச்சீர்திருத்தங்கள், எப் போதுமே தாழ்த்தப்பட்ட மக்கள் மேல் கருணை காட்டியதே இல்லை. கேரளாவில் இன்னமும் தாழ்த்தப்பட்ட மக்களில் 56% பேருக்கு கையளவு கூட சொந்தநிலம் கிடையாது. செங்கராவில் மட்டும் ஏறத்தாழ 7000 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் இன் னமும் நிலமற்ற கூலிகளாகப் பரிதவிக்கின் றனர். குத்தகைக்காலம் முடிந்த பிறகும் ஆக்கி ரமிப்பை செய்திருக்கும் ஹாரிசனின் சட்டவி ரோதச் செயலைக் குறிப்பிடாமல் இருக்கும் 'தேசிய' பத்திரிக்கைகள், போராடும் மக்களை 'சட்டவிரோதமாய்க் குடியிருந்து' போராட்டம் நடத்துபவர்களாகச் சித்தரித்தன.

போராடிய மக்களில் முதியோரும், பெண்களுமே பெரும்பாலானவர்கள் . போதிய மருத்துவ வசதிகள் இன்றி அவர் களில் பலரும் சிக்குன்குன்யா, வைரஸ் காய்ச்சல் நோய்களால் அவதிப்பட்டனர். போலி கம்யூனிஸ்ட் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யூ. முதல் காங்கிரசின் ஐ.என்.டி.யூ.சி. வரை அனைத்துத் தொழிற்சங்கங்களும் இப்போராட்டத்தை சீர்கு லைப்பதில் ஓரணியில் நின்றன. போராட்டக்காரர்கள் நக்ச லைட்டுகளுடனும், தேசவிரோத சக்திகளுடன் கூட்டு சேர்ந் துள்ளதாக ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் பொய்ப்பிரச்சா ரத்தில் ஈடுபட்டன. தொழிற்சங்க குண்டர்கள் தினமும் மாலை வேளைகளில் போராடும் மக்கள் மீது கல்வீசுவதும், பெண்களைக் கேவலமாகத் திட்டுவதும், பாலியல் அத் துமீறலைக் கட்டவிழ்த்து விடுவதுமாய் ரவுடித்தனத்தில் ஈடு பட்டனர். இப்போராட்டத்துக்கு ஆதரவாகக் களத்தில் இருந்து போராடிய சம்யுக்த வேதியின் உறுப்பினர் ஒருவ ருக்குச் சொந்தமான 10 சென்ட் இடத்தையும், வீட்டையும் சி.பி.எம். கட்சி குண்டர்கள் கைப்பற்றி எதிர்போராட்டம் நடத்தினர். இதே சி.பி.எம்., ஆந்திரத்தில் கம்மம் மாவட் டத்தில் நிலம் கேட்டுப் போராடுகிறது. ஆனால், கேரளத்திலோ குண்டர்களை வைத்துப் போராடுபவர் களைத் தாக்குகிறது.

கேரள நீதிமன்றமோ போராடிய மக்களை ஒரு மாதத் துக்குள் எஸ்டேட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டது. அதற்கும் அடிபணியாத மக்களைப் பட்டினி போட்டுத் துரத்தும் நோக்கில் போராடும் இடம் நோக்கிச் செல்லும் சாலைகளை மூடியது போலீசு. இதன்மூலம் போராடும் மக்க ளுக்குக் கிடைக்க வேண்டிய மருந்து, உணவுப்பொருட்கள், குடிநீர் ஆகியவை அடியோடு தடைப்பட்டன.



''வாக்குறுதி கொடுத்து ஏய்க்கும் அச்சுதானந்தனே, நிலம் கொடு!''
- நிலமற்ற தாழ்த்தப்பட்டோர் நடத்தும் ஆர்ப்பாட்டம்

**போலி இடதுசாரி அரசாங்கம் பீற்றிக் கொள்ளும் நிலச்சீர்திருத்தங்கள், எப்போதுமே தாழ்த்தப்பட்ட மக்கள் மேல் கருணை காட்டியதே இல்லை. கேரளாவில் இன்னமும் தாழ்த்தப்பட்ட மக்களில் 56% பேருக்கு கையளவு கூட சொந்தநிலம் கிடையாது.**

மார்ச் 2008-இல் முதல்வர் அச்சுதானந்தன், உடனடியாக எஸ்டேட்டை விட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் வெளியேறினால் மூன்று மாதத்துக்குள் தீர்வென்றார். கோழிக்கோட்டில் 500 ஏக்கர் வரை ஆக்கிரமித்திருக்கும் சி.பி.எம். தொழிற்சங்கத் துக்கு நிலத்தை அவர்களுக்கே சொந்தமாக்கித் தருவதாக உறுதி தந்திருக்கும் அரசு, ஆக்கிரமிப்பு நிலத்தை விட்டு அவர்களை வெளியேறச் சொல்லவில்லை. ஆனால் சம்யுக்த வேதிக்கு மட்டும் எஸ்டேட்டை விட்டு வெளியேறும் நிபந்தனை விதிக்கப்பட்டது. எனவே மக்கள், முதல்வர் அச்சு தானந்தனின் வார்த்தையை நம்பத் தயாராயில்லை.

நாளுக்கு நாள் மக்களின் போராட்டம் வலுவடைந்து ஓராண்டைத் தாண்டியுள்ள நிலையில், போராட்டத்தில் தங்களை இணைத்துக்கொண்ட நிலமற்றவர்களின் குடும் பங்கள் 4000-த்தைத் தாண்டியுள்ளது. சென்ற ஆகஸ்ட் மாதம் இப்போராட்டத்தை முறியடிக்க காங்கிரசும் கம்யூ னிஸ்டுகளும் கைகோர்த்துக் கொண்டு எஸ்டேட்டைச் சுற் றிலும் முற்றுகைப்போராட்டம் நடத்தி மக்களைப் பட்டினி போட்டனர். போராடிய பெண் ஒருவரைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கும் ஆளாக்கினர்.

ஆனால் மக்களோ, தங்களது போராட்டத்தின் தொடர்ச் சியாக ஓணம் பண்டிகை அன்று பட்டினிப்போராட்டம் நடத்தியுள்ளனர். அனைவருக்கும் 5 ஏக்கர் நிலமும், ரூ.50 ஆயிரம் இழப்பீடும் கிடைக்கும் வரை ஓயப்போவதில்லை என்பதில் மிகவும் உறுதியுடன் உள்ளனர்.

அடக்குமுறைக்கு அஞ்சாமல் 2 ஆண்டுகளாக வீரப்போர் புரிந்துவரும் செங்கரா மக்கள், சொந்த நாட்டு மக் களுக்கு வாழும் உரிமையை மறுத்து பன்னாட்டு ஏகபோ கத்தை வாழ வைக்கும் சி.பி.எம். முகத்தில் நிச்சயம் கரிபூசு வார்கள் என்பது மட்டும் உறுதி!

● கதிர்

www.padippakam.com

# குஜராத்:
# அசாருதீன் பிழைத்துவிட்டான்; நீதி செத்துவிட்டது!

இது ஒரு துயரக்கதை என்று வகைப்படுத்திவிட முடியாது. துயரம்-வேதனைக்கு நடுவிலேயும் அன்பும் பாசமும் இழையோடும் உண்மைக் கதை. குஜராத்தில் இந்துவெறி பயங்கரவாதிகளோடு, காவிமயமாகிவிட்ட அரசும் போலீசும் நடத்திய பயங்கரவாத வெறியாட்டத்தின் இன்னுமொரு சாட்சியம்தான் இந்தக் கதை.

சற்றே நொண்டி நடக்கும் கால்கள்; கொக்கி போல் வளைந்த ஒரு கை; ஆனால், தீர்க்கமான மன உறுதி; அவ்வப்போது முகத்தில் அரும்பும் புன்னகை – இதுதான் அசாருதீன் என்கிற சிறுவனின் அடையாளம். குஜராத் மாநிலம் அகமதாபாத் நகர போலீசார் நடத்திய இந்து மதவெறித் தாக்குதலின் இரத்த சாட்சியாய் வாழ்ந்து வருபவன்தான் இந்தச் சிறுவன்.

ஆறு வருடங்களுக்கு முன்பு, கோத்ரா இரயில் தீப்பிடித்த சம்பவத்தைச் சாக்காக வைத்து குஜராத் மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் இந்துவெறிப் பயங்கரவாதிகளால் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்கள். இலட்சக்கணக்கான அப்பாவி முஸ்லீம்கள் வீடுகளை இழந்து அகதி முகாம்களுக்குத் துரத்தப்பட்டனர். முஸ்லிம் பெண்களின் வயிற்றைத் திரிசூலங்களால் குத்தி உள்ளே இருந்த சிசுக்களையும் இந்துபயங்கரவாதிகள் சிதைத்தார்கள். இந்த நரவேட்டைகள் நின்ற பின்னர், இரண்டு மாதங்கள் கழித்து, திடீரென ஒருநாள் இரண்டு விசுவ இந்து பரிசத் தொண்டர்களின் பிணங்கள், அகமதாபாத் நகரத்தின் புறநகர்ப் பகுதியான ரமோல் என்னும் கிராமத்திற்கு அருகில் நெடுஞ்சாலையில் கிடந்தன.

இந்துவெறியர்களுக்கு பாடம் கற்பிக்கவே அவ்விருவரும் முஸ்லீம்களால் கொல்லப்பட்டனர் எனக் கருதிய ஒரு கும்பல், அப்பகுதியில் இருந்த முஸ்லிம்களை அழித்தொழிக்கக் கிளம்பியது. அவர்கள் வேறுயாரும் அல்ல. இந்து மதவெறிஊட்டப்பட்ட குஜராத் மாநிலப் போலீசார்தான். பிணங்கள் கிடந்த இடத்திற்கு அருகில் உழைக்கும் முஸ்லிம் மக்கள் பெருவாரியாக வாழ்ந்துவரும் முகம்மது நகர் எனும் சேரிப் பகுதியில் போலீஸ் பட்டாளம் புகுந்தது. எந்தவொரு விசாரணையும் இன்றி, அங்கிருந்தவர்களின் மேல் போலீசுப்படை கண்மூடித்தனமாக சுடத் தொடங்கியது. தனது வீட்டுக்கு அருகே விளையாடிக் கொண்டிருந்த 10 வயதுச் சிறுவனான அசாருதீனின் நெற்றியில் குண்டு பாய்ந்து, கழுத்து வழியாக வெளியேறியது. இரத்தம் பீறிடக் கூக்குரலிட்டவாறே அசாருதீன் கீழே சரிந்தான்.

துப்பாக்கிச் சத்தத்தையும், அதைத் தொடர்ந்து சிறுவனின் அலறலையும் கேட்டு சமையலறையிலிருந்து ஓடிவந்த அவனது தாய் சகிலா பானுவோ, நெஞ்சில் குண்டு பாய்ந்து இரத்த வெள்ளத்தில் சரிந்தார். குடியிருப்பெங்கும் போலீசார் வெறித்தனமாக மக்களைப் பார்த்து சுட்டுக்கொண்டே இருந்தனர். ஆண்கள் அனைவரும் வேலைக்குச் சென்றுவிட, வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள் மட்டுமே இருந்த அந்தப் பகல் வேளையில் எதிரி நாட்டுக்குள் படையெடுத்த இராணுவத்தைப் போல கொஞ்சமும் ஈவிரக்கமின்றி அவர்கள் தாக்கினார்கள். வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த சுலைகா என்ற வயதான பாட்டி சுட்டுக் கொல்லப்பட்டார். பல பெண்களுக்கு கைகளிலும், கால்களிலும் குண்டடிகள் பட்டன.

முகம்மது ரபீக் எனும் இரயில்வே தொழிலாளி ஒருவர் அந்நேரம் பார்த்து தனது சைக்கிளில் வேலை முடிந்து திரும்பிக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி வளைத்துத் தாக்கிய போலீசாரிடம், தான் ஒரு அரசு ஊழியர் என்று கூறித் தனது அடையாள அட்டையைக் காண்பித்தும் பலனில்லாமல், கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அந்தக் குடியிருப்பிலிருந்தவர்கள் எல்லோரும் ஓடி ஒளிந்த பிறகுதான், போலீசின் அந்தக் கொலைவெறித் தாக்குதல் நின்றது. போலீசைத் தொடர்ந்து வந்த துணை இராணுவத்தினர், போலீஸ் நடத்திவிட்டுச் சென்ற தாக்குதலால் அதிர்ச்சியுற்றவர்களாக, அடிபட்டுக் கிடந்த மக்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அவர்கள்தான் அசாருதீனின் தாயாரை மருத்துவமனையில் சேர்த்துக் காப்பாற்

**இந்து மதவெறிக் கும்பல் அகமதாபாத்தில் நடத்திய கலவரத்தில் அனாதைகளாகிப் போன சிறுவர்கள்.**




படிப்பகம்

www.padippakam.com

றினர். ஆனால் அவர்களே, அசாருதீன் இறந்துவிட்டதாகக் கருதி அப்படியே போட்டுவிட்டனர்.

அலுமினிய வார்ப்படத் தொழிலாளியான அசாருதீனின் தந்தை ஷேக் இமாமுதீன் தனது குடியிருப்பில் நடந்த போலீஸ் தாக்குதல் பற்றிக் கேள்விப்பட்டு அங்கு ஓடி வந்தார். தனது மகன் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு துடித்தார். பின்னர் அங்கு வந்த போலீசு உயரதிகாரிகள் மூலம் ஒரு ஆம்புலன்சைக் கெஞ்சிப் பெற்றுக் கொண்டு தனது மகனை அருகிலிருந்த அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்.

அங்கு அசாருதீனைப் பரிசோதித்த மருத்துவர்களோ, அவன் இறந்து விட்டதாகக் கூறிவிட்டனர். இதனால் பிணவறைக்குப் பக்கத்தில் கிடத்தப் பட்டிருந்த தனது மகனின் உடலுக்கருகில் செய்வதறியாது அழுது கொண்டிருந்தார் இமாமுதீன். திடீரென அசாருதீனின் உடலில் அசைவு தென்பட்டது. உடனே மருத்துவர்களிடம் ஓடி, தனது மகனுக்கு சிகிச்சை தரக் கோரினார். மகனை இழந்த துக்கத்தில் பிதற்றுவதாகக் கருதி அக்கோரிக்கையை மருத்துவர்கள் உதாசீனப்படுத்தினர். இமாமுதீன் அவர்களது காலில் விழுந்து கெஞ்சி தனது மகனைக் காப்பாற்றுமாறு கதறி அழுதார்.

இரக்கப்பட்ட மூன்று மருத்துவர்கள் அசாருதீன் உயிருடனிருப்பதை அறிந்து, அவனுக்கு உடனடியாக சிகிச்சையைத் தொடங்கினர். மதத்தால் இந்துக்களான அவர்கள், மிகுந்த போராட்டத்திற்கிடையே அசாருதீனின் உயிரைக் காப்பாற்றினர். அவனது தாயும் மற்றொரு மருத்துவமனையில் காப்பாற்றப்பட்டு, பல மாதங்களுக்குப் பிறகு, இருவரும் வீடு திரும்பினார்கள்.

அசாருதீன் உயிர் பிழைத்த போதிலும், அவனால் பல ஆண்டுகள் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவோ, தானே உணவருந்தவோ கழிவறைக்குச் செல்லவோ முடியாது. தீராத தலைவலியும், கண்பார்வைக் குறைவும், ஞாபக மறதியும் அச்சிறுவனை வாட்டின. மருந்து-மாத்திரைகள், சிறப்பான சத்துணவுகள், சிகிச்சைக்கான செலவுகள் பெரும் சுமையாகி அவனது பெற்றோரை வதைத்தன. மகன் மீது கொண்டிருந்த எல்லையற்ற பாசத்தால், இமாமுதீன் தனது ஆலையில் ''ஓவர் டைம்'' வேலை செய்தும், ஓய்வின்றி இதர சில்லறை வேலைகளைச் செய்தும் இச்செலவுகளை ஈடேற்றினார். தங்களது உணவுச் செலவுகளை பெரிதும் குறைத்துக் கொண்டு, அசாரின் பெற்றோர்கள் கடுமையாக உழைத்து அவனுக்குச் சிகிச்சை அளித்தனர். சிகிச்சையின் பலனாகவும், பெற்றோரின் பாச அரவணைப்பாலும் அசார் மெதுவாக எழுந்து நின்று நடக்கத் தொடங்கினான்.

படிப்பறிவில்லாத கூலித் தொழிலாளியான இமாம், தனது மகனை சிறப்பாகப் படிக்க வைக்க வேண்டுமென்று பெரிதும் விரும்பினார். குண்டடிபட்டு அதிசயமாக உயிர் பிழைத்து, ஐந்தாண்டுகளாக நடைபிணமாகக் கிடந்து, இன்று மெதுவாக நடக்கத் தொடங்கியுள்ள அசாரை கைத்தாங்கலாக அருகிலுள்ள பள்ளிக்கு அழைத்துச் சென்று, பள்ளி நிர்வாகிகளிடம் கெஞ்சிக் கூத்தாடி ஆறாம் வகுப்பில் சேர்த்துள்ளார். அசாருக்கு தற்போது 17 வயது. பாடங்களை நினைவில் வைத்துக் கொள்வதில் அவன் மிகவும் சிரமப்படுகிறான். நடக்கும்போது சில நேரங்களில் தடுமாறி விழுந்து விடுகிறான். இருப்பினும், அவன் மற்ற சிறுவர்களோடு பள்ளிக்குச் செல்வதைக் காணும் போது அசாரின் பெற்றோர்களது துயரமும் வேதனையும் மறைந்து, ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்கிறது.



**அப்பாவி முசுலிம்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதோடு, பொய்க் குற்றம் சாட்டி சிறையிலடைத்த கொடுஞ்செயலுக்காக எந்தவொரு போலீசுக்காரனும் இன்றுவரை தண்டிக்கப்படவில்லை.**

தனது மகனையும், மனைவியையும் காரணம் ஏதுமின்றிச் சுட்ட போலீசாரின் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார் இமாம். ஆறு வருடங்கள் ஆகியும் இன்னும் அந்த வழக்கு விசாரணைக்கே வரவில்லை. ஆனால், போலீஸ் தரப்பில் மற்றொரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் அசாருதீனும் அவனது தாயாரும், இன்னும் கொல்லப்பட்ட, காயமடைந்த எல்லோரும் கூட்டமாக அருகிலிருந்த இந்துக் கோவில் ஒன்றைக் குண்டுவீசித் தகர்க்க வந்ததாகவும், அதனால்தான் அவர்களைச் சுட்டதாகவும் குற்றஞ்சுமத்துகிறது, அவ்வழக்கு.

தனது மகன் சுடப்பட்டபோது, அவனுக்கு இந்து, முஸ்லீம் என்றால் என்னவென்று கூடத் தெரியாது எனக் கூறும் இமாமிற்கு, அவனைச் சுட்ட போலீசார் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதது மிகுந்த வேதனையைத் தருகிறது.

குஜராத் மண்ணில் முஸ்லிம் மதத்தில் பிறந்துவிட்ட ஒரே காரணத்துக்காக வதைபடும் இலட்சக்கணக்கானவர்களின் துயரத்தில் ஒருதுளிதான், அசாருதீனின் அவலம்.

அசாருதீனைப் பெற்ற இமாமுதீன் குடும்பத்தைப் போலவே, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட முகம்மது நகர் சேரிப்பகுதியில் பாதிக்கப்பட்ட ஏழை முஸ்லிம் குடும்பங்கள் ஏராளம். முகம்மது நகரில் கைது செய்யப்பட்ட 9 அப்பாவி முஸ்லிம்கள், ஐந்தாண்டுகளுக்கு எவ்வித விசாரணையுமின்றிச் சிறையில் வதைபட்டனர். போலீசு தனது குற்றச்சாட்டை நிரூபிக்க ஆதாரம் எதையும் காட்டாததால், ஓராண்டுக்கு முன்பு நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்தது. ஆனால் துப்பாக்கிச் சூடு நடத்தியதோடு, பொய்க்குற்றம் சாட்டி சிறையிலடைத்த கொடுஞ்செயலுக்காக எந்தவொரு போலீசுக்காரனும் இன்றுவரை தண்டிக்கப்படவில்லை.

இதோ, அசாருதீன் தனது வேதனைகளை மறைத்துக் கொண்டு புன்முறுவல் பூக்கிறான். அவனுக்கு நேர்ந்துள்ள துயரத்துக்கும் வேதனைக்கும் காரணம் யார் என்பதை உணர்ந்து போராடுவதுதான், அசாருதீன் மீது நாம் காட்டும் பரிவுக்கு உண்மையான பொருளாக இருக்க முடியும்.

**(''தி ஹிந்து'' நாளேட்டில் (செப்.7,2008) ஹர்ஷ் மந்தர் எழுதியுள்ள ''அசாரின் கதை''யின் சுருக்கப்பட்ட மொழியாக்கம்).**

www.padippakam.com

# நீதியரசர்களா? ஊழல் பெருச்சாளிகளா?

தமிழ் சினிமாவில் கதாநாயகர்கள் எவ்வளவுதான் புரட்சி செய்தாலும், கலகம் புரிந்தாலும் இறுதியில் நீதிபதியின் தீர்ப்பால் நன்மையைக் கொண்டு வருவார்கள். சமூகத்தின் மற்ற பிரிவினரான போலீசு, அதிகாரிகள், அரசியல்வாதிகளைக் கூட சமயத்தில் வில்லனாக காட்டினாலும், நீதிபதிகளை மட்டும் அப்படி சித்தரிக்க மாட்டார்கள். அவர்களது மதிப்பு மட்டும் கேள்விக்கு அப்பாற்பட்டது. ஊடகங்களும் நீதிமன்றங்களை இப்படித்தான் பயபக்தியுடன் அணுகுகின்றன. யாராவது அப்படி தப்பித் தவறி பேசிவிட்டால் பிடித்தது சனி! உலகமறிந்த அருந்ததிராயையே ஒருநாள் நீதிமன்றக் காவலில் வைத்தார்களே! ஆக, இவ்வளவு பாதுகாப்பு வசதிகளையும், புனிதத் திருவுருவங்களையும் கை வரப் பெற்றிருக்கும் நீதிபதிகள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். யார் கேட்கப் போகிறார்கள்? நீதித்துறையில் மட்டும் எத்தனை கோடிகள் ஊழல் நடக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. தப்பித் தவறி ஒரு சிலர் பிடிபட்டாலும் அவர்கள் தண்டிக்கப் பட்டதாக வரலாறில்லை. இதுவும் அப்படிப்பட்ட ஒரு வரலாறுதான்.

1990-களில் கொல்கத்தா உயர்நீதி மன்றத்தில் பிரபலமான வழக்கறிஞராக பணியாற்றியவர் சௌமித்ரா சென். இவரை அங்கிருக்கும் உயர்நீதி மன்றம் நீதிமன்ற ரிசீவராக நியமிக்கிறது. நீதிமன்ற ரிசீவர்களின் வேலை என்னவென்றால், இரு தரப்புக்கும் இடையே நடக்கும் வழக்குகளின் போது நடக்கும் வர்த்தகப் பணத்தை நீதிமன்ற உத்தரவின் பேரில் பாதுகாப்பாய் பராமரிக்க வேண்டும். அந்தப் பணத்தை என்ன செய்ய வேண்டுமென நீதி மன்றம் உத்தரவிடும் வரையிலும் அதன் பாதுகாப்பாளராக இருக்க வேண்டும். ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா (செயில்-SAIL) விற்கும், ஷிப்பிங் கார்ப்பரேசன் ஆப் இந்தியா நிறுவனத்திற்கும் நடக்கும் வழக்கொன்றில் சரக்குகளின் கொள்முதலுக்காகக் கிடைத்த ரூபாய் 33 இலட்சத்தை நீதிமன்றம், ரிசீவராக இருக்கும் சௌமித்ரா சென்னிடம் ஒப்படைக்கிறது.

இந்தப் பணத்தை நீதிமன்ற ரிசீவர் கணக்கில் போட்டு பராமரிக்க வேண்டிய சென், தனது சொந்தக் கணக்கில் போட்டு குஜாலாய் பயன்படுத்துகிறார். இது போன்று எத்தனை வழக்குப் பணத்தை அவர் பயன்படுத்தினார் என்பதற்கும், அந்தப் பணத்தை வைத்து எதில் முதலீடு செய்து இலாபம் சம்பாதித்தார் என்பதற்கும் விவரங்களில்லை. இடையில், 2003-ஆம் ஆண்டு பா.ஜ.க. கூட்டணி அரசு ஆட்சியிலிருக்கம் போது சௌமித்ரா சென் கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்கிறார். இந்த ஊழல் மன்னனை தெரிவு செய்தவர் பா.ஜ.க.வின் சட்டத்துறை அமைச்சராக இருந்த அருண் ஜேட்லி. நீதிபதிகளின் நியமனம் எவ்வளவு கர்ம சிரத்தையோடு நடைபெறுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

நீதிபதியான பிறகும் அந்தப் பணத்தை சென் அனுபவித்து வந்தார். ஆனால், ''செயில்'' நிறுவனம் தொடுத்த வழக்கின் விளைவாக, அந்தப் பணத்தை வட்டியுடன் திருப்புமாறு சக நீதிபதிகள் உத்தரவிட்டனர். அதன்படி 2006-இல் 58 இலட்சத்தை சென் ஒப்படைத்தார். மற்றபடி, இந்த ஊழல் நீதிபதிக்கு தண்டனைகள் ஏதும் தரப்படவில்லை. இலைமறைவு காய்மறைவில்லாமல் பச்சையாக இந்த மோசடி நடந்திருப்பதால், ஒரு ஊழல் பேர்வழி நீதிபதியாக இருக்கலாமா என்ற கேள்வி எழுந்தது. வேறு வழியின்றி, உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன், மூன்று உயர்நீதி மன்ற தலைமை நீதிபதிகளைக் கொண்டு இந்தப் பிரச்சினையை விசாரிக்குமாறு உத்தரவிட்டார். அவர்களும் விசாரித்து, ஊழல் மறைக்க முடியாதபடி இருப்பதால், முறைகேடு நடந்திருப்பதாக தீர்ப்பளித்தார்கள்.



ஊழலில் ஊறித் திளைத்த நீதிபதி சௌமித்ரா சென்.

கடந்த ஓராண்டாக வழக்குகளை விசாரிக்காமல் நீதிபதியாகத் தொடரும் சென்-ஐ என்ன செய்வதென்று நீதித்துறைக்கு குழப்பம்! கடைசியில் கே.ஜி.பாலகிருஷ்ணன் தலைமையில் மூன்று நீதிபதிகள் சென்-ஐ அழைத்து பஞ்சாயத்து பேசினர். மூவரும் சென்னிடம் தெரிவித்த ஆலோசனை என்னவென்றால், அவர் தானாக பதவி விலகவேண்டும் அல்லது விருப்ப ஓய்வு பெறவேண்டும்! கவனியுங்கள், ஊழல் செய்த நீதிபதியை உள்ளே தள்ள வக்கில்லாத நீதிபதிகள் தனது இனத்தை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்பதற்காக சென்னுக்கு அவர்கள் அளித்த தண்டனை - விருப்ப ஓய்வு!

சௌமித்ரா சென்னோ இந்த ஆலோசனைகளைப் புறந்தள்ளி நீதிபதி நாற்காலியை விட்டு இறங்கமாட்டேன் என்று கூறிவிட்டார். நீதித்துறையின் ''இமேஜை''க் காப்பாற்றுவதற்காக வேறு சுமூக வழிகளின்றி, உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி சென்-ஐ நீக்குவதற்கு பாராளுமன்றத்தில் நடவடிக்கை எடுக்குமாறு மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதிவிட்டார். பிரதமரின் அலுவலகம் அந்தக் கடிதத்தைச் சட்டத்துறை அமைச்சர் பரத்வாஜுக்கு அனுப்பி விட்டதாம்.

உச்சநீதி மன்றம் மற்றும் உயர்நீதி மன்ற நீதிபதிகளை பாராளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்கள் மூலம்தான் பதவி நீக்கம் செய்ய முடியும். கண்ணியமிக்க நீதி


படிப்பகம்

www.padippakam.com

பதிகளை சுலபமாக தண்டிக்கக் கூடாது என்பதால் இந்த ஏற்பாடு. அதிலும் பல்வேறு தடைக்கற்களை வைத்திருக்கிறார்கள். முதலில் குற்றம் புரிந்த நீதிபதியை நீக்கச் சொல்லி 100 லோக்சபா உறுப்பினர்கள் அல்லது 50 ராஜ்ஜிய சபா உறுப்பினர்கள் கையெழுத்திட்டு தீர்மானம் கொண்டு வரவேண்டும். அதன்பின், பாராளுமன்றம் நீதிபதிகளை உள்ளடக்கிய ஒரு கமிட்டி போட்டு விசாரிக்கும். அந்த விசாரணையில் குற்றம் இருப்பது உறுதியானால், இரு அவைகளிலும் வாக்கெடுப்பு நடத்தி மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் ஆதரவிருக்கும் பட்சத்தில், குற்றம் புரிந்த நீதிபதி பதவி நீக்கம் செய்யப் படுவார்.

இதுவரை இந்தியாவில் இப்படி நீதிபதிகளை நீக்கும் முயற்சி ஒரு முறைதான் நடந்திருக்கிறது. 1991-இல் ஹரியானா உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த ராமசாமி, ஊழல் பணத்தின்மூலம் தனது வீட்டில் ஆடம்பர மரச்சாமான்களை இறக்குமதி செய்தார் என்பதற்காக அப்போதைய பாராளுமன்றத்தில் மது தண்டவதே பதவி நீக்கம் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அந்த வாக்கெடுப்பைக் காங்கிரசு கட்சி புறக்கணித்ததால் ராமசாமி தப்பித்தார். இப்போது இரண்டாவது முறையாக வரப்போகும் தீர்மானத்தில் சென்னுக்கு என்ன நடக்கும் என்பது தெரியவில்லை.

காங்கிரசு, பா.ஜ.க. இரண்டு கட்சிகளும் தீர்மானத்தை ஆதரித்தால் சென் பதவி நீக்கம் செய்யப்படலாம். அப்படி நீக்கப்படுவதாகவே வைத்துக் கொள்வோம். மக்களின் பணத்தை ஊழல் செய்து கொள்ளையடித்து நீதியாக காலத்தை ஓட்டிய ஒரு பகிரங்கக் கொள்ளைக்காரனுக்கு வெறும் பதவி நீக்கம் மட்டும்தான் தண்டனையா? சிறு குற்றம் புரிந்ததற்காக விசாரணைக் கைதிகளாக பல்லாயிரக்கணக்கானோர் இந்தியாவின் பல்வேறு சிறைகளில் இருக்கிறார்களே? அவர்களை விட அளவிலும் தன்மையிலும் பெரிய குற்றத்தைப் புரிந்திருக்கும் இந்தக் கருப்புச் சாத்தானுக்கு குறைந்தபட்சம் ஒரு பத்தாண்டு சிறையாவது தண்டனையாக கொடுக்கப்பட வேண்டாமா? ஊழல் பணத்தினால் கோடிசுவரராகியிருக்கும் இவரது சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டாமா? இந்த யோக்கிய சிகாமணி நீதிபதியாக இருக்கும்போது வழங்கிய தீர்ப்புகளில் நீதி இருந்திருக்குமா?

பணம் வாங்கிக் கொண்டு நீதியை திருப்பியிருக்க மாட்டார் என்பது என்ன நிச்சயம்? ஆனால் சட்டப்படியும், நீதிப்படியும் இப்படியெல்லாம் புலனாய்வு செய்து "போஸ்ட் மார்ட்டம்" செய்வதெல்லாம் சாத்தியமில்லை. நீதிபதிகளை மட்டும் சட்டமும், நடைமுறையும் மொத்தத்தில் ஆளும் வர்க்கங்களும் கடுமையாகப் பாதுகாக்கின்றன. கே.ஜி.பாலகிருஷ்ணன் பதவியேற்கும் போது கூட நீதிபதிகள் சொத்துக் கணக்கை காட்டுமாறு சட்டம் கொண்டு வரவேண்டும் என வாதம் எழுந்தபோது, அவர் அதை கடுமையாக எதிர்த்தார். அது நீதித்துறை மீதான மக்கள் நம்பிக்கையை கேள்விக்குள்ளாக்கி விடுமாம்.



**உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன்.**

கோத்ரா வழக்கில் சிறையில் வாடும் அப்பாவிகளை விடுதலை செய்வதில் நீதிமன்றம் நியாயமாக நடக்கவில்லை என்று தீஸ்தா சேதல்வாத் ஒரு பத்திரிக்கையில் எழுதியதும், இதே பாலகிருஷ்ணன் சீறி எழுந்தார். தற்போது வருங்கால வைப்பு நிதி மோசடி வழக்கிலும் உச்சநீதிபதி அகர்வால் சீறியிருக்கிறார். தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி 23 கோடி ரூபாய், உத்திரப்பிரதேசம் காஜியாபாத் கருவூலத்திலிருந்து அதிகாரிகள் உதவியோடு சுருட்டப்பட்டது. இந்த மோசடியில் உச்சநீதி மன்றத்தின் ஒரு நீதிபதி, அலகாபாத், உத்தரகாண்ட் உயர்நீதி மன்ற நீதிபதிகள், மற்றும் உத்திரப் பிரதேச மாவட்ட நீதிபதிகளுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த மோசடி குறித்து காஜியாபாத் வழக்கறிஞர்கள் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

இந்த ஊழல் நீதிபதிகளை போலீசார் விசாரிக்க தலைமை நீதிபதியிடம் முன் அனுமதி பெறத் தேவையில்லை என்று மனுதாரர் சார்பாக மூத்த வழக்குரைஞர் சாந்தி பூஷன் வாதிட்டதும், நீதிபதி அகர்வாலுக்கு கோபம் பொங்கி எழுந்தது. ஊழல் செய்த நீதிபதிகளை உச்சநீதி மன்றம் பாதுகாக்கிறது என்று சாந்தி பூஷன் சொன்னதுமே, இந்த வழக்கை தாம் விசாரிக்கப் போவதில்லை என்று அகர்வால் விலகி விட்டார். இவ்வளவு ரோசமிருக்கும் அகர்வாலுக்கு, வியர்வை சிந்தி உழைத்த தொழிலாளர்களின் வைப்புநிதியை உண்டு செரித்த கொழுப்பெடுத்த நீதிபதிகள் மேல் ஆத்திரமோ அதிர்ச்சியோ வரவில்லை. அந்த அளவுக்கு இனப் பாசம் அறிவை மறைக்கிறது.

**ஊழல் மற்றும் அதிகார மோசடிகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட (இடமிருந்து) முன்னாள் பஞ்சாப் - அரியானா உயர்நீதி மன்ற நீதிபதி வீ.இராமசாமி; முன்னாள் உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி சபர்வால்; முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி எம்.எம்.புஞ்சி மற்றும் முன்னாள் ஜம்மு-காஷ்மீர் உயர்நீதி மன்ற நீதிபதி ஏ.எஸ். ஆனந்த்.**






www.padippakam.com

இதே காலத்தில் பஞ்சாபிலும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் ஊழல் குற்றச்சாட்டிற்கு ஆளாகியிருக்கிறார்கள். அட்வகேட் ஜெனரலாக இருக்கும் சஞ்சீவ் பன்சாலி என்பவரின் உதவியாளர், நீதிபதி நிர்மல்ஜித் கவுரிடம் பதினைந்து இலட்ச ரூபாய் லஞ்சமாகக் கொடுத்திருக்கிறார். அந்த நீதிபதி உடனே போலீசுக்கு தெரிவித்து விட்டார். நடந்த கூத்து என்னவென்றால் அந்தப் பணம் நிர்மல் யாதவ் என்ற நீதிபதிக்குத் தரப்பட வேண்டிய பணம். ஒரே பெயரிலிருப்பதால் ஆள் மாறாட்டம் நடந்திருக்கிறது. தற்போது இந்த விவகாரம் குறித்து சி.பி.ஐ. விசாரிக்கலாம் என்று உச்சநீதி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இதிலும் ஊழல் நீதிபதி தண்டிக்கப்படப் போவதில்லை. அதிகபட்சம் பதவி நீக்கம் மட்டுமே செய்வார்கள்.

கேள்விக்கிடமற்ற மதநம்பிக்கை போல, ஐயத்திற்கிடமற்ற நீதிபதி பக்திதான் நடப்பில் கோலோச்சுகிறது. ஜெயா ஆட்சியில் கொள்ளையடித்த தளபதிகளும், வீராங்கனைகளும் தி.மு.க.வில் சேர்ந்து தமது வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். ஏன், கருணாநிதி ஆட்சி கூட நீதித்துறையின் மூலம் ஜெயலலிதாவை இதுவரை தண்டிக்க முடியவில்லையே!

மத்திய அமைச்சர்கள் பலரும் ஊழல் வழக்குகளை சுலபமாக எதிர் கொண்டு தமது ஊழியத்தை தொடர்ந்து செய்து வருகிறார்கள். அம்பானியும், டாடாவும், பிர்லாவும் நம்மை சட்டப்படியே கொள்ளையடிப்பதற்குரிய லைசன்ஸை நீதிமன்றங்கள்தான் வழங்குகின்றன. மேட்டுக்குடி சீமான்கள் பொழுதுபோக்கிற்காக சண்டையிட்டு மற்றவர்களைக் கொன்றுவிட்டு நீதிமன்றத்தின் ஆசியோடு பிணையில் இயல்பாக வாழ்வதெல்லாம் எப்படி சாத்தியமாகிறது? அப்பாவி இசுலாமிய மக்கள் சிறையில் வாடும்போது, கலவரம் நடத்தி பல உயிர்களைக் காவு வாங்கிய சங்கப் பரிவாரத் தலைவர்களெல்லாம் பகிரங்கமாக அரசியல் செய்வதற்கு என்ன காரணம்?

சாதாரண மக்களுக்கு கிடைக்காத நீதிதான் அவர்களது வாழ்வைப் பறிக்கும் ஒவ்வொரு பொருளாதார, அரசியல் நடவடிக்கைக்கும் பின்புலமாக தார்மீக நியாயத்தை சட்டத்தின் பெயரில் வழங்குகிறது. ஆகையால் ஒடுக்கும் இந்த நீதியிலிருந்து நமக்கான நீதி கிடைக்காது. அது இந்த நீதிக்கு வெளியே நாம் நடத்தும் போராட்டத்திலிருந்தே பெறமுடியும்.

• அஜித்

# தி.க. இந்து பாசிசத்துக்குக் கிடைத்த இளைய பங்காளி!

சென்னை பெரியார் திடலில் கடந்த செப்டம்பர் 5-இல் நடைபெற்ற தி.க. இளைஞரணி மாநாடு, 'வேலைவாய்ப்புடன் உற்பத்தியும் கூடிய தொழிற்சாலைகளை ஏராளம் தொடங்குமாறு' அரசை வலியுறுத்தியது. ஆனால், அரசு வேலைகளில் ஆட்குறைப்பு செய்வதற்கென்று அரசால் நியமிக்கப்பட்ட 'நிர்வாக சீர்திருத்தக் குழு' இயங்க அதே பெரியார்திடலில் வாடகைக்கு இடம் விட்டிருப்பவரே வீரமணிதான்.

தி.க. மகளிரணியோ "காவல்துறையில் பணியாற்றும் பெண்கள் மூக்கு, காதுகளில் நகைகளை மாட்டுவதால் அந்தத் துறைக்கான எடுப்பையும் கம்பீரத்தையும் குலைத்து விடுவதாக, குறைத்து விடுவதாக அமைவதால் அந்த நிலையிலிருந்து அப்பெண்கள் விடுபடவேண்டும்" எனத் தீர்மானம் போட்டுள்ளது. கூலிகேட்டுப் போராடினாலோ, மறியல் - அறப்போரில் ஈடுபட்டாலோ ஆண்போலீசுக்குச் சற்றும் குறையாமல் பெண் போலீசும் வெறிநாய்கள் போல் உழைக்கும் மக்கள் மீது பாய்ந்து குதறுகின்றது. இந்தக் கொடூர மிருகத்திடம் 'எடுப்பையும்' 'கம்பீரத்தையும்' யாராவது ரசிக்க முடியுமா? நகைகளைத் துறந்து வந்து அடித்து உதைத்தால் 'எடுப்பாக' இருக்கிறது என்று ரசிக்கத்தான் முடியுமா?

"பாரத் மாதாகி ஜெய்!" - வீரமணிஜியின் இளைஞர் மாநாட்டில் வைக்கப்பட்டுள்ள கருத்தோவியம்.



பெரியார் தி.க.வினருக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ள 'தளபதி' வீரமணி, நீதிமன்றத்தில் தன்னை 'இந்து' என்று குறிப்பிட்டுள்ளார். 'இந்து என்றால் திருடன்' என விளக்கவுரை கொடுத்துவந்த பெரியார் இயக்கத்திற்கு குழைத்து நாமம் சாத்திய வீரமணியின் விடுதலையோ "பாகிஸ்தான் போன்ற நாடுகள் அணு ஆயுதத் துறையில் பலமாக உள்ளதால் அணுசக்தி ஒப்பந்தத்தை ஆதரிக்க வேண்டும்"; "காஷ்மீர் எல்லையிலே மைனஸ் டிகிரி இருக்கிற இடத்திலே எதிரி வந்தால் சுடுகிறானே, நம்மவன் யாருக்காக இப்படிப் பாடுபடுகிறான்? இந்த தேசத்திற்காக!" என்றெல்லாம் எழுதத் தொடங்கியுள்ளது.

ஜம்மு-காஷ்மீரை மூன்றாகப் பிரிக்க அத்வானி சொன்ன யோசனைக்கு பக்கமேளம் வாசிக்கும் வகையில் "இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக உள்ள காஷ்மீர் தனிமாநிலமாவது, மேலும் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்" என்று எச்சரித்துள்ளது. இந்து தேசியவெறியுடன் கை கோர்க்கும் தி.க.வின் பித்தலாட்டம் மேலும் ஒருபடி போய் 'பாரதமாதா'வையும் உயர்த்திப் பிடிக்கத் தொடங்கியுள்ளது. தி.க. மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்ட அறிவியல் கண்காட்சியில் "2020-இல் இந்தியா" எனும் தலைப்பில் பாரத மாதாவை ஒளிரவைத்து அழகு பார்த்துள்ளனர். பார்ப்பன பயங்கரவாதத்துக்கு எங்கெல்லாம் பங்காளிகள் முளைத்து வருகிறார்கள், பாருங்கள்!!

• முத்து


படிப்பகம்

www.padippakam.com

# “யுனிலீவர் நிறுவனமே, இந்தியச் சட்டங்களை மதித்து நட!” — தொழிலாளர்களின் கண்டன ஆர்ப்பாட்டம்

புதுச்சேரி மாநிலத்தின் வடமங்கலம் பகுதியில் கடந்த 13 ஆண்டுகளாக இயங்கிவரும் இந்துஸ்தான் லீவர் லிமிடெட் நிறுவனம், புதிய பொருளாதாரக் கொள்கைக்குப் பின்னர் இந்துஸ்தான் யுனிலீவர் என்ற பெயர் மாற்றத்துடன் சோப்பு, பற்பசை, முகப்பவுடர் முதலான அன்றாடப் பயன்பாட்டுக்கான நுகர்பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்து வருகிறது.

நேர்மையே இதன் வாக்குறுதி என்று ஹமாம் சோப்பை விளம்பரப்படுத்தும் இந்நிறுவனம், இந்தியச் சட்டங்களை மயிரளவும் மதிக்காமல், தொழிலாளர்கள் உரிமைக்காகப் போராடினால், ‘நேர்மையா? கிலோ என்ன விலை?’ என்று கேட்டு அடக்குமுறையை ஏவி வருகிறது.

இந்நிறுவனத்தில் கடந்த 13 ஆண்டுகளாக 500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்து வந்த போதிலும், அவர்களுக்குப் பணிநிரந்தர ஆணை கொடுக்கப்பட்டுள்ள போதிலும் தினக்கூலி தொழிலாளர்கள் (Daily Rated workman) என்ற பெயரிலேயே பணிபுரிகின்றனர். இப்பெயர் மோசடி மூலம் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் மட்டுமல்லாது, மாதச் சம்பளத்திலும் மருத்துவ ஈட்டுறுதித் தொகை பிடித்தம் செய்வதிலும் சட்டவிரோதமாக பல்வேறு தில்லுமுல்லுகளைச் செய்து தொழிலாளர்களைச் சுரண்டி வருகிறது, நிர்வாகம்.




இவற்றைத் தட்டிக் கேட்கும் தொழிலாளர்களையும் தொழிற்சங்க நிர்வாகிகளையும் பணியிடை நீக்கம் செய்வது, ஊதிய உயர்வை மறுப்பது, ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரில் பல்வேறு அடக்குமுறைகளை ஏவுவது என கேள்விமுறையின்றி கொட்டமடிக்கிறது.

குமுறிக் கொண்டிருந்த தொழிலாளர்கள், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியில் இணைந்து, இந்நிறுவனத்தில் கிளைச் சங்கத்தைக் கட்டி தொடர்ச்சியாக பிரச்சாரம் - ஆலைவாயிற் கூட்டங்கள் மூலம் தொழிலாளர்களை அணிதிரட்டி அமைப்பாக்கினர். இதைக் கண்டு பீதியடைந்த நிர்வாகம், உணவகத்தில் கெட்டுப் போன உணவு வழங்கப்பட்டதைத் தட்டிக் கேட்ட முத்துகிருஷ்ணன் என்ற தொழிற்சங்க முன்னணியாளரைப் பணியிடை நீக்கம் செய்து பழிவாங்கியது.

கொதித்தெழுந்த தொழிலாளர்கள், யுனிலீவரின் சட்டவிரோதப் பழிவாங்கலை எதிர்த்து கடந்த 15.9.2008 அன்று வடமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகே எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். தொழிலாளர் நிறைந்த இப்பகுதியில் விரிவான பிரச்சாரத்தை மேற்கொண்டு, பகுதிவாழ் உழைக்கும் மக்களின் உணர்வுபூர்வமான பங்கேற்புடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், பணபலமும் அதிகாரபலமும் அடியாள் பலமும் கொண்ட மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனத்தின் சட்ட விரோத அடாவடித்தனத்தை, கோடிக்கால் பூதமான தொழிலாளி வர்க்கம் நிச்சயம் முறியடிக்கும் என்ற நம்பிக்கையை விதைத்துள்ளது. யுனிலீவர் தொழிலாளர்கள் இதர ஆலைத் தொழிலாளர்களுடன் இணைந்து அடுத்த கட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

— இந்துஸ்தான் யுனிலீவர் ஒர்க்கர்ஸ் யூனியன், புதுச்சேரி.

## மறுகாலனியாக்கத்திற்கு எதிராக... பு.ஜ.தொ.மு.வின் தொடர் பிரச்சார இயக்கம்

தொழிலாளர்களின் உழைப்பால் திரண்ட 56 ஆண்டு கால சேமநலநிதி (பிராவிடண்ட் ஃபண்ட்)யான ரூ. 2.5 இலட்சம் கோடியை மட்டுமல்ல; அத்தொழிலாளர்களின் எதிர்கால வாழ்வையும் சேர்த்து - ரிலையன்ஸ் உள்ளிட்ட பெரு முதலாளிகளின் இலாபவெறிக்கு, இரையாக்கியிருக்கும் மன்மோகன் - சிதம்பரம் கும்பலின் உலக வங்கிக் கைக்கூலித்தனத்துக்கு எதிராக “கொள்ளை போகிறது தொழிலாளர் உழைப்பு! அள்ளிக் கொடுப்பதோ காங்கிரசுக் கும்பல்! சுருட்டப் போவதோ பன்னாட்டு-இந்நாட்டுக் கம்பெனிகள்” எனும் முழக்கத்தோடு தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளுடன் இணைந்து தொடர் பிரச்சார இயக்கத்தை பு.ஜ.தொ.மு. நடத்தி வருகிறது.

**சென்னையில்,** கிண்டி தொழிற்பேட்டை, அம்பாள் நகர் பேருந்து நிலையம், ஆதம்பாக்கம், ஈக்காட்டுத்தாங்கல் கடைவீதி, பல்லாவரம் என தொடர் தெருமுனைக் கூட்டங்களையும், **ஓசூரில்,** கடந்த 12.09.08 அன்று மாலை 5.00 மணியளவில் மூக்கொண்டபள்ளி பகுதியில் திரளான மக்கள் பங்கேற்புடன், ம.க.இ.க. மைய கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியோடு பொதுக் கூட்டத்தையும், **திருச்சியில்,** பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன், ஆ.ஓ.பா.ச., அத.வி.பா.ச மற்றும் பெ.வி.மு. ஆகிய அமைப்புகளுடன் இணைந்து, ‘பெல்’ ஆலையின் பிரதான நுழைவாயில் முன்பும், அதனை ஒட்டி சிறு தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளிலும் தொடர் தெருமுனைக் கூட்டங்களையும் பு.ஜ.தொ.மு. நடத்தியது.


திருச்சியில்...

**உடுமலையில்,** இதே மறுகாலனியத் தாக்குதலின் மற்றுமொரு வெளிப்பாடான, விலையேற்றம், மின்வெட்டுக்கெதிரான கண்டன ஆர்ப்பாட்டத்தை உடுமலை- தேவனூர் புதூர் மையப் பேருந்து நிலையம் எதிரில் 13.09.08 அன்று மாலை நடத்தியது.

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராக புரட்சிகர அமைப்புகள் மாநிலமெங்கும் தொடர்பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

— பு.ஜ. செய்தியாளர்கள்

www.padippakam.com

# ஹியு லு நாக்கின் கொட்டடி மரணம்: அமெரிக்க மோகிகளுக்கு ஒரு பாடம்

தகவல் தொழில் நுட்பத் துறையில் வேலை பார்க்கும் அல்லது அத்துறையில் படித்து வரும் இந்திய இளைஞர்களின் கனவு, அமெரிக்காவுக்குப் போய் எப்படியாவது பச்சை அட்டை (Green Card) வாங்கி, அமெரிக்காவிலேயே ''செட்டிலாகி'' விட வேண்டும் என்பதுதான். இயற்கையின் பிழையால், இந்திய நாட்டில் பிறக்க நேர்ந்து விட்ட அமெரிக்க மோகிகளின் மனசாட்சியை, இந்தக் கதை உலுக்க முடிந்தால், அது நமது 'அதிருஷ்டம்'தான்!

இது, கற்பனைக் கதையல்ல; அமெரிக்காவின் பச்சை அட்டையைப் பெறும் முயற்சியில் தோற்றுப் போனதோடு, அதில் தனது உயிரையும் இழந்துவிட்ட ஹியு லு நாக் என்ற சீன இளைஞனின் உண்மைக் கதை இது.

கள்ளத் தோணி மூலம் அமெரிக்காவிற்குள் நுழைந்து, அந்நாட்டிலுள்ள ''வியர்வைக் கடைகளில்'' நாளொன்றுக்கு 16 மணி நேரம் வேலை பார்த்துவிட்டு, ஏதாவதொரு பொந்தில் தூங்கி எழுந்து வாழ்க்கையை ஓட்டும் ஆசியக் கொத்தடிமை தொழிலாளி போன்றவர் அல்ல, ஹியு லு நாக்.

அவர் கணினிப் பொறியாளர். நியூயார்க் நகரில் உள்ள புகழ் பெற்ற ''எம்பயர் ஸ்டேட்'' அடுக்கு மாடிக் கட்டிடத்தில்தான் அவரது அலுவலகம் உள்ளது; அவரது வீடு குவின்ஸில் உள்ளது. அவரது மனைவி அமெரிக்கக் குடிமகள். இத்துணை பின்புலம் இருந்தும் ஏறத்தாழ 16 ஆண்டுகள் ஹியு லு நாக் அமெரிக்காவிலேயே வசித்து வந்த பின்பும், அவருக்கு, சட்டபூர்வமாக நிரந்தரமாக அமெரிக்காவில் குடியிருக்கும் உரிமையினை அளிக்கும் பச்சை அட்டை கிடைக்கவில்லை.

ஹியு லு நாக்கிற்கு அமெரிக்காவின் பச்சை அட்டை கிடைக்கவில்லை என்பது நமது விவாதப் பொருள் அல்ல; அமெரிக்க அரசு, தனது நாட்டுச் சட்டப்படி நாக்கிற்குப் பச்சை அட்டை தர மறுத்ததும் நமக்குப் பொருட்டல்ல. நாக் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியிருந்து வருகிறார் எனக் குற்றஞ் சுமத்தி, அவரை அமெரிக்காவில் இருந்து வெளியேற்றும் முன், அமெரிக்க அரசு அவரை சிறையில் அடைத்து நடத்திய விதம்தான் நமது கவனத்துக்குரியது. அவரது மரணம், தனி மனிதனின் உரிமைகளைப் பாதுகாக்கும் தளபதியாகத் தன்னைப் பீற்றிக் கொள்ளும் அமெரிக்காவின் போலித்தனத்தை மீண்டும் ஒருமுறை தோலுரித்துக்காட்டிவிட்டது.

ஹியு லு நாக், 16 ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழ்ந்த காலத்தில், தலைமறைவு வாழ்க்கை நடத்தவில்லை. அவர், 1992-இல் தனது 16 ஆவது வயதில் சுற்றுலா விசா மூலம், ஹாங்காங்கில் இருந்து அமெரிக்காவிற்கு வந்தார். சுற்றுலா விசா காலாவதியாகிப் போன பிறகு, தனக்கு அரசியல் அடைக்கலம் தர வேண்டும் எனக் கோரி விண்ணப்பித்தார், ஹியு. அக்கோரிக்கை பரிசீலனையில் இருந்த சமயத்தில், அமெரிக்காவில் தங்கி வேலை செய்யும் அனுமதி அவருக்கு அளிக்கப்பட்டது.

அரசியல் அடைக்கலம் கோரும் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட பிறகும், அவரை உடனடியாக அமெரிக்காவில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையினை அமெரிக்க அரசு எடுக்கவில்லை. இதனிடையே அவரது குடியேற்றம் தொடர்பான விசாரணைக்காக குடியேற்ற நீதிமன்றத்துக்கு வரவேண்டும் என உத்தரவிடப்பட்டது. ஆனால், இந்த உத்தரவு அவரது முகவரிக்கு அனுப்பப்படாமல், ஏதோவொரு ஊர்பேர் தெரியாத முகவரிக்கு அனுப்பப்பட்டது. இதனால், ஹியு லு நாக் நீதிமன்றத்துக்கு வர முடியாமல் போனது. இதனையே காரணமாகக் காட்டி, அவரை உடனடியாக அமெரிக்காவில் இருந்து வெளியேற்ற வேண்டும் என குடியேற்ற நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த உத்தரவு வந்த பிறகும், அதிகாரிகள் நாக்கைத் தேடி வரவில்லை.

இந்தப் பிரச்சினைகளுக்கு நடுவிலேயே, ஹியு லு நாக், கணினிப் பொறியியல் படிப்பை முடித்தார்; வேலை தேடிக் கொண்டார்; அமெரிக்கப் பெண்ணை மணந்து கொண்டு இரண்டு குழந்தைகளுக்கு தகப்பன் ஆனார்.

நாக்கின் மனைவி, அவருக்குப் பச்சை அட்டை வாங்கிக் கொடுக்கத் தனிப்பட்ட முறையில் முயற்சி செய்து வந்தார். இம்முயற்சியின் பலனாக, குடியேற்றம் தொடர்பான நேர்முகத் தேர்வுக்கு நாக் நேரில் வர வேண்டும் என அழைக்கப்பட்டார். தனது கனவு கைக்கூடும் நாள் நெருங்கிவிட்ட மகிழ்ச்சியில் ஜூலை 18, 2007 அன்று நேர்முகத் தேர்வுக்குச் சென்ற நாக்கிற்கு, ஏமாற்றம் மட்டுமல்ல, திடுக்கிட வைக்கும் அதிர்ச்சியும் காத்திருந்தது. அமெரிக்கக் குடியேற்ற நீதிமன்றம் 2001-இல் போட்ட உத்தரவைக் காட்டி, நாக்கைக் கைது செய்து, அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப் போவதாக குடியேற்ற அதிகாரிகள் அறிவித்தார்கள். நீதிமன்றத் தீர்ப்புப் பற்றித் தனக்கு எதுவுமே தெரியாது என்ற உண்மையை நாக் நிரூபித்த பிறகும்கூட, நாக்கின் குடியேற்றப் பிரச்சினை மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

ஜூலை 2007-இல் சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்பட்ட நாக், அதுதான் தனது சமாதியாக அமையப்

**அமெரிக்காவில் பல்வேறு ஏழை நாடுகளைச் சேர்ந்த மூன்று இலட்சம் தொழிலாளர்கள் குடியேற்றத் தடுப்புக் காவல் முகாம்களில் அடைபட்டுக் கிடப்பதும்; அவர்களுக்கு அடிப்படையான மனித உரிமைகள் மறுக்கப்படுவதும் அம்பலமாகி வருகிறது.**



படிப்பகம்

www.padippakam.com

போகிறது என்பதைக் கற்பனைக் கூட செய்து பார்த்திருக்க மாட்டார். சிறையில் அடைக்கப்பட்ட ஒன்பதாவது மாதத்தில் ஏப்ரல் 2008-இல் நாக்கிற்கு தாங்கிக் கொள்ள முடியாத முதுகு வலி ஏற்பட்டது. சிறைச்சாலை அதிகாரிகள் கொடுத்த வலி நிவாரண மாத்திரைகளுக்கு, அந்த நோய் கட்டுப்பட மறுத்தது. அடுத்த ஒருசில நாட்களிலேயே அவரால் நிமிரவோ, நிற்கவோ, நடக்கவோ முடியாமல் போனது. நாக், தனக்குச் சக்கர நாற்காலி வேண்டும் எனக் கோரியதை, வெள்ளை அதிகார வர்க்கம் ஏளனமாக அலட்சியப்படுத்தியது; தனது சொந்த செலவில் மருத்துவம் பார்த்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற நாக்கின் கோரிக்கை, எவ்விதமான பரிசீலனையும் இன்றி நிராகரிக்கப்பட்டது. நோயின் வேதனை தாளாமல் அவர் துடிதுடித்ததை அதிகார வர்க்கம் நாடகமாடுவதாகப் பழி போட்டது.

''நாக்கின் உடல்நிலை குறித்து அலுவலக ரீதியான விசாரணை நடந்து வருகிறது'' என்ற நொண்டிச் சாக்கைக் கூறி, உண்மையை மூடி மறைத்தது அதிகார வர்க்கம். நாக்கின் உறவினர்கள், ''நாக்கின் முதுகுத் தண்டில் காயமோ, எலும்பு முறிவோ ஏற்பட்டிருக்கலாம்'' என்ற சந்தேகத்தை எழுப்பிய பொழுது, அதிகார வர்க்கமோ, ''இது சாதாரண முதுகுவலிதான்'' என அலட்சியமாகப் பதில் அளித்தனர்.

நாக்கின் வழக்குரைஞர் ஆண்டி வோங், அவரைச் சந்தித்து உரையாட ஜூலை 26, 2008 அன்று தடுப்பு முகாமிற்கு வந்தபொழுது, நாக்கோ எழுந்து நின்று ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாத நிலையில், படுத்த படுக்கையாகக் கிடந்தார். வெள்ளை அதிகாரிகள் நாக்கிற்குச் சக்கர நாற்காலி தர மறுத்துவிட்டதால், நாக் தனது வழக்குரைஞரைச் சந்திக்க முடியாமல் போனது. நிலைமை மோசமாகிவிட்டதைப் புரிந்து கொண்ட வழக்குரைஞர் ஆண்டி வோங், நாக்கை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் எனக் கோரி ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு வருவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக ஜூலை 30, 2008 அன்று குடியேற்ற அதிகாரிகள் நாக்கை டொனால்ட் டபிள்யு வியாட் தடுப்புக் காவல் கூடத்தில் இருந்து ஹார்ட்ஃபோர்டு தடுப்புக் காவல் கூடத்திற்கு 'அழைத்து'ச் சென்று விட்டு, அதே நாளில் மீண்டும் வியாட் தடுப்புக் காவல் கூடத்திற்குக் கூட்டி வந்து அடைத்தனர். நகரக் கூட முடியாத நிலையில் படுத்த படுக்கையாகக் கிடந்த நாக்கை, தரதரவென்று இழுத்துச் சென்று வேனில் ஏற்றியதாகவும்; இதனால் நாக்கின் கை-கால்களில் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

**அமெரிக்க டாலர் ஏழை நாடுகளில் மூலதனமாக நுழைவதற்கு எவ்விதத் தடையும் இருக்கக் கூடாது என மிரட்டும் அமெரிக்கா, ஏழை நாட்டுத் தொழிலாளர்கள் அமெரிக்காவினுள் நுழைந்து வேலை தேடுவதைத் தடுப்பதற்கு ஆயிரத்தெட்டு தடைகளை விதிக்கிறது.**

நோயாளியான நாக்கை ஒரே நாளில் இப்படி அங்கும் இங்குமாக அலைக்கழித்ததற்கான காரணத்தைக் குடியேற்ற அதிகாரிகளால் கூற முடியவில்லை. ''நாக் உடல் நலத்தோடுதான் இருக்கிறார் எனக் காட்டி, ஆட்கொணர்வு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் தள்ளுபடி செய்வதற்காகவே, நாக்கைக் குடியேற்ற அதிகாரிகள் 'அழைத்துச் சென்றதாக' நாக்கின் வழக்குரைஞர்கள் நீதிபதியின் முன் வெள்ளை அதிகாரிகளின் குரூர புத்தியை அம்பலப்படுத்தினர். மேலும், ஹார்ட்ஃபோர்டைச் சேர்ந்த குடியேற்ற அதிகாரிகள், ''வெளியேற்றத்துக்கு எதிரான எல்லா வழக்குகளையும் நாக் திரும்பப் பெற்றுக் கொண்டு மறு பேச்சில்லாமல் அமெரிக்காவில் இருந்து வெளியேறி விட வேண்டும்'' என நாக்கை மிரட்டியதும் அம்பலமானது.

ஆட்கொணர்வு மனு மீது விசாரணை நடத்திய நீதிபதி, குடியேற்ற அதிகாரிகளின் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கக் கூட முன் வரவில்லை; ''நாக்கிற்குத் தேவைப்படும் சிகிச்சையை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்'' என மொன்னையான தீர்ப்பைக் கூறி வழக்கை முடித்தார்.

இத்தீர்ப்பையடுத்து, ஆகஸ்டு, 2008 அன்று, ஹியு லு நாக் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நாக்கின் நுரையீரல், எலும்புகள், ஈரல் ஆகிய முக்கிய உறுப்புகளைப் புற்று நோய் அரித்திருப்பதும்; அவருடைய முதுகுத் தண்டில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதும் மருத்துவப் பரிசோதனைகளின் மூலம் கண்டறியப்பட்டது. நாக், மருத்துவமனையில் தன்னை வந்து சந்தித்த தனது மனைவி ஜாவோவிடம் ''நான் அதிக நாள் உயிர் வாழ மாட்டேன்'' எனக் கூறியிருக்கிறார். அதுவே அவர்களின் கடைசி சந்திப்பாகவும், அதுவே அவரின் கடைசி வார்த்தையாகவும் ஆகிப் போனது. சிகிச்சைப் பலன் அளிக்காமல், ஆகஸ்டு 5 அன்று ஹியு லு நாக், அமெரிக்காவை விட்டு மட்டுமின்றி, இந்த உலகத்தை விட்டும் வெளியேறிப் போனார்.

நாக்கைப் புற்றுநோய் தாக்கியதற்கு அமெரிக்க அரசைக் குற்றஞ் சுமத்த முடியாது. ஆனால், அந்த நோய் மிகத் துரிதமாக, மூன்றே மாதங்களுக்குள் அவரது உடலைச் செல்லரித்து, அவரது உயிரைப் பறித்ததற்கு அமெரிக்க அரசின் அலட்சியப் போக்குதான் காரணம். ஜூலை 2007-இல் நாக்கை கைது செய்தவுடனேயோ, அல்லது 2001-இல் நாக்கை அமெரிக்காவில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனத் தீர்ப்பு வந்தவுடனேயோ, அமெரிக்க அரசு நாக்கை அமெரிக்காவில் இருந்து வெளியேற்றியிருந்தால் நாக் இன்று

---

அன்பார்ந்த வாசகத் தோழர்களே!

இந்த இதழோடு உங்களது ''புதிய ஜனநாயகம்'' இதழ் 23-வது ஆண்டை நிறைவு செய்கிறது. கடந்த 23 ஆண்டுகளாக இவ்விதழ் தொடர்ந்து வெளிவர பல்வேறு வழிகளிலும் உதவிய உங்கள் அனைவருக்கும், விற்பனையை விரிவுபடுத்தி புதிய வாசகர்களிடம் புரட்சிகர அரசியலைக் கொண்டு சென்ற முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற, உங்களது ஊக்கமான ஆதரவை அடித்தளமாகக் கொண்டு 24-வது ஆண்டில் எமது பயணத்தைத் தொடர உறுதியேற்கிறோம்.

- ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

சீனாவிலோ, அல்லது ஹாங்காங்கிலோ உயிர் வாழ்ந்திருக்கக் கூடும். அமெரிக்க அரசு, நாக்கிற்குப் பச்சை அட்டை தர மறுத்தது மட்டுமல்ல, அவர் உயிர் வாழும் உரிமையினையும் சேர்த்தே பறித்து விட்டது என்பதே உண்மை.

நாக்கைப் போல, பல்வேறு ஏழை நாடுகளைச் சேர்ந்த மூன்று இலட்சம் தொழிலாளர்கள் குடியேற்றத் தடுப்புக் காவல் முகாம்களில் அடைபட்டுக் கிடப்பதும்; அவர்களுக்கு மருத்துவ வசதிகள் உள்ளிட்டு, அடிப்படையான மனித உரிமைகள் மறுக்கப்படுவதும் நாக்கின் அகால மரணம் அம்பலப்படுத்தி விட்டது.

நியூ ஜெர்சி மாநிலத்தில் உள்ள எலிசபெத் தடுப்புக் காவல் முகாமில் அடைக்கப்பட்டிருந்த கினியா நாட்டைச் சேர்ந்த 52 வயதான பௌபகர் பா என்ற தையல் தொழிலாளிக்கு மண்டையோட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டு அதனால் மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டது. எனினும், உடனடியாக அவரை மருத்துவமனையில் சேர்க்காமல், 13 மணி நேரத்துக்கும் மேலாக அவரைத் தனிமைச் சிறையில் அடைத்து வைத்ததால், அத்தொழிலாளி இறந்து போனதை ''நியூயார்க் டைம்ஸ்'' ஏடு அம்பலப்படுத்தியது.

கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்த எல்சால்வடார் நாட்டைச் சேர்ந்த 36 வயதான ஃபிரான்சிஸ்கோ காஸ்தனேடா என்ற தொழிலாளி புற்று நோயால் அமெரிக்காவிலேயே மரணமடைந்தார். அவரின் அகால மரணத்திற்கு, உரிய சிகிச்சை அளிக்க முன்வராத அதிகாரிகளின் அலட்சியப் போக்குத்தான் காரணம் என கலிபோர்னியா மாநில அரசே ஒப்புக் கொண்டுள்ளது.

அமெரிக்க டாலர் ஏழை நாடுகளில் மூலதனமாக நுழைவதற்கு எவ்விதத் தடையும் இருக்கக் கூடாது என மிரட்டும் அமெரிக்கா, ஏழை நாட்டுத் தொழிலாளர்கள் அமெரிக்காவினுள் நுழைந்து வேலை தேடுவதைத் தடுப்பதற்கு ஆயிரத்தெட்டு தடைகளை விதிக்கிறது. அமெரிக்காவின் இந்த இரட்டை அளவுகோல்தான், ஹியு லு நாக், பௌபகர் பா, ஃபிரான்சிஸ்கோ காஸ்தனேடா போன்ற ஏழை நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின், ஊழியர்களின் மரணத்திற்கும்; மூன்று இலட்சம் பேர் தடுப்பு முகாம்களில் எவ்வித உரிமையும் இன்றி வதைக்கப்படுவதற்கும் காரணம்.

• ரஹீம்



# இந்திய அமைதிப்படையா? காமவெறி பயங்கரவாதப் படையா?

உள்நாட்டுப் போரில் நிலை குலைந்து, வறுமையும் பட்டினியும் பீடித்து, தீராத அவலத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது, காங்கோ. மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள அந்நாட்டின் வடமேற்கே மாசிசி நகரிலுள்ள நிவாரண முகாம்களில் பஞ்சைப் பாராரிகளான கருப்பின மக்கள் உணவுக்காக வரிசையில் காத்திருந்தனர். வாகனங்கள் அணிவகுத்து சீறிக்கொண்டு வந்தன. நீலநிற இரும்புத் தொப்பி அணிந்த ஐ.நா. மன்றத்தின் அமைதிப்படை சிப்பாய்கள், ரொட்டி, பால், முட்டை முதலான உணவுப் பொருட்களுடன் வந்திறங்கி, அம்மக்களுக்கு விநியோகித்தனர். சிறிது நேரத்தில் உணவுப் பொருட்கள் தீர்ந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. பலநாட்களாகப் பட்டினி கிடக்கும் பலர், உணவுக்காக அச்சிப்பாய்களிடம் கெஞ்சிக் கதறினர்.

கைக்குழந்தைகளுடன் கதறும் தாய்மார்களைப் பார்த்ததும் அமைதிப்படை சிப்பாய்களுக்கு வக்கிரமான 'கருணை' பிறந்தது. ''ரொட்டியும் பாலும் முட்டையும் வேண்டுமா? தருகிறோம். அதற்கு நீங்கள் எங்களுடன் படுக்கைக்கு வர வேண்டும். சம்மதமா?'' என்று கேட்டு கெக்கலி கொட்டிச் சிரித்தனர் அச்சிப்பாய்கள். வேதனையும் வெறுப்பும் கொப்பளிக்க, பட்டினியில் பரிதவிக்கும் கருப்பினத் தாய்மார்கள் அங்கிருந்து வெளியேறினர். பசியை ஓரிரு நாட்கள் தாக்குப் பிடிக்கலாம். பாலியல் இச்சைக்கு இணங்காவிடில் ஒரு துண்டு ரொட்டி கூட கிடைக்காது என்றால், அப்பெண்கள் என்ன செய்ய முடியும்? அகதிகளாக உழலும் அவர்களின் பட்டினியைச் சாதகமாக்கி கொண்டு, காங்கோ பழங்குடியினப் பெண்களைச் சூறையாடியது, அமைதிப்படை.


வயிற்றுப் பசி தீர்க்க இராணுவக் கும்பலின் காமவெறிக்குப் பலியாக வேண்டும்; இல்லையேல் பட்டினிக்குப் பலியாக வேண்டும் என்ற அவலத்தில் காங்கோ தாய்மார்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அகதிகளாக நிவாரண முகாம்களில் அல்லற்படும் இளம் பெண்களை அனுபவித்த இக்காமவெறி இராணுவப் படைகள், அடுத்ததாக பருவமடையா இளஞ் சிறுமிகளை பாலுக்கும் ரொட்டிக்கும் விலைபேசியது. பணியாத சிறுமிகளைக் கடத்திச் சென்று






படிப்பகம்

www.padippakam.com



காங்கோவில் காமவெறி வேட்டைக்குக் கிளம்பும் இந்திய 'அமைதிப் படை'.

கும்பல் பாலியல் வன்முறையை ஏவி, வீதியில் வீசியெறிந்தது. அதன் காமவெறி பயங்கரவாத வக்கிர வெறியாட்டம் இத்துடன் முடிந்துவிடவில்லை. இளம் சிறுவர்களைக் கூடப் பிடித்துச் சென்று ஓரினப் புணர்ச்சியில் ஈடுபட்டது.

அகதிகளாக வறுமையில் உழலும் மக்கள் மீது இப்படியொரு காமவெறி பயங்கரவாத அடக்குமுறையை ஏவியிருப்பது, காட்டுமிராண்டி அமெரிக்கப் படைகளல்ல. கண்ணியமும் வீரமும் பெருமையும் பாரம்பரியமும் மிக்கதாகச் சித்தரிக்கப்படும் இந்திய இராணுவம்தான் இந்த அட்டூழியங்களை செய்துள்ளது. உள்நாட்டில் காஷ்மீரிலும், மணிப்பூரிலும் தனது காமவெறி பயங்கரவாத வெறியாட்டங்களால் நாறிப் போயுள்ள இந்திய இராணுவம், இப்போது காங்கோ நாட்டில் ஐ.நா. மன்றத்தின் சார்பில் 'அமைதிப்படை' என்ற பெயரில் சென்று, அங்கேயும் கொட்டமடித்து உலகெங்கும் அம்பலப்பட்டு காறி உமிழப்படுகிறது.

மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள காங்கோவில் 1998 முதல் 2003 வரை இனக் குழுக்களுக்கிடையே உள்நாட்டுப் போர் மூண்டு இரத்த ஆறு ஓடியது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடந்த மிகப் பெரியதும் மிகக் கொடூரமானதுமான மனிதப் படுகொலை என்று கருதப்படும் இந்த இனக்குழுப் போரில், பல லட்சம் மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக எல்லைப் பகுதிகளில் குவிந்தனர். போரைத் தடுத்து அமைதியையும் ஜனநாயகத்தையும் நல்வாழ்வையும் நிலைநாட்டுவது என்ற பெயரில் ஐ.நா மன்றத்தின் சார்பில், ஏகாதிபத்திய மேலாதிக்கக் கூலிப் படைகள் 'அமைதிப் படை' என்ற போர்வையில் காங்கோவில் குவிக்கப்பட்டன. ஏறத்தாழ 18 நாடுகளிலிருந்து 18,000-க்கும் மேற்பட்ட துருப்புகள் 2000-வது ஆண்டு முதலாக காங்கோவில் முகாமிட்டுள்ளன. இதுதவிர 30-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து மருத்துவ - சுகாதார - நிவாரணப் பணியாளர்கள் பல்லாயிரக் கணக்கில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் படைகளே பெருமளவில் குவிக்கப்பட்டு முன்னிலை வகிக்கின்றன.

காங்கோ ஜனநாயகக் குடியரசு (DRC) நாட்டில் ஐ.நா.வின் அமைதிப் படையாகச் செயல்பட்டு வரும் இந்திய இராணுவத்தினர் பாலியல் சுரண்டல், வன்முறை - வன்புணர்ச்சி, மிரட்டிப் பணிய வைத்தல் - சித்திரவதை, பருவமடையா இளஞ்சிறுமிகளைக் கடத்திச் சென்று பாலியல் வன்முறையை ஏவுதல், சிறுவர்களை ஓரினப் புணர்ச்சிக்காகப் பிடித்துச் செல்லுதல் முதலான கொடூரங்களைச் செய்துள்ளதாக கடந்த ஆகஸ்ட் 12-ஆம் நாளன்று ஐ.நா. அதிகாரிகள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளனர். கவனத்துக்கு வந்த 100-க்கும் மேற்பட்ட வழக்குகளில், ஆழமான விசாரணைக்கு முன்னரே குற்றங்கள் நிரூபணமாகியுள்ளதாகவும், இவற்றில் 1000-க்கும் மேற்பட்ட இந்திய இராணுவத்தினர் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும் ஐ.நா. அதிகாரிகள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். குற்றம் சாட்டப்பட்டுள்ள இவர்கள் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.


ஐ.நா. மன்றத் தலைவரான பான் கி மூன், விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்திய இராணுவத்தின் காமவெறி பயங்கரவாத வெறியாட்டங்களை அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்ததாகவும், இத்தகைய குற்றங்களை ஒருக்காலும் அனுமதிக்கவே கூடாது என்றும், இந்திய சட்டப்படி இக்குற்றவாளிகள் மீது மிகக் கடுமையான நடவடிக்கையை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளனர். இந்திய அரசும், இராணுவத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணியும் முழுமையான விசாரணை நடத்தி கடுமையான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.

**இந்திய இராணுவத்தின் காமவெறி பயங்கரவாத அட்டூழியங்கள் இப்போது முதன்முறையாக நடப்பவையல்ல. கடந்த ஐந்தாண்டுகளில் பலமுறை இத்தகைய அட்டூழியங்கள் வெளிவந்துள்ளன. ஆயுதக் கடத்தல், தங்கக் கடத்தல், போதை மருந்து கடத்தலிலும் இந்திய இராணுவம் ஈடுபட்டுள்ளது.**

இந்திய இராணுவத்தின் காமவெறி பயங்கரவாத அட்டூழியங்கள் இப்போது முதன்முறையாக நடப்பவையல்ல. கடந்த ஐந்தாண்டுகளில் பலமுறை இத்தகைய அட்டூழியங்கள் வெளிவந்துள்ளன. கடந்த ஆண்டு மே மாதத்தில் இத்தகைய வெறியாட்

www.padippakam.com

டங்கள் பற்றி ஐ.நா.வின் உள்விவகார மேற்பார்வை சேவை அலுவலகம் (OIOS) விசாரணை நடத்தி இந்தியப் படையினருக்கு எச்சரிக்கை விடுத்தது. இவ்வாண்டு தொடக்கத்திலிருந்து நான்குமுறை இந்திய இராணுவத்தின் காமவெறி அட்டூழியங்கள் பற்றி ஐ.நா. மன்றம் வெளிப்படையாகக் குற்றம் சாட்டியுள்ளது. ஆனாலும் இந்திய அரசு இக்குற்றவாளிகள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.




**''எந்தச் சூழலிலும் பாலியல் வன்முறையை நியாயப்படுத்த முடியாது'' - அமைதிப்படைகளின் காமவெறி பயங்கரவாதத்திற்கு எதிராக மனித உரிமை அமைப்பினரின் பிரச்சாரம்.**

''இந்திய இராணுவ முகாம் அருகிலேயே ஆணுறைகள் இறைந்து கிடக்கின்றன. வடமேற்கிலுள்ள கோமா பகுதியிலும் மாசிசி நகரிலும் இந்திய இராணுவத்தின் காமவெறி அட்டூழியங்கள் மிக அதிகமாக நடந்துள்ளன. ருவாண்டா படுகொலைகளுக்குக் காரணமான இனக்குழு யுத்தப் பிரபுகளுக்காக இந்திய இராணுவம் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டுள்ளது. இதற்கீடாக யானைத் தந்தங்களை இராணுவ அதிகாரிகள் இலஞ்சமாகப் பெற்றுள்ளனர். தங்கக் கடத்தல், போதை மருந்து கடத்தலிலும் இந்திய இராணுவம் ஈடுபட்டுள்ளது'' என்று பி.பி.சி. செய்தியாளர்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் குற்றம் சாட்டுகின்றன. ஆனால் இக்குற்றச்சாட்டுகளுக்குப் போதிய ஆதாரம் இல்லை என்று இவ்வழக்குகள் முடக்கப்பட்டன.

சாதாரண சிப்பாய்கள் மட்டுமல்ல, லெப்டினண்ட் கர்னல் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகளும் இத்தகைய கடத்தல், பாலியல் வன்புணர்ச்சிக் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர். கர்னல் தாலும்டூபி, கர்னல் தீபக்சிங் நாயல், ஹவில்தார் சுரேஷ் பாண்டுரங் ஆகியோர் மாசிசி நகரில் தங்களது கடத்தல் குற்றங்களுக்கு உடன்பட மறுத்த உள்ளூர் வியாபாரிகளைச் சட்டவிரோதமாக அடைத்து வைத்து சித்திரவதை செய்துள்ளனர். காங்கோவிலுள்ள இந்திய அமைதிப்படை தளபதியான கர்னல் சந்த்சரோகா, காங்கோவின் இனக்குழு யுத்தப் பிரபுக்களுக்கு ஆயுதங்களைக் கடத்தி விற்று ஆதாயமடைந்துள்ளார்.

இந்த உண்மைகள் மெதுவாகக் கசிந்து பிரிகேடியர் இந்தர்ஜித் நாராயண் என்ற இராணுவ அதிகாரி மூலம் துறை சார்ந்த விசாரணையை இந்திய இராணுவம் நடத்தி வருகிறது.

ஆனாலும் இந்த உண்மைகளை 'தேசிய'ப் பத்திரிகைகள் திட்டமிட்டே மூடி மறைத்து வருகின்றன. இந்திய அரசோ இக்காமவெறி கிரிமினல் கும்பல் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் தேசபக்தி புனிதப் போர்வையால் இக்குற்றங்களை மூடி மறைத்து வருகிறது.

உலகெங்கும் மேலாதிக்க ஆக்கிரமிப்புப் போர்களாலும் போர்க்குற்றங்களாலும் உலக அரங்கில் அம்பலப்பட்டு நிற்கும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய வல்லரசுகள், இப்போது புதிய உத்தியைப் பின்பற்றுகின்றன. தமது ஆதிக்கமும் அட்டூழியமும் அம்பலப்படாதிருக்க, ஏழை நாட்டுப் படைகளை அதிக அளவில் சேர்த்து அனைத்துலக அமைதிப்படை என்ற பெயர் சூட்டி, அதற்கு சாதுவான தோற்றத்தையும் அளிக்கின்றன. உலகை மறுபங்கீடு செய்யவும், மேலாதிக்கம் செலுத்தவும் இந்த அமைதிப் படைகளை உலகின் பல நாடுகளில் கொண்டு போய் குவிக்கின்றன.

இந்த வகையில், ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு விசுவாசமாக அடியாள் வேலை செய்ய இந்திய அரசும் அமைதிப் படையை அனுப்புகிறது. இத்தகைய விசுவாச சேவையின் மூலம் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் பதவியைப் பெறவும் தெற்காசியப் பிராந்தியத்தில் ஏகாதிபத்திய கட்டளையை நிறைவேற்றும் நம்பகமான துணை வல்லரசாக அங்கீகாரம் பெறவும் இந்திய ஆட்சியாளர்கள் துடிக்கின்றனர். போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள் செய்வது என்ற பெயரில் சர்வகட்சி ஆதரவுடன் இதைச் சாதிக்க முயற்சிக்கின்றனர்.

அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டப் போவதாகப் பசப்பிக் கொண்டு செல்லும் இந்த அமைதிப் படைகள் காந்தீய உபதேசம் செய்து கொண்டிருப்பதில்லை. எந்த நாட்டினுள் அமைதிப்படைகள் நுழைந்தாலும், அது மக்களை ஒடுக்குவதும் சூறையாடுவதும் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவதும்தான் நடந்துள்ளது. ஈழம் மட்டுமல்ல; காங்கோ, சியாரா, லியோன், லைபீரியா, கினியா, ஐவரிகோஸ்ட், ஹெய்தி முதலான நாடுகளில் குவிக்கப்பட்டுள்ள இந்திய அமைதிப் படைகளின் அட்டூழியங்கள் ஏற்கெனவே உலக அரங்கில் அம்பலப்பட்டுள்ளன.

நமது வரிப்பணத்தைத் தின்று கொழுத்துத் திரியும் இந்திய இராணுவம் உள்நாட்டில் மட்டுமின்றி, இப்போது இன்னும் பிற ஏழை நாடுகளிலும் தனது பயங்கரவாத அட்டூழியங்களைத் தொடர இனியும் அனுமதிக்க முடியாது. ஏகாதிபத்திய மேலாதிக்க நோக்கங்களுக்குத் தொண்டூழியம் செய்ய அமைதிப் படை என்ற பெயரில் இந்திய அரசு பிற நாடுகளுக்கு இராணுவத்தை அனுப்புவதையும், இதனை அங்கீகரித்து நியாயப்படுத்தும் ஐ.நா. மன்றம் உள்ளிட்ட ஏகாதிபத்திய கைக்கூலி நிறுவனங்களையும் அம்பலப்படுத்தி முறியடிக்காமல், காமவெறி இராணுவ பயங்கரவாத கிரிமினல்களைத் தூக்கிலிட்டு தண்டிக்காமல், இப்பயங்கரவாத கிரிமினல் அட்டூழியங்களைத் தடுத்து நிறுத்திடவும் முடியாது.

● குமார்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

# பிள்ளைக்கறி தின்னும் பிரிமியர் மில்!

# முதலாளியின் இலாபவெறிக்கு இளம்பெண் உயிர்ப்பலி!

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தை அடுத்துள்ள சுண்டகாபட்டி கிராமத்தைச் சேர்ந்தவர், கிருஷ்ணவேணி என்ற இளம்பெண். கூலி விவசாயி நடராஜ் என்பவரின் மகளான இவர், ஒசூர் வட்டம் பாகலூரை அடுத்துள்ள பெலத்தூர் பிரிமியர் மில்லில் சுமங்கலித் திட்டம் என்ற பெயரில் கொத்தடிமையாக வேலையில் சேர்க்கப்பட்டார். தினமும் 16 மணி நேரத்துக்கு மேல் வேலை வாங்கி, கிருஷ்ணவேணியை 3 மணிநேரம் கூடத் தூங்க விடாமல், அவசர வேலை என்று மிரட்டி ஆலை நிர்வாகம் அவரைக் கசக்கிப் பிழிந்துள்ளது. இதனால் தூக்கமின்மை, சோர்வு, தலைவலி, மாதவிடாய்க் கோளாறுகள் உள்ளிட்ட பல உடல் உபாதைகளால் அவர் பாதிக்கப்பட்டுள்ளார். இதை மறந்து ஓய்வு கிடைக்கின்ற 3-4 மணி நேரத்தில் நன்றாகத் தூங்குவதற்காக ஆலை நிர்வாகமே தூக்க மாத்திரை போட்டுக் கொள்ளப் பழக்கப்படுத்தியுள்ளது.

தினமும் 16 மணி நேரத்துக்கு மேல் கடின உழைப்பு, ஓய்வின்மை – தூக்கமின்மை, தூக்க மாத்திரை பழக்கத்தால் ஏற்பட்ட விபரீத விளைவுகள் முதலானவற்றால் பாதிக்கப்பட்ட கிருஷ்ணவேணி, கடந்த 6.9.08 அன்று பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே திடீரென மயங்கிச் சரிந்தார். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே மரணமடைந்து விட்டார்.

கிருஷ்ணவேணி மட்டுமல்ல; அவரைப் போல் ஏறத்தாழ 1000 இளம் பெண்கள் பிரிமியர் மில்லில் சுமங்கலித் திட்டம் என்ற பெயரில் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து வறுமையிலுள்ள கிராமப்புற இளம் பெண்கள், தரகர்கள் மூலம் பிரிமியர் மில்லில் வேலைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒரு சிறிய அறைக்குள் எவ்வித அடிப்படை வசதியுமின்றி இவர்களை அடைத்து வைத்து ஓய்வின்றி தினமும் 16 மணி நேரத்துக்கு மேல் வேலை வாங்குகின்றனர். ஓய்வில்லாமலும், தூக்கமின்மையாலும் இயந்திரங்களில் கைகள் சிக்கி ஊனமான பெண்களோ பல நூறு பேர். பிரிமியர் மில்லின் கொடுமை தாங்காமல் நள்ளிரவில் சுவரேறிக் குதித்து தப்பியோடிய பெண்கள் பல நூறு பேர். இக்கொத்தடிமை முறையால் கொழுத்த இலாபமடைந்துள்ள பிரிமியர் மில் நிர்வாகம், இதனாலேயே 700-க்கும் மேற்பட்ட நிரந்தரத் தொழிலாளிகளைச் சட்டவிரோதமாக வேலை நீக்கம் செய்துள்ளது.

பிரிமியர் மில் மட்டுமல்ல, செஸ்லேண்டு மில், ரமா குவாலி டெக்ஸ், ஈ.ஆர். டெக்ஸ்டைல்ஸ் முதலான பல நூற்பாலைகளிலும் இதேபோன்று ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் கொத்தடிமைகளாக உழல்கின்றனர். சுமங்கலித் திட்டம் என்ற பெயரில் பெற்றோரிடம் ரூ. 30,000 முதல் ரூ. 40,000 வரை கொடுத்துவிட்டு, 3 ஆண்டுகளுக்கு கிராமப்புற இளம் பெண்களைக் கொத்தடிமைகளாக வைத்துச் சுரண்டிக் கொழுக்கத் தமிழக அரசே பச்சைக் கொடி காட்டியுள்ளதால், முதலாளிகளின் கொள்ளையும் கொடூரமும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது.

ஓராண்டுக்கு முன் கரூரிலுள்ள ஒரு நூற்பாலையில் சுமங்கலித் திட்டத்தின் கீழ் கொத்தடிமைகளாக்கப்பட்ட பல பெண்கள், அந்த ஆலையின் நிர்வாகிகள், கண்காணிப்பாளரின் பாலியல் வல்லுறவினால் எச்.ஐ.வி. எனும் எயிட்ஸ் நோய் கிருமி அவர்களது உதிரத்தில் பரவி பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகவல் மெதுவாகக் கசிந்து உள்ளூர் மக்களின் போராட்டத்தால் அந்த ஆலையை அரசு மூடியது. ஆனாலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

தொடரும் இக்கொடுமைகளை அம்பலப்படுத்தியும், இளம் தொழிலாளி கிருஷ்ணவேணியின் மரணத்துக்குக் காரணமான பிரிமியர் மில் முதலாளியையும் நிர்வாகிகளையும் கைது செய்து தண்டிக்கக் கோரியும், இளம்பெண்களைக் கொத்தடிமைகளாக்கும் சுமங்கலித் திட்டத்தை ரத்துச் செய்யக் கோரியும், கிருஷ்ணவேணியின் பெற்றோருக்கு அரசு சார்பில் நட்டஈடு தரக் கோரியும் துண்டுப் பிரசுரம், சுவரொட்டி மூலம் ஒசூர் வட்டாரமெங்கும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி விரிவாகப் பிரச்சாரம் செய்தது. அதன் தொடர்ச்சியாக பிரிமியர் மில்லில் பணியாற்றி வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களையும், இதர நூற்பாலைத் தொழிலாளர்களையும் அணிதிரட்டி 18.9.08 அன்று மாலை பாகலூர் சர்க்கிள் அருகே எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. ஓட்டுக் கட்சித் தொழிற்சங்கங்கள் அனைத்தும் முடங்கிக் கிடந்த நிலையில், இளம் தொழிலாளியின் சாவுக்குக் காரணமான கொத்தடிமைக் கொடூரத்துக்கு எதிராக வர்க்க உணர்வோடு நடந்த ஆர்ப்பாட்டம், தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் போராட அறைகூவி அழைத்தது.

**– பு.ஜ. செய்தியாளர்கள், ஒசூர்.**




**இளம் பெண் கிருஷ்ணவேணியின் படுகொலையைக் கண்டித்து பாகலூரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கண்டன முழக்கமிடும் பு.ஜ.தொ.மு. செயலர் தோழர் சங்கர். (உள்படம்) கிருஷ்ணவேணி.**


படிப்பகம்

www.padippakam.com

**PUTHIYA JANANAYAGAM** (Tamil Monthly) **PUBLISHED ON 1st OF EVERY MONTH**
**REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85**
**Regd. No: TN/CC(S)Dn/190/06-08** Licenced to Post without pre-payment WPP No: **TN/PMG/CCR/WPP-562/06-08**

# இது என்ன நீதி?



கோவை குண்டு வெடிப்பு வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற முசுலீம்களை விடுதலை செய்யக் கோரி அவர்களது உறவினர்கள் கோவை சிறைச்சாலை முன்பு நடத்திய மறியல் போராட்டம்.

அண்ணா நூற்றாண்டு தொடக்க விழாவையொட்டி, செப்.15, 2008 அன்று தமிழகச் சிறைகளில் முழுமையாய் எட்டாண்டு காலம் தண்டனையைக் கழித்த 1,405 கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு, விடுதலை அளிக்கப்பட்டுள்ளது. கோவை குண்டு வெடிப்பு உள்ளிட்டுப் பல்வேறு 'பயங்கரவாத'ச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பத்தாண்டுகளுக்கும் மேலாக தண்டனை அனுபவித்து வரும் 71 முசுலீம்களில் ஒருவர்கூட இந்த விடுதலைப் பட்டியலில் இருந்து விடக் கூடாது என்பதில் 'மதச்சார்பற்ற' தி.மு.க. அரசு அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது.

இதற்கு முந்தைய இரண்டு அண்ணா பிறந்தநாள் விழாக்களின் போது (2006,2007 செப்.15) பத்தாண்டு காலம் தண்டனை அனுபவித்து விட்ட 590 கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட நிகழ்வுகளிலும், எந்தவொரு முசுலீம் 'பயங்கரவாதி'க்கும் விடுதலை கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த மதுரை மாநகராட்சி உறுப்பினர் லீலாவதியைக் கொன்ற, தி.மு.க.வைச் சேர்ந்த அரசியல் ரவுடிகளுக்குக் கூடப் பொது மன்னிப்பு வழங்கியுள்ள கருணாநிதி அரசு, ''பயங்கரவாதக் குற்றங்கள், அரசுக்கு எதிரான குற்றங்களில்'' ஈடுபட்டுத் தண்டனை அடைந்தவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்குவதில்லை என்ற மொன்னையான காரணத்தைக் கூறி, முசுலீம் கைதிகள் விடுதலையடைவதைத் தடுத்து விட்டது.

முசுலீம் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குவதில்தான் இப்படி பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதில்லை. நீதிமன்ற விசாரணை, பிணை வழங்குவது, பரோல் வழங்குவது உள்ளிட்டு, முசுலீம் கைதிகளுக்குச் சட்டப்பூர்வமாக வழங்க வேண்டிய உரிமைகள் அனைத்துமே நீதிமன்றங்களாலும், அதிகார வர்க்கத்தாலும் மறுக்கப்படுகின்றன.

- ஆயுள் தண்டனை தரப்பட்ட கைதிகளுக்கு ஒன்றரை ஆண்டுகள் கடந்தால் பரோல் வழங்கலாம் எனச் சட்டம் அனுமதித்தாலும், முசுலீம் ஆயுள் தண்டனை கைதிகள் 10 ஆண்டு காலம் சிறையில் கழித்த பிறகும் அவர்களுக்கு பரோல் வழங்கப்படுவதில்லை.

- கோவை குண்டு வெடிப்பு வழக்கில் 13 ஆண்டுகள் தண்டனை பெற்று, பதினொன்றரை ஆண்டுகள் சிறையில் கழித்துவிட்ட முசுலீம்களுக்குப் பிணை வழங்கக்கூட சென்னை உயர்நீதி மன்றம் மறுத்துவிட்டது.

- குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட குணங்குடி ஹனீபா உள்ளிட்ட ஏழு முசுலீம்கள் கடந்த பத்தாண்டுகளாக விசாரணைக் கைதிகளாகத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். பத்து ஆண்டுகள் ஓடிய பிறகும் இவ்வழக்கில் இன்னும் குற்றச்சாட்டே வனையப்படவில்லை. 90 நாட்களுக்குள் குற்றச்சாட்டு வனையப்படவில்லை என்றால், குற்றஞ்சாட்டப்பட்டோருக்கு பிணை வழங்கலாம் எனச் சட்ட நடைமுறை இருந்தும், இந்த உரிமை இவர்களுக்குத் திட்டமிட்டே மறுக்கப்படுகிறது.

முசுலீம் கைதிகளுக்கு இயற்கையான நீதி மறுக்கப்பட்டு வருவதற்கு, இதுபோன்று பல எடுத்துக்காட்டுக்களைக் கூறிக் கொண்டே போகலாம். தமிழகத்தில் இந்து ராஷ்டிரத்தை அமைப்பதற்கு, பா.ஜ.க.வோ, அ.தி.மு.க.வோ ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற அவசியமில்லை. அந்தத் திருப்பணியை சூத்திர தி.மு.க. அரசே செய்து முடித்து விடும் போலும்!

படிப்பகம்